பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 08 செவ்வாய்க்கிழமை (24-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:273

### இனப்பிரச்சினை தொடர்பாக

# தீர்க்கமான முடிவை எடுக்குமாறு அரசுக்கு ஐ.தே.கட்சி வலியுறுத்து

## நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் ஒரேகுரலில் பேசும்படி கோரிக்கை

கொழும்பு,ஓகஸ்ட்24

**நாடு எதிர்நோக்கியிருக்கும் மோசமான நிலையை - தற்போதைய நிலைமையை - கவனத்தில் எடுக்குமாறு அரசைக் கோருகின்றோம். தனக்குள்ள உபாயங்கள், வழிமுறைகள் குறித்து சிறந்த மனதோடு ஆளும் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுடன் கலந்துரையாடி நாட்டின் பாதுகாப்புத் தேவையை நிறைவு செய்யும் ஒரு முடிவுக்கு அரசு வரவேண்டும். அதற்கு மேல், நம்பிக்கையை ஏற்படுத்தும் ஒரே குரலில் அரசு பேசவேண்டும்.**

**- இவ்வாறு அரசைக் கோரியிருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.**

**உறுதியற்ற நிலைமையை எதிர்நோக்கியிருக்கும் நமது நாட்டுக்காக - இந்த இக்கட்டான வேளையில் - எமது குறுகிய வேறுபாடுகளைத்துறந்து, சேர்ந்து ஒன்றாக எழுவோம். மக்கள் எங்கள்மீது வைத்த நம்பிக்கைக்கும் உறுதிக்கும் பாத்திரமாக நடந்துகொள்வோம் என்றும் அழைப்பு விடுத்திருக்கிறது அக்கட்சி.**

"சமாதான நடவடிக்கைகள் மற்றும் இடைக காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள்" ஆகியவை தொடர்பான தனது நிலைப்பாட்டை விளக்கும் நீண்ட - உத்தியோகபூர்வ - அறிக்கை ஒன்றை ஐ.தே.கட்சி நேற்று வெளி யிட்டது.

அண்மைக்கால படுகொலைச் சம்பவங்கள் குறித்து கவலை தெரிவித்துள்ள ஐ.தே.கட்சி, ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் மற்றும் கந்தசாமி ஐயர் பாலநடராஜா ஐயர் ஆகியோரின கொலை போன்ற வன்செயல் போக்கு சமாதான நடவடிக்கைகளின் ஸ்திரத்தன்மைக்கும், முன் நகர்வுக்கும் பெரும் தீங்கு விளைவிக்கும் என அச்சம் தெரிவித்தது.

முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட விதத்தின் பின னணிகளை இந்த நீண்ட அறிக்கை விவரமாகப பிரதிபலித்தது.

2003 ஒக்ரோபர் 31ஆம் திகதி இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை புலிகள் வெளியிட்ட நான்கு மணி நேரத்துக் குள்ளேயே அது குறித்த தனது நிலைப்பாட்டை ஐ.தே.கட்சி வெளிப்படுத்தியதை நினைவுபடுத்திய அந்த அறிக்கை, அப்போதைய அரசின் நிலை

(16ஆம் பக்கம் பார்க்க)

## வெடியோசையால் பரபரப்பு; பீதி

யாழ்ப்பாணம்,ஓக.24

யாழ்நகரின் கரையோரப்பகுதியில் நேற் றிரவு 9.15மணியளவில் திடீரெனக் கிளம்பிய வெடிச்சத்தங்கள் கேட்டதையடுத்து பொதுமக்கள் பீதியடைந்தனர். யுத்த அச்சம் காரணமாகச் சில குடும்பங்கள் இடம்பெயரவும் தயாராகின என்று கூறப்படுகிறது.

ஆனாலும் தேவாலயம் ஒன்றில் இடம்பெற்ற வாணவேடிக்கையால் எழுந்த வெடிச்சத்தமே அது என்று தெரிய வந்தபின் அவர்கள் நிம்மதியடைந் தனர். (ஓ)

## புறுஹொவ்டே தமிழ்ச்செல்வனை நாளை சந்திப்பார்

கிளிநொச்சி,ஓக.24

கிழக்கில் வீடுதலைப் புலி உறுப்பினர்கள் மீது மீண்டும் தாக்குதல் இடம் பெற்றுள்ளதால் எழுந்துள்ள நிலைமை தொடர்பாகப் பேச்சு நடத்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வின் தலைவர் ஜெனரல் ரொண்ட் புருஹொவ்டே நாளை கிளிநொச்சி வருகின்றார்.

நாளை காலை 10 மணிக்கு வரும் அவர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர் மீது வாழைச்சேனையில் சூடு!

வாழைச்சேனைப் பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரா ணுவ சிப்பாய் காயமடைந்தார். பொலநறுவை வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார் என்று இராணுவத்தரப்பு தெரிவித்தது.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12.10 மணி யளவில் இடம்பெற்றுள்ளது. வாழைச்சேனை காயங்கேணி பகுதியில் நடை ரோந்தில் ஈடுபட டிருந்த இராணுவத்தினர் மீதே துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் உறுதிப்படுத்தினார்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் கறுப்பு நிற சீருடை அணிந்திருந்தனர் என இராணுவத் தலைமையகம் தெரிவித்தது. குறிப்பிட்ட இடத் தைச் சோதனையிட்டபோது அவ்விடத்தில் விடு தலைப் புலிகள் அணியும் அடையாளக் குறி யீட்டுத் தகடும், இரண்டு தொப்பிகளும் இருந்தன என இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

சூட்டுக்காயத்துக்கு இலக்கான சமன்குமார என்ற சிப்பாய் பொலநறுவை வைத்தியசாலை

(16ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் பாவா, யோகா கொலைக்கு இலங்கை இராணுவத்தினரே பின்னணி!

கொழும்பு,ஓக.24

மட்டக்களப்பு காயங்கேணியில் கடந்த வெள் ளியன்று புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல் நிர்வாகப பொறுப்பாளர் பாவா, மட்டு. - அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்க ளின் தொடர்பாளர் யோகா ஆகியோர் கிளை மோர்த் தாக்குதலில் கொல்லப்பட்டதற்கு இலங்கை இராணுவத்தின் மீது விடுதலைப் புலிகள் குற் றம் சுமத்தியிருக்கின்றார்கள்.

இலங்கை கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புருஹொவ் டேக்கு தாம் அனுப்பிவைத் துள்ள ஒரு கடிதத் திலேயே புலிக ளின் அரசியல் துறைப் பொறுப்பா ள் சு.ப.தமிழ்செல் வன் இவ்வாறு குற் றம் சுமத்தியிருக் கின்றார். இராணு வத் தடை நிலை யில் புலிகள் தங்களின் பெயர், விவரங்களை வழமைபோல பதிவு செய்துவிட்டு புறப்பட்டதும், தடை நிலைக்கு அருகில் இத்தாக்குதல் நடத்தப் பட்டிருப்பதைத் தமது கடிதத்தில் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.



அந்த இடத்துக்குப் புலிகளின் போராளிகள் செல்வதற்கு சற்றுமுன்னர், அவ்வழியே 'ஹெல்மட்'

(16ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வல்வை வாசிக்கு 15 வருடச் சிறை!

கொழும்பு,ஓக.24

தற்கொலைக் குண்டுதாரி அணியும் வெடி மருந்து நிரப்பப்பட்ட அங்கி ஒன்றை வைத்திருந் தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவா தத் தடைச் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடரப் பட்ட குடும்பஸ்தர் ஒருவருக்கு 15 வருட கடூழி யச் சிறைத்தண்டனை விதித்து வெலிக்கடை விசேட நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆறுமுகம் கனகரத்தினம் (வயது-54) என்ற மூன்று பிள்ளை களின் தந்தை 1999ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் திகதி வெடிமருந்து நிரப்பப்பட்ட தற் கொலை அங்கி ஒன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டார். இவர் மீது அவசரகாலச்சட்டத்தின் கீழ் வழக் குத் தொடரப்பட்டிருந்தது. இவர் கடந்த 5 வரு டங்கள், 7மாதகாலம் களுத்துறைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கில் அவரது குற்ற ஒப்புதல் வாக்குமூலமும் தற்கொலை அங்கியும் சான்றுப் பொருள்களாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

இந்த வழக்கு விசாரணை ஆரம்பத்தில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரா ஏக்க நாயக்க முன்னிலையில் நடைபெற்றது.

எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை விசாரணைக்கு ஏற்பதா? இல்லையா? என்பது குறித்துப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இறுதி யில் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்கலாம் என்று நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

அதன்பின் புதிதாக உருவாக்கப்பட்ட வெலிக் கடை விசேட நீதிமன்றத்தில் விசேட நீதிபதி என்.எஸ்.ராஜபக்ஷ முன்னிலையில் விசாரணை இடம்பெற்றது

விசாரணையின்போது அரச தரப்புத் தெரிவித ததாவது:-

கொழும்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர், எதிரி தொடர்பான தகவல்களை

(16ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவுக்கு அதிகாரங்கள் வழங்குவது குறித்து ஆராயப்படுகின்றது

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

வவுனியா,ஓக.24

போர்நிறுத்த உடன்படிக்கை இடையிடையே மீறப்படுகிறது. இதுதொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குப் பலமுறை முறை யீட்டுள்ளோம் ஆனால், அவர்களுக்கு அது தொடர் பாக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் இல்லை. எனவே, அவர்களுக்கு அதிகாரம் வழங்குவது தொடர்பாக அல்லது அதற்கான மாற்றுவழி ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பது பற்றி ஆராய்ந்து வருகின்றோம்.

- இவ்வாறு நேற்றுக்காலை வவுனியா இரா ணுவ தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டத் தில் பொதுமக்கள், பாதுகாப்பு, சட்டம், சமாதான விவகார, பௌத்தசாசன அமைச்சரும், பதில் பாதுகாப்பு அமைச்சருமான ரத்னசிறி விக்கிரம

(16ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் கொலை!

கொழும்பு,ஓக.24

கொழும்பு வெள்ளவத்தை ஈ.ஏ.கூரே மாவத் தையில் வைத்து தமிழ் இளைஞர் ஒருவர் நேற் றிரவு 10 மணியளவில் இனம் தெரியாதவர்க ளால் சுட்டுக்கொல்லப்பட்டார். குகன் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டார் என்று முதலில் வெளியான செய்திகள் தெரிவித்தன. (ஒ)

## எலும்புக் கூடுகள் கண்டுபிடிப்பு

வவுனியாவில் சிதம்பரபுரம் அகதிமுகா மிற்கு அருகில் இரு மனித எலும்புக் கூடுகள் நேற்று மதியம் பொலீஸாரினால் கண்டுபிடிக் கப்பட்டன. அவற்றுக்கு அருகில் பெண் ஒரு வரின் ஆடைகளும் கருகிய நிலையில் மீட்கப் பட்டன.

சிதம்பரபுரம் அகதிமுகாமில் இருந்த பெண் ஒருவர் எட்டு மாதங்களுக்கு முன்னர் காணாமற்போயிருந்தார். கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் ஒன்று அந்தப் பெண்ணினுடை யதாக இருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ஒ-164)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



'தாய்மடியின் தாலாட்டு' ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் சி.யோகநாதன், யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடப் பேராசிரியர் எஸ்.கந்தசாமி, துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, பாடலாசிரியர் செங்கதிர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினரையும், ஒலிப்பேழையின் முதற்பிரதியை பேராசிரியர் எஸ்.கந்தசாமி வெளியிட துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# 'தாய்மடியின் தாலாட்டு' ஒலிப்பேழை நேற்று வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக.24

எல்லைப்படை மாவீரர்கள் ஞாபகார்த்தமாக தமிழீழ விடியல் இசைக்குழுவின் தயாரிப்பில் உருவான 'தாய்மடியின் தாலாட்டு' என்னும் ஒலிப்பேழை நேற்று வெளியிடப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் ப.பகீரதன் தலைமையில் வெளியீட்டு விழா இடம்பெற்றது. இதில் தமிழீழ தேசியக் கொடியினை நல்லூர் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூமகள் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரினை யாழ்பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட தொழிற் சங்கங்களின் பொறுப்பாளர் இமையவன், மாவீரா களான கப்டன் காளிக்குட்டி, லெப்.கண்ணன் ஆகியோரின் தாயார் திருமதி சதாசிவம் கமலா தேவி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அகவணக்கம், மலரஞ்சலி என்பவற்றைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதில் சிறப்புரையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனும், ஒலிப்பேழையின் வெளியீட்டுரையை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம் பரிதியும், மதிப்புரையை பிரபல எழுத்தாளர் செ.யோகநாதனும் நிகழ்த்தினர்.

ஒலிப்பேழையின் முதற்பிரதியை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடப் பேராசிரியர் என். கந்தசாமி வெளியிட்டுவைக்க யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகன தாஸ் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட துணை அரசியல்துறைப பொறுப்பாளர் சி.செம்மணன் வழங்கினார்.

(ஒ-5,86)

# கல்முனை, காரைதீவில் நேற்றும் ஹர்த்தால்!

கல்முனை,ஒக.24

மட்டக்களப்பு, காயங்கேணி தாக்குதலில் உயிரிழந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா மற்றும் யோகா ஆகியோரின் படுகொலைகளைக் கண்டித்து நேற்றுத் திங்கட கிழமை கல்முனை, காரைதீவு ஆகிய இடங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனை, காரைதீவுப் பகுதிகளில் அரச, தனியார் வங்கிகள் உட்பட வர்த்தக நிலை யங்கள் மற்றும் கடைகள் யாவும் மூடப்பட்டி ருந்தன. பாடசாலைகளும் இயங்கவில்லை. அரச காரியாலயங்கள் எவையும் திறக்கப்படவில்லை.

கல்முனை - அக்கரைப்பற்று, கல்முனை - மட்டக்களப்புப் பிரதான வீதிகளில் அதிகாலை வேளையில், டயர்களும், உமி மூடைகளும் எரிக்கப்பட்டிருந்தன. பின்னர் அவற்றை பாது காப்புப் படையினர் அகற்றினர்.

பொலீஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடு பட்டிருந்தனர். எந்தவித அசம்பாவிதச் சம்பவங் களும் இடம்பெறாதவாறு கல்முனை நகரிலுள்ள பிரதான இடங்களில் பெருந்தொகையான பொலீ ஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (க)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஒக.24

தீவகக் கல்வி வலயக் குடும்பப் பாடசாலை கள் மட்டத்திலான செயல்நிலை ஆய்வுச் செய லமர்வு நாளை புதன்கிழமை முதல் ஐந்து நாள் களுக்கு வழமையான செயலமர்வு நிலையங் களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பாடசாலை ஆரம்பக் கல்வி ஆசி ரியர்களை தவறாது இச்செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஸ்ரனிஸ்லாஸ் அறிவித்துள்ளார்.

(ஒ-9)

திருகோணமலையில் கடத்தப்பட்ட

# ஊர்காவலர்களை மீட்டுத்தருமாறு கோரி கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்குள் கலாட்டா

கொழும்பு,ஒக.24

திருகோணமலை கோமரசன் குளம் பகுதி யில் கடத்திச் செல்லப்பட்டவர்கள் என்று கூறப் படும் இரண்டு ஊர்காவல் படையினரையும் மீட் டுத் தருமாறு கோரி ஐம்பதுக்கும் மேற்பட்ட வர்கள் திருகோணமலையில் உள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத துக்குள் புகுந்து நேற்றுக் கலாட்டாவில் ஈடுபட்டனர்.

கடந்த 12 ஆம் திகதி கோமரசன் குளம் பகுதியில் மீன் லொறியில் சென்றுகொண்டிருந்த ஐந்து மீனவர்களும் இரண்டு ஊர்காவற் படையி னரும் ஆயுதக் குழுவொன்றால் கடத்தப்பட்ட னர். பின்னர் மீனவர்கள் விடுவிக்கப்பட்டபோதும் ரி-56 ரக துப்பாக்கிகளுடன் கடத்திச் செல்லப் பட்ட ஊர்காவற் படையினர் விடுவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை விடுதலைசெய்யக் கோரி நேற்று திருகோணமலை மணிக்கூட்டு கோபுரத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட ஒரு குழுவி னர் முற்பட்டனர். பாதுகாப்புப் படையினர் அதற்கு இடமளிக்கவில்லை.

பின்னர் அவர்கள் வாகனங்களில் ஏறி கண காணிப்புக் குழுவின் அலுவலகத்துக்குச் சென்று எவ்வித முன்னறிவித்தலும் இன்றி உட்புகுந்து கலாட்டாவில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட டது.

காணாமற்போன ஊர்காவற் படைச் சிப்பாய் கள் பற்றித் தாம் விசாரணை மேற்கொண்டு மூன்று நாள்களுக்குள் உரிய பதில் தருவார் கள் என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவி னர் தெரிவித்தனர் எனக் கூறப்பட்டது. (க)

## 'முனைப்புடன் எழு' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஒக.24

ஜேர்மனியிலிருந்து வருகைதந்துள்ள திரு மதி நகுலா சிவநாதனின் 'முனைப்புடன் எழு' புலம்பெயர் கவிதை நூல் வெளியீட்டு விழா, நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நூல் வெளியீட்டு ரையை வலிகாமம் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் நூலின் ஆய்வு ரையை பலாலி ஆசிரியர் கலாசாலை முதல்வர் அதிபர் சோமத்மநாதன், யாழ் பல்கலை விரிவுரை யாளர் ஈ.குமரன் மற்றும் தமிழ்ச் சிறப்புக்கலை மாணவன் இ.காண்டீபன் ஆகியோரும் நிகழ்தத வுள்ளனர்.

(ஒ-9)

# ஆள்கொணர்வு மனுவிசாரணை; ஆஜராக அதிகாரிக்கு அவகாசம்

யாழ்ப்பாணம்,ஒக.24

குடாநாட்டில் 1995 - 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனவர் என்று கூறப்படும் மாணவர் ஒருவர் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆள் கொணர்வு மனுமீதான விசாரணைக்கு ஆஜராக படை அதிகாரியான எதிர்மனுதாருக்கு யாழ். மேல் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியது.

கொடிகாமம் எருவன் பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை உதயகுமார் என்ற மாணவன் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு மீதான விசாரணை யாழ். மேல் நீதிமன்ற நீதி பதி கே.பி.எஸ்.வரதராஜா முன் நேற்று நடந்தது.

இந்த மனுவில் எருவன் இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியாக அக்காலப்பகுதியில் பணி யாற்றிய கப்டன் ரஞ்சன் மகிந்த ரத்ன முதல் எதிர் மனுதாரராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். இவா சார்பில் இராணுவச் சட்ட ஆலோசகர் குறூப்பு ஆஜரானார். அப்போது பிரஸ்தாப இராணுவ அதிகாரியின் கடிதம் ஒன்றை குறூப்பு நீதிபதியி டம் சமர்ப்பித்தார்.

'தாம் சிறுநீரகச் சத்திர சிகிச்சைக்கு உட் படுத்தப்படவிருக்கின்றார் என்றும் -

எனவே, நீதிமன்றத்தில் ஆஜராகப் போதிய அவகாசம் ஒன்றை வழங்குமாறு கோருகின்றார்' என்றும் - முதல் எதிர்மனுதாரர் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து இந்த வழக்கை ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

(ஒ-3-5)

# சச்சு மாஸ்ரர் கொலை வழக்கில் சந்தேக நபரிடம் வாக்குமூலம்

மட்டக்களப்பு,ஒக.24

மட்டக்களப்பு சிறைச்சாலையில் சச்சு மாஸ்ரர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக் கப்பட்டுள்ளவரான மகேந்திரன் புவிதரனிடம் சிறைச்சாலையில் வைத்து வாக்குமூலம் பெறு வதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு நீதி மன்றம் அனுமதிவழங்கியுள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் எம்.ஐ.அஜ்மின் முன் னிலையில் இந்த வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றது.

பிரஸ்தாப சந்தேக நபரிடம் இருந்து வாக்கு மூலம் பெறுவதற்கு அனுமதி கோரி குற்றப்புல னாய்வுப் பிரிவினர் அப்போது மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

பிரஸ்தாப நபர் தடுத்துவைக்கப்பட்டுள்ள மொனறாகல சிறைச்சாலையில் வைத்து இன்று முதல் எதிர்வரும் 28ஆம் திகதிக்குள் அவரி டம் வாக்குமூலத்தைப் பதியும்படி நீதிவான் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதி வழங் கினார்.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி மொன ராகல சிறைச்சாலை அத்தியட்சகருக்கும் நீதி வான் உத்தரவிட்டார்.

மொனறாகலை சிறைச்சாலையில் வைக்கப் பட்டுள்ள சந்தேகநபர் பாதுகாப்புக் காரணங்களுக காக நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட வில்லை.

(ஒ-3)

# யாழ்.பஸ் நிலையச் சூட்டுச் சம்பவ வழக்கு; இடம் மாற்றுவது குறித்து விசாரணை

கொழும்பு,ஒக.24

யாழ். பஸ் நிலையத்தில் இடம்பெற்ற துப் பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து படையின ருக்கு எதிராக யாழ். நீதிமன்றத்தில் தொடரப் பட்ட வழக்கை கொழும்புக்கு மாற்றுமாறுகோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீது ஆட்சேபனை களைச் சமர்ப்பிக்க சட்டமா அதிபருக்கு அவகா சம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பஸ் நிலையத்தில் வைத்து கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி இரு பொதுமக்களைச் சுட்டுக் காயப்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் மூன்று படையினருக்கு எதிராக யாழ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் பட்டிருந்தது.

இந்த வழக்கை கொழும்பு நீதிமன்றத்துககு மாற்றும்படி கோரி சந்தேக நபர்கள் சார்பில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இதையடுத்து, இந்த வழக்கு விசாரணையை இடைநிறுத்துமாறு யாழ் நீதிமன்றம் கேட்கப்பட் டிருந்தது.

இந்த மனுமீதான விசாரணை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான டி.ஜே.டி.எஸ்.பாலபட்டபென்டி, ஜே.எஸ்.ஐ. இமாம் ஆகியோர் முன் நேற்று நடந்தது.

நீதிமன்றில் ஆஜரான அரச சட்டவாதி தமது தரப்பு ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க அவகா சம் கோரினார். இதை ஏற்று வழக்கை ஒக்ரோபர் 11ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

இந்த வழக்கில் சாட்சியான மேற்படிச் சம் பவத்தில் காயமடைந்தவரான திருநாவுக்கரசு துரைச்செல்வம் சார்பில் ஆட்சேபனையைச் சமர்ப் பிக்க மனித உரிமைக்கும் அபிவிருத்திக்கு மான நிறுவனத்தின் சட்டத்தரணிகள் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

(ஒ-3)

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் திங்கட்கிழமை, ஒகஸ்ட் -23-2004

| சந்தைப்புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1389.95 | 1378.27 | 11.68 | 0.85 |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2080.31 | 2067.79 | 12.52 | 0.61 |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) ASTRI - அனைத்துப் பங்குகள் | 1437.53 | 1425.45 | 12.08 | 0.85 |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2160.15 | 2147.14 | 13.01 | 0.61 |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 197.50 | 265.70 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 14.00 | 9.20 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 3186.00 | 2474.00 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 340.40 | 337.60 | | |

இன்றைய பங்கிலாப அறிவித்தல்கள்

| கம்பனி பெயர் | பங்கிலாபம் (%) | XDதிகதி | பணம் செலுத்துகை |
|---|---|---|---|
| சென்ரல் செக்கியூரிடீஸ் | 12.5% | முதலும் கடைசியும் | திகதி பின்னர் அறிவிக்கப்படும் |

*குறிப்பு: நி.ச.இ.விலை - குறித்த திகதியில் உரிமைப் பங்கு வழங்கலோ போனஸ் வழங்கலோ இடம்பெறவில்லை.

உதயன்

## தனது நிலையை அரசு பகிரங்கப்படுத்துமா?

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குக் காலத்துக் காலம் பல யோசனைகளைத் சிங்களத் தரப்பு முன்வைத்ததும் -

தான் உடன்பாடு கண்ட இணக்கங்களையே சிங்கள அரசுகள் பின்னர் கிழித்து எறிந்ததும் -

இந்த நாட்டின் சரித்திரச் சங்கதிகள்.

இந்த வகையில் பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா உடன்பாடு என்று ஒரு பட்டியலே நீளும்.

காலத்துக்குக் காலம் தாங்கள் முன்வைத்த யோசனைகள் மற்றும் தீர்வுத் திட்டங்களில் இருந்து சிங்களப் பேரினவாதம் 'குதகுக்கரணம்' அடித்த வரலாற்றின் பெறுபேறுதான் இந்த இனப்போர்; உள்நாட்டு யுத்தம்.

இவ்வாறான 'குத்துக்கரணங்களை' அடையாளம் காண்பதற்கு ஆக முந்திய - பல தசாப்த காலங்களுக்கு முந்திய - சம்பவங்களைத் தேடிப்போகத் தேவையில்லை. இப்போது ஆட்சிக்கட்டிலில் இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் போக்கே நல்லதோர் உதாரணம்தான்.

1997 ஒகஸ்டில் அவரது அரசு விடுதலைப் புலிகளுடன உக்கிர யுத்தம் நடத்திக் கொண்டிருந்த சமயமே இனபபிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டம் ஒன்றை அவர் தன்னுடைய பாட்டில் வெளியிட்டார். இப்போது ஐ.தே.முன்னணியில் இந்த விடயங்களைக் கையாளும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அப்போது அவரது அமைச்சரவையில் இந்த விவகாரங்களைக் கையாளும் முக்கிய அமைச்சராக இருந்தார் என்பது பலருக்கும் நனைவிருக்கலாம். இத்திட்டத்தைத் தயாரிப்பதில் அமரர் கலாநிதி நீலன் திருச்செல்வமும் பங்காற்றினார் என்றும் ஒரு பேச்சு உண்டு.

சுமார் ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த யோசனைகள் குறித்துத் தனது பேட்டி ஒன்றில் கருத்து வெளியிட்டிருந்த புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், 'இந்த யோசனை உள்ளதற்குள் வள்ளிசாக இருந்தது' என்று சிலாகித்துக் கூறியிருந்தார் என்பதும் கூட கவனிக்கத்தக்கது.

ஆனால், அந்த யோசனைகளுக்குக் கடைசியாக என்ன நடந்தது?

தமிழர் தரப்போடு அந்த யோசனைகள் குறித்து ஆராயாமலேயே - ஆராய முன்னரே - சிங்களத் தரப்புக்குள் நடந்த 'முட்டி மோதல்கள்' காரணமாக - கழுதை தேய்ந்து கட்டெறும்பான' கதையாயிற்று அந்த ஆலோசனைகளின் நிலைமை.

2000ஆம் ஆண்டில் ஒருதலைப்பட்சமாக அரசமைப்புத் திருத்த நகல் வடிவமாக அதை சந்திரிகா அரசு வெளிக்கொணர்ந்தபோது அது, 'உலக்கை தேய்ந்து உளிப்பிடி' ஆனதுபோல வெறும் 'சக்கை'யாக வெளிவந்தது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக சிங்களத் தரப்புகளில் இருந்து வந்த யோசனைகளின் நோக்கும் போக்கும் இப்படித்தான் இருந்தன என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

2002 பெப்ரவரிக்குப் பின்னர் இலங்கை அரசோடு தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற அந்தஸ்துடன் விடுதலைப் புலிகள் பேச்சு நடத்த முற்பட்ட பின்னரும் இந்தக் கதையே தொடர்ந்தது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்பட்ட ஐந்து தசாப்தகாலப் பேச்சு முயற்சிகளின் பட்டறிவை நன்கு புரிந்துகொண்ட தமிழினம் இந்தத் தடவையும் இறுதித் தீர்வு குறித்துப் பேசி மேலும் ஒரு தசாப்த காலத்தை இழுத்தடிப்பதை விடுத்து, மக்களின் உடனடிப் பிரச்சினையை - அன்றாட வாழ்வாதாரச் சிக்கல்களை - தீர்ப்பதற்கான இடைக்கால நிர்வாகத்தை இறுதி செய்வோம் என்ற விடாப்பிடி நிலையை புத்தி சாதுரியமாக முன்வைத்தது.

அதற்கு ஒரு யோசனையை - தீர்வுத் திட்டத்தை - முன்வைப்பதிலும் கூட அரசுத் தரப்பிலிருந்து இழுத்தடிப்புகள், அதையும் தாண்டி அரைகுறைத் திட்டங்கள், பயனற்ற யோசனைகள் என்று பல்வேறு சாக்குப் போக்குகள்.

அதனால் தான் தமிழர் தரப்பு இவை எல்லாவற்றுக்கும் மாற்றாக தன்னால் இணங்கக்கூடிய - இசையக்கூடிய - ஓர் இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை யோசனையை முன்வைத்தது.

அதற்கும் ஒரு பதில் யோசனை சமர்ப்பித்து அந்த முயற்சியையும் மழுங்கடிக்க சிங்கள அரசு முனைகின்றது. ஆனால், அந்த அரசுடன் கூட்டுச் சேர்ந்துள்ள சிங்களப் பேரினவாதமோ - பௌத்த தீவிரவாதமோ - இதற்கும் மேலே போய் இடைக்கால நிர்வாகம் குறித்தே பேசக்கூடாது என்று பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டுள்ளது.

'இறுதித் தீர்வு குறித்து மட்டுமே புலிகளோடு அரசு பேசவேண்டும். இடைக்கால நிர்வாகம் என்ற கதையே எடுக்கக்கூடாது' - என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கூட்டரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. அடித்துக் கூறிவிட்டது.

இனி என்ன செய்யப் போகின்றார் ஜனாதிபதி?

அமைதி முயற்சிகளை முன்நகர்த்துவதற்கு விடுதலைப் புலிகளும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. முன்னணியும் தான் காரணம் என்று 'குறைகூறி' குற்றம் அடுக்கி வரும் ஜனாதிபதி, இதற்குப் பின்னரும் தனது அரசு இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்கு வழங்குவதற்கு - முழுப் பலத்தோடு - முழு இணக்கத்தோடு - முழுத் தயாரோடு - உள்ளதா என்பதை பகிரங்கமாக உறுதிப்படுத்துவாரா?

# பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களுக்கு விரைவில் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஓக.24

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மேலதிகமாகக் கடமையாற்றி வரும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பாக யாழ்.கல்வி வலயம் ஆராய்ந்து வருகின்றது.

ஏனைய கல்வி வலயங்களில் போதிய ஆசிரியர்கள் இல்லாமை காரணமாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த வியாழக்கிழமை மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதற்காக யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டதாகவும் இதன் மூலம் 72 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படலாம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கூடிய ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் கல்வி வலயங்களான தீவகம் மற்றும் தென்மராட்சி ஆகியவற்றுக்கே இவர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இடமாற்றங்கள் அடுத்த வருடம் முதல் நடைமுறைக்கு வரும் எனறும் கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

(8-6)

# தரமான விதை உருளைக்கிழங்கை பெற்றுத்தருமாறு விவசாயிக்ள் கோரிக்கை

வலி.தெற்கு,ஓக.24

தனியார் விற்பனை நிலையங்களில் இருந்து பெறப்படும் விதை உருளைக் கிழங்கின் தரம் குறைவாக இருப்பதால் விவசாயிகளுக்குத் தேவையான நல்லரக விதை உருளைக்கிழங்கினை இம்முறை கமநல சேவை நிலையங்களூடாக பெற்றுத்தரவேண்டும் என்று வலிகாமம் தெற்கு பிரதேச விவசாயக் குழுக் கூட்டத்தில் விவசாய சம்மேளனங்களின் சார்பாக மேறபடி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வலிகாமம் தெற்கு பிரதேச விவசாயக்குழுக் கூட்டம் பிரதேச செயலர் எஸ்திருவாகரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது, இப்பிரதேசத்தைச் சேர்ந்த பல விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர்.

தனிப்பட்ட வர்த்தகர்களால் இங்கு கொண்டுவரப்படும் விதை உருளைக் கிழங்கின் விலை அதிகமாகக் காணப்படுகின்றது. பெட்டிகளில் எடுத்துவரபபடும் பொழுது சோதனைச்சாவடிகளில் பெட்டிகள் உடைக்கப்பட்ட பின் அவை தரமான விதைகள் என உறுதிப்படுத்த முடியாதுள்ளது. எனவே, விதை உருளைக்கிழங்கை கமநல சேவை நிலைங்களிளுடாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒத்துழைப்போடு பெற்றுத்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனப் பல விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள் கோரியிருந்தன.

விதை உருளைக்கிழங்கினை கடந்த காலங்களில் கமநல சேவை நிலையங்கள் பெற்றுத்தராமையால் விதைகளின் தரம் குறைவாகக்காணப்பட்டு அவற்றின் விளைச்சலும் குறைவாக இருந்தது. விதை உருளைக்கிழங்கைத் தனியார் கொண்டு வந்து விற்பனை செய்வதைத் தடை செய்யவேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

விவசாயிகளின் இக்கோரிக்கைக்கு பிரதேச செயலளர் எஸ்.திருவாகரன் பினவருமாறு பதிலளித்தார்.

தற்போது நடைமுறையில் உள்ள திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு கொள்கைக்கு அமைய எந்தவொரு பொருளையும் கொண்டுவந்து தனிப்பட்ட வியாபாரிகள் விற்பனை செய்வதைத் தடைசெய்யும் அதிகாரம் அரச இயந்திரங்களுக்குக் கிடையாது. கடந்த வருடம் ஏற்பட்ட கிழங்கின் விலை வீழ்ச்சிக்கும், விளைவு குறைவுக்கும் கிழங்கின் தரம் மட்டுமல்ல அதற்கு வேறுபல காரணங்களும் உள்ளன.

விவசாயிகள் எல்லோரும் ஒற்றுமையுடன் சேர்ந்து செயற்பட்டால் தரக்குறைவான உருளைக்கிழங்கினை வியாபாரிகள் விற்பனை செய்யமுடியாது போய்விடும். விதை அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை கிழங்கை மட்டுமே வாங்குவோம் என விவசாயிகள் தீமானித்துச் செயற்பட்டால் தரக் குறைவான விதைகள் விலை போக மாட்டா.

எனினும் மேற்படி கோரிக்கை தொடர்பான விவரங்களை மாகாண மட்டத்தினருக்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்க முயற்சிப்பேன் - என்றும் தெரிவித்தார்.

(10-152)

## மின்குமிழ்கள் ஒளிரவில்லை

குருநகர்,ஓக.24

குருநகர் கடற்கரைவீதியில் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் பழுதடைந்துள்ளதனால் இவ்வீதியூடாகப் பயணிப்போர் மிகுந்த சிரமத்தை அனுபவித்து வருகிறார்கள்.

குருநகர் கடற்கரை வீதியில் மவுண் காமல் சந்தி, சென். பற்றிக்ஸ் வீதிச்சந்தி, ஆறாம் குறுக்கு வீதிச் சந்தி ஆகியவைகளில் பொருத்தப்பட்ட மின்குமிழ்களே ஒளிராமலுள்ளன.

இம்மின்குமிழ்களை திருத்தியமைக்குமாறு மின்சார சபையிடம் குருநகரிலுள்ள பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுதத போதிலும் இதுவரை இவைகள் திருத்தியமைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(8-51)

### யாழ்.பல்கலைக்கழக

# ஆங்கிலபாட போதனாசிரியர்கள் நேற்று ஒருநாள் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஓக.24

யாழ். பல்கலைக்கழக ஆங்கிலபாட போதனாசிரியர்கள் நேற்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

ஆங்கிலப் போதனாசிரியர்கள் உயர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் உரிமையை வழங்கிய முன்னைய சுற்றிக்கையை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் என அனைத்துப் பல்கலைக்கழக ஆங்கில போதனாசிரியர்கள் சங்கம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

ஆனால், இது தொடர்பாக நியமிக்கப்பட்ட உபகுழு அக்கோரிக்கையை ஏற்கவில்லை. இதனைக் கண்டித்து அனைதது பல்கலைக்கழக ஆங்கில போதனாசிரியர்கள் சங்கம் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது.

அதற்கு ஆதரவு தெரிவித்து யாழ்.பலகலைக்கழகத்தில் பணிபுரியும் ஆங்கில போதனாசிரியர்களும் நேற்று அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

(8-5)

## குழப்ப நடவடிக்கையில் ஈடுபட்ட நால்வருக்கு எச்சரிக்கை

வடமராட்சி,ஓக.24

புலிகளின் பெயரைக் கூறி குழப்ப நடவடிக்கையில் ஈடுபட்ட நால்வர் கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவினால் பிடிக்கப்பட்டு, கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

துன்னாலைப் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு நான்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இவர்கள், வீட்டில் உள்ளவரை விசாரணைக்கென வெளியே வருமாறு அழைத்தபோது அங்கு அயலவர்கள் திரண்டனர். அயலவரைக் கண்டதும் இக்குழு தப்பிஓடியது.

ஏற்கனவே, பல குற்றச்செயல்களில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் இந்த நான்கு இளைஞர்களையும் கலாசாரம் பேணும் இளைஞர் குழு தேடிக கண்டு பிடித்து எச்சரிக்கையின் பின்னர் விடுவித்தது.

(8-173)

# சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஜே.வி.பி. ஒத்துழைப்பு ஒப்பந்தம்

## அடுத்த மாதம் கைச்சாத்தாகும்

கொழும்பு,ஓக.24

சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஜே.வி.பி. பரஸ்பர ஒத்துழைப்புத் தொடர்பான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள விரும்பதாக கொழும்பு பத்திரிகையொனறு செய்தி வெளியிட்டுள்ளது. பெய்ஜிங்கிலிருந்து நிதி மற்றும் அரசியல் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட விருப்பதாகக் கூறப்படுகின்றது.

அடுத்தமாதம் ஜே.வி.பி. குழுவொன்று சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பதாகவும் அப்பொழுது இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படுமென்றும் கூறப்படுகின்றது.

அடுத்தமாதம் மூன்றாம் திகதிமுதல் 5ஆம் திகதிவரை சீனாவில் நடைபெறவிருக்கும் ஆசிய அரசியல் கட்சிகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவும், நந்தன குணதிலகவும் சீனாவுக்குச் செல்லவிருக்கிறார்கள். இந்த மாநாட்டுக்கு வெளியில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினருடன் பேச்சு நடத்துவார்கள் என்றும் அதன்போது சீனா கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்வார்கள் என்றும் கூறப்படுகின்றது.

இம்முறை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி சீன மாநாட்டுக்கு அழைக்கப்படவில்லையென்றும், ஜே.வி.பி. அழைக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையென்றும் அச்செய்தி தெரிவிக்கின்றது. (ப)

**நாளை**

ஆவணி 09

புதன்கிழமை

(25.08.2004)

திதி : தசமி

முன்னிரவு 7.39 வரை.

நட்சத்திரம் : மூலம்

பின்னிரவு 3.56 வரை

சுபநேரம்: 4.35 - 6.05

ராகுகாலம்: 12.05- 1.35

(பழைய நேரப்படி)

# புலமைப் பரிசில் விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி இன்று ஆரம்பம்

இம்மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

யாழ்ப்பாணத்தில் விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறுகிறது.

இனறு ஆரம்பமாகும் பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 29ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளன.

வேறு மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வரும் புலமைப்பரிசில் விடைத்தாளகளை மதிப்பீடு செய்யும் பணிகளை 100 ஆசிரியர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

(8-6)

**உதயவாக்கு**

சொல்வதை எல்லாம் செயலில் காட்டமுடியுமானால் இறைவன் ஏது.

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

லண்டனில் வசிக்கும்
கேதீஸ்வரன் -
கிருஸ்ணரூபி தம்பதிகளின்



செல்வப்புதல்வி
சுபாங்கி
24.08.2004

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (24.08.2004) செவ்வாய்க்கிழமை குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை, அப்பா, அம்மா, பூட்டிமார், அப்பப்பாமார், அம்மம்மாமார், பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், சித்தப்பாமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர்கள் நல்லூர் கந்தன் துணையுடன் சகல பாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

வாழ்த்துவோர்:
சண்முகலிங்கம் குடும்பத்தினர்.
(35642) (24-14-26)



**A.V.R. மோட்டோர்ஸ் வாடிக்கையாளர்களுக்கு எமது நிறுவனமும் T.V.S. மோட்டார் கம்பனியும் இணைந்து நடத்தும்**

T.V.S.

## இலவச சேவிஸ்

இன்றும் நாளையும்
யா/சிங்கள மகாவித்தியாலயத்தில்
நடைபெறவிருப்பதால் **T.V.S.**
பாவனையாளர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

**A.V.R. மோட்டோர்ஸ்**
100A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0777 - 238388.
(35643)(26-14)



## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள கூட்டுறவுப் பரிசோதகர்
திரு.மா.தயாகுமரன் அவர்களின் அன்புத் தந்தையார்

### ஆழ்வார்பிள்ளை மார்க்கண்டு

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு உதவி
ஆணையாளர் அலுவலகம்,
757, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-36892) (32-14-26)

உத்தியோகத்தர்கள்,
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்.
யாழ்ப்பாணம்.



## துயர் பகிர்கின்றோம்

எமது சமாசச் செயலாளா க.சூரியகுமாரன
அவர்களின் அன்புத் தந்தை

### சின்னையா கந்தவனம்

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு, ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் மறைவினால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பருத்தித்துறை.
(சி-36900)(26-14)

பணியாளர்கள், கிளைச் சங்கத்தினர்,
வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்
கூட்டுறவுச்சங்கச் சமாசம்.



உ
சிவமயம்

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் தாரண வருஷம் ஆடி மாதம் 32ஆம் நாள் (16-08-2004) திங்கட்கிழமை பிரதமை திதி கூடிய நேரத்தில், கல்வியங்காடு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாளை அனுதினமும் சேவித்த

### அமரர் பொ.கிருஷ்ணமூர்த்திசர்மா

ஆகிய எமது பிதா நற்கதியடைந்ததையொட்டி பின்வரும் தினங்களில் கிரியைகள் நடைபெறும். எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அத்தினங்களில் சமுகமளித்து கலந்து கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா வைகுண்டவாசனின் பாத மலரடைந்து, வாழப் பிரார்த்திக்கும் வண்ணம் வேண்டிக் கொள்கின்றோம்.

*25–08–2004 (ஆவணி 09) புதன்கிழமை தசாகம் – கல் எடுப்பு*
*27–08–2004 (ஆவணி 11) வெள்ளி சபிண்டீகரணம்*
*28–08–2004 (ஆவணி 12) சனி கிருகயக்ஞம் – மதியபோசனம்*

மேற்படி கிரியைகள் பிரம்மஸ்ரீ ஐ.ஞானம் உபாத்தியாயரால நிகழவுள்ளது.

அருள்மிகு ஸ்ரீ இலங்கைநாயகி
மனோன்மணி அம்பாள் கோயில்.
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.
(35639) (26-14)

மக்கள், மருமக்கள்.


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.24

குடத்தனை, நாலாம்பனைச் சித்தி விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான ஆரம்பக்கிரியைகள் நாளை புதன்கிழமை காலை 7.40 மணிக்கு ஆரம்பமாக உள்ளன. மறுநாள் வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் 4 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறும். (10-15-201)

☆ ☆ ☆

வடமராட்சி,ஓக.24

புலோலி காந்தியூர் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த அபிஷேகம் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும் அபிஷேகத்தின் இறுதிநாளான எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை மகாசங்காபிஷேகம் இடம்பெறும். (10-173)

☆ ☆ ☆

வடமராட்சி,ஓக.24

பொலிகண்டி, இடுப்பை மூலை உப்புக் கிணற்றடிப் பிள்ளையார் கோயில் வருடாந்தத் திருவிழா கடந்த 21ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (10-173-201)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.24

யாழ்.வண்ணை பிறவுண் வீதி, ஸ்ரீபத்திர காளி அம்மன் ஆலய சாந்திகதீ திருவிழா நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

விழாவில் எதிர்வரும் 2ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் 108 சங்காபிஷேகமும் இடம்பெறும். இதனையொட்டி இவ்விரு தினங்களிலும் மகேஸ்வர பூசையும் இடம் பெறவுள்ளது. (10-201)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.24

பூநகரி மண்ணித்தலை புனித செபஸ்ரியார் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழாவையொட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி நிறைவேற்றப்படும்.

அதனைத்தொடர்ந்து தேர்ப்பவனியும் இடம் பெறும். (10-190-201)

# மீளாய்வுப் பணிகள்

யாழ்ப்பாணம்,ஓக.24

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்றுவரும் பங்கீட்டு அட்டை மீளாய்வுப் பணிகள் நாளை புதன்கிழமையுடன் நிறுத்தப் படவுள்ளதால் இது வரையில் தமது அட்டைகளை மீளாய்வு செய்யாதவர்களை உடன் மீளாய்வு செய்து கொள்ளுமாறு உதவிப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (10)

# ஆசிரியர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.24

தாவடி - கொக்குவில் ஆதிகாளியம்பாள் ஆலயத்தில் வைத்து முத்தமிழ்மணி ஆசிரியர் ஜெயரட்ணம் கோகலே 'பிரசங்கவாரி' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தேவிபகவதம் தொடர்பாக 15நாள் தொடர் சொற்பொழிவாற்றிய ஜெ.கோகலேக்கு ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜாக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன், 'பிரசங்கவாரி' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தார். (8-185)

# மருதடி விநாயகர் ஆலயத்துக்குப் புதிய இராஜகோபுரம்

யாழ்ப்பாணம்,ஓக.24

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய இராஜ கோபுரம் இரண்டரைக் கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்றுவருவதாக ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் த.சிதம்பரநடராஜா தெரிவித்தார். (8-185)

# பருத்தித்துறை பிரதேச வீரமுரசு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.24

பருத்தித்துறை பிரதேச வீரமுரசு நிகழ்வு நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் அல்வாய் வடக்கு மகாத்மா சனசமூக நிலைய முன்றிலில் பருத்தித்துறை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் கி.அருமைத்துரை தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் யாழ்.மொழியின் தாயார் திருமதி சண்முகம் பூபதி, வடமராட்சிப் பிரதேச மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு, தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் கிருஷ்ணசிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அத்துடன் மாவீரர்களான 2ஆம் லெப்டினன்ட் கோகிலா, 2ஆம் லெப்டினன்ட் கோதை ஆகியோரின் உருவப்படங்களுக்கு ஈகச்சுடரேற்றி மலாமாலை அணிவிக்கப்பட்டது. மாவீரர் கோகிலாவின் உருவப்படத்துக்கு அவரது சகோதரி திருமதி த.நாகரத்தினமும் மாவீரர் கோதையின் உருவப்படத்துக்கு அவரது தந்தை எஸ்.செல்வராஜாவும் மலர்மாலை அணிவித்தனர்.

சிறப்புரைகளை தேசிய எழுச்சிப் பேரவையின் வடமராட்சிக் கோட்டப் பொருளாளர் அ.ம.செபஸ்தியான், செயலாளர் துரை. சத்தியசீலன் ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (10)


## கணனி இயக்குநர் தேவை

**அச்சக வேலைகளில் அனுபவமுள்ள கணனி இயககுநர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானக்கப்படும்.**

**சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை 31-08-2004 இறகு முன் *"செயலாளர், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபக் கட்டடத் தொகுதி, 2 ஆம் மாடி, யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**

செயலாளர்,
யாழ்.மா.கூ.சபை.
(சி-36896) (32-14-26)



## துயர் பகிர்கின்றோம்



வட்டு. தெற்கு, காளி கோயிலடியைச்
சேர்ந்த மர அரிவு ஆலை உரிமையாளரும்
எமது நண்பருமாகிய

### தம்பு கந்தையா

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*துர்க்கா மர அரிவு ஆலை,*
*மில் ஒழுங்கை,*
*சண்டிலிப்பாய்.*

இ.இராசநாயகம், இ.இராசலிங்கம்
(சி-36899) (32-14-26) குடும்பத்தினர்.



## 45 ஆவது நினைவு நாளில் துயர் பகிர்கின்றோம்

யாழ்.வட்டு. மேற்கு, அ.மி.த.க. பாடசாலை அதிபர்
திரு.நா.நடராசா அவர்களின் அன்பு மகள்

### திருமதி மாதினி முரளிதரன்

11-07-2004 லண்டனில் அகாலமரணமடைந்ததையிட்டு இன்று (24-08-2004) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரது 45 ஆவது நினைவுநாளில் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோட்டக் கல்விப் பணிப்பாளர், அதிபர் சங்கம்,
(36898) (32-26-14) சங்கானைக் கல்விக் கோட்டம்.



## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை பிரதேசசபை உத்தியோகத்தர்
திருமதி க.இந்திராணி
அவர்களின் அன்புத் தந்தையார்

### மு.கந்தையா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
(சி-36897) (32-14-26) ஊர்காவற்றுறை பிரதேசசபை.


# மரண அறிவித்தல்கள்

## பரமநாதன் விஜயநாதன் (நெப்போ)



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்தவருமாகிய பரமநாதன் விஜயநாதன் (நெப்போலியன்) 22-08-2004 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் பரமநாதன், காலஞ்சென்ற விஜயலட்சுமி தம்பதியினரின் புத்திரனும், செல்லத்துரை புஸ்பராணி, பாலசுந்தரம் (பிரான்ஸ்), பரமேஸ்வரன் (கனடா), மகேஸ்வரன் (பிரான்ஸ்), திருமதி மணிவண்ணன் திலகலட்சுமி (ஆசிரியர், திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் P.N.செல்லத்துரை (கிராம சேவையாளர் - இருபாலை), S.மணிவண்ணன், பா.விஜயகுமாரி, ப.கீதா, ம.பவாநிதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

359/8, கோயில் வீதி,
கம்பன் கோட்டம் எதிர் ஒழுங்கை,
நல்லலக்சுமி அவனியூ,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(35635)(21-14-26)

தகவல்:
செ.புஸ்பராணி
(சகோதரி)

## குமாரசாமி பரமநாதன்

(ஓய்வுபெற்ற லங்கா சிமெந்து, தொழிற்சாலை ஊழியர், அண்ணாகோப்பி ஊழியர்)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி பரமநாதன் 19-08-2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சின்னத்துரை - செல்லம்மா (லண்டன்) தம்பதிகளின் மூத்த மருமகனும் ருக்மணிதேவியின் அன்புக் கணவரும் கவிதா (ஜேர்மனி), சபிதா, கஜசதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜ்குமாரின் (ஜேர்மனி) மாமனாரும் ரஜித், ரஜினா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு அம்மப்பாவும் லச்சாதிபதியின் தம்பியும சிறி, கிரி, கலா, பாரதா (ஜேர்மனி), முரளி (ஆஸ்திரேலியா),சசி, துளசி (லண்டன்), சுபா (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25-08-2004) புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு நவாலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி: ருக்மணிதேவி(தேவி)
பிள்ளைகள்: கவிதா, சபிதா, கஜசதன்.

வட்டுக்கோட்டை.
(35633)(21-14-26)

# பிரதேச செயலகங்களிலுள்ள எழுதுநர்களின் ஆற்றலை மேம்படுத்தப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஓக.24

யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் எழுதுநர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சிநெறி எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் இருதினங்கள் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் இப்பயிற்சி நெறியில் அரச நிர்வாகம், நிர்வாகக்கட்டமைப்பு, அரசியல்யாப்பு, தாபனக் கோவை என்ற தலைப்புகளில் அரச அதிபரும் - நிதிப்பிரமாணம் பற்றிய அறிமுகத்தினைச் சாவகச்சேரிப் பிரதேச செயலகக் கணக்காளர் ஜே.எச்.குணமும் -

அரச நியமனங்களும், சேவை நிபந்தனைகளும் அரச அலுவலர்களின் வேதனமும் கொடுப்பனவுகளும் மற்றும் தொடர்பாடுகள் ஆகிய தலைப்புகளில் தலைமைப்பீட உதவி அரச அதிபர் வே.வீரபத்திரபிள்ளையும் -

அரச சேவையிலுள்ள எழுதுநர்களின் கடமைகளும் பொறுப்புக்களும் வேலையை இலகுபடுத்தல், கோவைகளும் கோவைப் பதிவேடுகளைப் பேணுதலும் ஆகிய தலைப்புகளில் சங்கானைப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸும் -

ஒழுக்காற்று நடவடிக்கை பற்றி சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எ.சுப்பிரமணிய சர்மாவும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இப்பயிற்சிநெறியில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, உதவித் திட்டப் பணிப்பாளர் வ.சத்தியசீலன், உதவி மாவட்டச் செயலர் க.கனகரத்தினம் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

இந்தப் பயிற்சிநெறி வடக்கு - கிழக்கு அவசர புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் (NEERP) நிதி உதவியின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (8-203-204)

### இடமாற்றம் பெற்ற

# ஊழியர்களின் சுயவிவரக் கோவைகள் உரிய திணைக்களங்களுக்குக் கிடைக்கவில்லை

குருநகர், ஓக.24

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுநிர்வாக அமைச்சின் இடமாற்றக் கட்டளைப்படி இடமாற்றஞ்செய்யப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றிவரும் சில ஊழியர்களின் சுயவிவரக்கோவைகள் அவர்கள் முன்னர் கடமைபுரிந்த அலுவலகங்களிலிருந்து புதிய அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சுயவிவரக்கோவைகள் புதிய அலுவலகங்களுக்கு கிடைக்காததனால் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் தமது வருடாந்த சம்பள உயர்வுகளைப் பெற்றுக்கொள்ளமுடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இடமாற்றத்தில் சென்ற சில ஊழியர்களின் சுயவிவரக் கோவைகள் தகுந்தமுறையில் பூர்த்திசெய்யப்படாமையினால் புதிய அலுவலகங்கள் இக்கோவைகளை முன்னர் அவ்வூழியர்கள் சேவைபுரிந்த திணைக்களங்களுக்கே திருப்பி அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுயவிவரக் கோவைகள் தகுந்தமுறையில் பூர்த்திசெய்யப்படவேண்டும் என்பது அரச சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் திணைக்களங்கள் இம்முறையைப் பின்பற்றாததனால் தாம் மிகுந்த சிரமங்களை அனுபவித்து வருவதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். (8-51)

# றோலர் மீன்பிடியைத் தடைசெய்தால் நஷ்டஈடு, நிவாரணம் வழங்கவேண்டும்

## கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

குருநகர்,ஓக.24

குருநகர் பகுதியில் றோலர் மூலம் மீன்பிடித்தொழில் செய்யும் கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் மற்றும் நஷ்டஈடுகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறுகோரி குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

குருநகர் பகுதியில் 80றோலர் படகுகள் உள்ளன. இவைகள் மூலம் அநேக தொழிலாளர்கள் கடலுக்குச் சென்று தொழில்செய்து வருகின்றார்கள். சிறுமீன்பிடித் தொழிலுக்குப் பாதிப்பு உருவாகும் என்ற நோக்குடன் 2005ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிமுதல் றோலர் மூலம் மீன்பிடிப்பதைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறியவருகின்றது.

எனவே, இத்தொழில் தடைசெய்யும் சூழ்நிலை ஏற்படும் போது றோலர் உரிமையாளர்களுக்கு உபகரணத்துக்கான நஷ்டத்தையும் தொழிலாளர்களுக்குத் தொழில் நிவராணமும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இம்மகஜரில் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது. (8-51)




## ஏரிகாயத்துக்குள்ளானவர் வைத்தியசாலையில்

கைதடி,ஓக.24

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த குடும்பஸ்தர் மீது மேசையில் இருந்து விளக்குத்தட்டுப்பட்டு வீழ்ந்ததினால் எரிகாயங்களுக்குள்ளான ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்வம் கடந்த வியாழக்கிழமை கைதடி குமரநகரில் இடம்பெற்றிருக்கின்றது.

இச்சம்பவத்தில் கந்தையா சுப்பிரமணியம் (வயது 48) என்பவரே எரிகாயங்களோடு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (8-75)

## நல்லூர் முருகன் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம்,ஓக.24

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் தினமும் நடத்திவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று மாலை 6.30 மணிக்கு எஸ்.கோபிதாஸ், கே.குகபரன், எஸ்.சுபராஜிதன் ஆகியோரின் வயலின் கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியங்களாக மிருதங்கம் - கே.கண்ணதாசன், கெஞ்சிரா - கே.அனந்தகோபன், கடம் - என்.மாதவன் ஆகியோர் பங்கேற்பர். (10-5)

✦✦✦

யாழ்ப்பாணம்,ஓக.24

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந திருவிழாவையொட்டி இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் இரவு 7மணிக்கு நடத்திவரும் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வில் தமிழக விரிவுரையாளர் சாண்டிலியன் இராமகிருஷ்ண மூர்த்தியின் சொற்பொழிவு இடம்பெறும். (10-5)

✦✦✦

யாழ்ப்பாணம்,ஓக.24

நல்லூர்க் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு இலங்கை சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் நேற்றுத் திங்கட்கிழமை முதல் நல்லை ஆதீன மண்டபத்தில் நற்சிந்தனை ஆன்மீகச் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் இன்றும், நாளை புதன்கிழமையும் மாலை 7 மணிமுதல் 8.30 மணிவரை இலங்கை சின்மயா மிஷன் ஆச்சாரியார் ரமண சைத்தன்யா சொற்பொழிவுகளை ஆற்றுவார். (10-201)

## நல்லூர் வீதியிலே

இராகம்: பிலஹரி தாளம்: ரூபகம்

பல்லவி

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே.

அனுபல்லவி

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்தஇடம்
அதுவாத லாலே அதிசயம் மெத்த உண்டு (எந்நாளும்)

சரணங்கள்

1. வேதாந்தம் சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே.
(எந்நாளும்)


2. சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும் நல்லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்தி நிச்சயமே.

\- யோகர்சுவாமி

# நல்லூர்க் கந்தன்

## பெருந்திருவிழாக் காலச் சிறப்பம்சம்

(4ஆம் திருவிழா)



## நான்மறையின் ஓசையிலே நடனமிட்டாய்

நல்லைநகர் பதியினிலே சிலை யமர்ந்தாய்
நான் மறையின் ஓசையிலே நடனமிட்டாய்
பல்லுயிர்கள் வாழ அருள் மழை பொழிந்தாய்
பால முருகனாய்க் காட்சி தந்தாய்

அங்கையின் போகம் பல வைத்திருந்தாய்
அடியவர்க்காக வென்றே அளித்தாய்
செங்கையில் வேலதனை ஏந்தி நின்றாய்
சேரவே தேவர் துயர் தீர்த்து வைத்தாய்

குன்றினிலாடி வரும் குமரனானாய்
தன்னிகரில்லா மாந்தர் தலைவனானாய்
அண்டசராசர மனைத்தும் ஆட்சி செய்தாய்
ஆதரவற்றோர்க்கபயமாகி நின்றாய்

ஓராறு மங்கையர்கள் சேயனானாய்
ஒய்யாரமான மயில் வாகனனானாய்
ஈராறு பன்னிருகையாண்டி யானாய்
ஈருலகம் போற்றும் மெய்யாண்டியானாய்.

\- மு.தணிகாசலம்.

## யாவரும் மகிழ வரவேண்டும்

முருகா முருகா முருகாவே
மயில் ஏறி வருவாயே
கந்தா என்று சொல்வோமே
கவலைகள் யாவும் தீர்ப்பாயே

நல்லூர்ப் பதியில் உறைவோனே
நன்மைகள் யாவும் செய்வோனே
யாவும் உன்னை வணங்கிடுவேன்
யாவரும் மகிழ வரவேண்டும்.

\- செல்வி கிருஸ்ணசாமி துர்க்காம்பிகை.

## ஆட்கொண்டு அருள்வாய்

அரோகரா ஒலிதனை
ஆனந்தமாய் கேட்டு
ஆடும்மயிலேறி - எமக்
கற்புதக்காட்சி தந்து
பக்தர் கூட்டத்தை
பரவசம் எய்த வைக்கும்
பதி நல்லூர் வேல் ஐயனே!

பலவரம் கேட்டிடாது
ஒருவரம் வேண்டுகிறோம்
மனதில் சாந்திநிலவ
எம்துயர்தனைப் போக்கவேண்டும்
ஓடிவா நல்வேலவா
ஓர்வரம் தந்தெமை
ஆட்கொண்டு அருள்வாய்.

\- அல்லையூர் செ.சிபி.

## சித்திர அழகொளிர் திருநல்லை

நித்தலும் கோயில் வலம் வந்து
பக்தி செய்தவன் பாதம் பரவி
புத்தியிலவனை இருத்தினாலெம்மை
உத்தம வாழ்வில் உயர்த்துவான்
சத்தியம் இதுவாம் சாரா திருப்பறை
வித்தகத் திறமையால் விரும்பியேந்திட
எக்கணம் செய்யும் எழிலார் குமரனை
சித்திர அழகொளிர் திருநல்லை கண்டேனே!

\- திருமதி பரமேஸ்வரி சிவராமலிங்கம்.

## அமைதி முருகன்

இருள் நிலவில் விழி சிமிட்டும் முருகன்
இதய உறவில் ஒளி வளர்க்கும் முருகன்
அருள் வாழ்வில் தமிழை ஆளாக்கும் முருகன்
அமைதி வாழ்வில் அமிழ்தை நிலமாக்கும் முருகன்.

\- நல்லை அமிழ்தன்.

## தேடி உன்னைச் சரணடைந்தோம்

ஆடிவரு மயிலேறு ஆணழகா முருகா
நம் அவலங்கள் அடியோடு மண்ணிலே மறைய
தேடியுனைச்சரணடைந்தோம் - மருகா
தேவர்களின் குறை தீர்த்த - குமரா
பாடியுனைத்தினம் துதித்தோம் - பாலகா
பக்தர்களின் வரமீயவேலேந்தி - வருக
நாடிவரும் அன்பர்க்கு நலமளிக்கும் நல்லூரா
நாளும் கோயில் கொண்டே எம்மைக்காத்திடுமையா.

\- க.நாகேஸ்வரா.

# பழவகைகளும் அவற்றை உண்பதால் அடையும் நன்மைகளும்

**அன்னாசிப்பழம்:**
அசீரணம், மலக்கட்டு, இருமல், வாய் நாற்றம், வாதநோய் என்பவற்றை நீக்கும். உடம்பு, எலும்பு பல் போன்றவற்றைப் பலப்படுத்தும்.



**அப்பிள்பழம்:**
தாகம், உடல்வரட்சி, வயிற்று அழற்சி போன்றவற்றை நீக்கும். குடல்ப் புண், பேதி, இரத்தப்பேதி, தள்ளுமூலம், வயிற்றுப்புண், வாய்ப் புண் போன்றவற்றைக் குணமாக்கும்.

**இலந்தைப்பழம்:**
வாந்தியை நிறுத்துவதுடன் உடலுக்கு வலுவைக் கொடுக்கும்.

**எலுமிச்சம்பழம்:**
வாந்தி, மயக்கம், பித்தம், வயிற்றுப்புண், வாயுக்கோளாறு மூலக்குத்து, வயிற்றுப்போக்கு, இருமல், சிறுநீரகநோய், வயிற்றுவலி, வாய் நாற்றம், பல்ஆட்டம், தூக்கமின்மை, கண்நோய் போன்றவற்றை நீக்கும்.

**கொய்யாப்பழம்:**
வயிற்றுப்புண், மலக்கட்டு, வயிற்றுக் கோளாறு, இருதயப்படபடப்பு, தோல் கோளாறு, என்பவற்றை நீக்கும். மூளை, எலும்பு என்பன பலமடையும்.

**தக்காளிப்பழம்:**
உடல்வரட்சி, வயிற்றுப்புண், மலச்சிக்கல் சிறுநீரகக் கோளாறு போன்றவற்றை குணமாக்கும்.

**தோடம்பழம்:**
சூடு, குடல்வரட்சி, தாகம், மலக்கட்டு, கணச்சூடு, தலைச்சுற்று, சொறிசிரங்கு, பல்கோளாறு என்பவற்றை குணமாக்குவதுடன் மேனியை அழகாக்கும் உடலை வளர்ப்பதுடன் கூடிய சக்தியைக் கொடுக்கும்.

**இ.தனபாலசிங்கம்**

**திராட்சைப்பழம்:**
பித்தக்கோளாறு, மலச்சிக்கல், வாதம், உடல் சூடு,கபம், வயிற்றுப்புண்,மூலப்புண், நாவறட்சி, நீர்ச்சூடு, வாய்நாற்றம், தொண்டைப்புண் போன்றவற்றைக் குணமாக்கும். கைகால், மூளை போன்றவை பலமடையும் முகம் அழகு பெறும்.

**பப்பாளிப்பழம்:**
மலக்கட்டு, கண்நோய், வாய்நாற்றம், தொண்டைப் புண், வயிற்றுப்புண், பல்சம்மந்தமான கோளாறு, கர்ப்பம் தொடர்பான நோய் என்பவற்றை குணமாக்குவதுடன் யானைக்கால் வீகம் குறையும். உடம்பு மூளை வலிமை பெறும். ஆண்மை, பெண்மை நிறையும் நோய் எதிர்ப்பின்ன உண்டுபண்ணும்.

**பாலைப்பழம்:**
கருங்கரப்பன், கிரந்தி என்பன நீங்கும். இப் பழவிதையிலிருந்து எண்ணெய் எடுத்து கைகால்களுக்குப்பூசிவர கைகாலின் கரடுமுரடு நீங்கும்.


**புளியம்பழம்:**
பித்தசுரம், மயக்கம், மூர்ச்சை குணமாகும்.

**பேரீச்சம்பழம்:**
மலக்கட்டு, களைப்பு, தொண்டைக்கட்டு, பக்கவாதம் போன்றவற்றை தணிக்கும். மூளை, எலும்பு, தசை போன்றவற்றை வலுப்படுத்தும். இளைப்பு, மூட்டுவலி, உடம்பு அசதி ஏற்படாமல தடுக்கும். ஆஸ்மா நோயாளிக்கு நல்லது மூல நோயாளிக்கு ஆகாது.

**மங்குஸ்தான்பழம்:**
குடற்புண், வாய்நாற்றம், வயிற்றுவலி, உடல் வரட்சி, மூலநோய், இரத்தநோய், மூலபபுண், சூதகவலி, கண்ணெரிவு, கணச்சூடு, பீதம், குமட்டல், இருமல் போன்றவற்றை குணமாகும். சிறுநீர்ப்பையைச் சுத்தப்படுத்தும்.

**மாதுளம்பழம்:**
வாய்நாற்றம், வயிற்றுப்புண், அன்னதோஷம் தொண்டைக்கட்டு, மூலஎரிவு, நீரிழிவு, ஆஸ்துமா, தொண்டைக் கம்மல், வாய்வுப்பிடிப்பு, இரத்தச் சோகை, பாண்டுரோகம், பெருவயிறு, வாந்தி மந்தம், நெஞ்செரிவு, காதடைப்பு, மயககம், பித்தம், மலச்சிக்கல் என்பவற்றை குணமாகும். ஞாபகசக்தியை உண்டாக்கும். இருதயத்திற்கு பலம்தருவதுடன் உடல் குளிர்ச்சிபெறும்.

**மாம்பழம்:**
மலக்கட்டு, மலட்டுத்தன்மை, சொறிசிரங்கு, முகவரட்சி, வாய்நாற்றம், சிறுநீர்க்கல், பற்கோளாறு போன்றவற்றைக் குணமாக்குவதுடன் உமிழ் நீரைச் சுரக்கச் செய்வதுடன் மூளை இருதயம் பலமடையும். ஆண்மை, பெண்மை மிகுதியாகும் மாத விலக்கை ஒழுங்காக்கும்.






தொகுப்பு : தேவா

# விற்றமின் 'சி'யின் பயன்பாடுகள் இவை....

விற்றமின் 'சி' சத்து ஸ்கர்வி நோயை மட்டுமல்லாமல் சாதாரண சளித்தொல்லையை விரட்டியடிக்கிறது. இதயத்திற்கு நல்லது செய்கிறது. புற்றுநோயைத் தூரத்தில் தள்ளி வைககிறது. மன இறுக்கத்தைப் போக்குகிறது.

ஸ்கர்வி நோயால் பாதிக்கப்படுவர்களின் சருமம், சளிச்சவ்வு, தசைகள் ஆகியவற்றில் இருந்து இரத்தம் கசிதல், பற்கள் தளர்ந்து விடுதல், இரத்தச்சோகை, பலவீனம் போன்றவை இருக்கும். இந்தப் பிரச்சினையை விற்றமின் 'சி' சத்து குறைக்கிறது.

விற்றமின் 'சி' இரத்த நாளாங்களை இளகச் செய்து இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது. ஆஞ்சியோ பிளாஸ்டி செய்யும்போது அடைப்பட்ட இரத்தக்குழாயைச் சீர்செய்வதற்காக மிகச்சிறிய பலூன் ஒன்று அனுப்பப்படுகிறது. இது இரத்த அடைப்பைச் சரிசெய்யும். ஆனால், ஒரு ஆண்டுக்குள்ளாகவே மீண்டும் அடைப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்காக விற்றமின் 'சி' மாத்திரையை தினமும் எடுத்துக்கொள்ளலாம்.

விற்றமின் 'சி' சத்துள்ள இயற்கைப் பொருளகளைச் சாப்பிடும்போது இரைப்பைக்குடல் சார்ந்த பகுதிகளில் புற்றுநோய் வரும் வாய்ப்பு தடுக்கப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

பெண்களுக்குப் பித்தப்பைக் கோளாறுகள் வருவதிலிருந்து விற்றமின் 'சி' காப்பாற்றுகிறது என கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வு கூறுகிறது.

நோய்த் தொற்றின் காரணமாக மன இறுக்கம், மனத்தளர்ச்சி போன்ற பிரச்சினைகள் உணடாகின்றன. இவற்றை விற்றமின் 'சி' சத்து குறைக்கிறது.

விற்றமின் 'சி' சத்தைக் குறைவாகச் சாப்பிட்டால் களைப்பாக இருப்பதாக உணர்வோம். சுறுசுறுப்பு ஏற்படாது. நோய்த் தொற்றுக்கள் ஏற்படும். குடல் தொற்றுக்கள், குடல் பகுதி சார்ந்த பிரச்சினைகள் ஏற்படும். மூட்டு சார்ந்த பிரச்சினைகளும் உணடாகும்.


குழந்தைகளில் வளர்ச்சிக் குறைபாட்டையும், உடைந்துவிடும் தன்மையுள்ள எலும்பையும் உண்டாக்கும். விற்றமின் 'சி' குறைந்தால் காயங்கள் ஆறுவதில் காலதாமதம் உண்டாகும்.

***எவ்வளவு வீற்றமின் 'சி' சாப்பிட வேண்டும்?***

தினமும் 50 மி.கிராம் சாப்பிட்டால்போதும் என பரிந்துரைக்கப்படுகிறது. அமெரிக்க நலமையத்தின் பரிந்துரைப்படி 200 மில்லிகிராம் வரை சாப்பிடலாம்.

100 முதல் 120 மில்லி கிராம் விற்றமின் 'சி' சத்துக்கள் பயன்படாமல் சிறுநீர் வழியாக வெளியேற்றப்படுவதாகத் தெரியவந்துள்ளது. இதை அதிகமாக சாப்பிட்டால் சிறுநீரகமும் குடலும் பாதிக்கப்படும். விற்றமின் 'சி' சத்துள்ள காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை நிறையச் சாப்பிடலாம்.

# இதயமே! இதயமே!!



மாரடைப்பால் உலகில் ஒரு மணி நேரத்தல் 91 நோயாளிகள் இறக கிறார்கள்.

சர்க்கரையின் அளவை அடிக்கடி சரிபார்த்துக் கொணடால் மாரடைப்பைத் தவிர்க்கலாம்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இதயம் ஒன்று போல் இருந்தாலும் இருதய நோயால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள்தான்.

35 வயதிற்கு மேற்பட்ட ஆண்-பெண் இருபாலாரும் 2அல்லது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை இருதய பரிசோதனைசெய்துகொள்ள வேண்டும். 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆண்டு தோறும் பரிசோதனை செய்து கொள்வது மிக அவசியம்.

ஆண்களை விட பெண்களே முதல் மாரடைபபில் அதிகம் இறக்கிறார்கள். இரத்த அழுத்தம் எப்பொழுதும் 120-80மி.மீ.கிராமுக்கு குறைவாக இருக்கும்படி பெண்கள் கவனிக்கவேண்டும்.

இருதய நோயால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அறிகுறியாகமூச்சுவிட சிரமம், வாந்தி, கழுத்து வலி, அதிக வியர்வை போன்றவை காணப்படுகிறது.

மாதவிடாய் நின்றபின் தொடர்ந்து மருத்தவ பரிசோதனை செய்தல்நலம்.

தோடம்பழம், பப்பாளிப்பழம், அப்பிள்பழம், வாழைப்பழம், திராட்சைப்பழம் மற்றும் எலுமிச்சம்பழம் ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொண்டால் இதயத்தில் எந்தத் தொந்தரவும் வராது.

உங்கள் சாப்பாட்டில் கொஞ்சம் கவனம் செலுத்தினால் இதயக்கோளாறுகளிலிருந்து உங்களை பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

- சுகத் -

# புகைப் பழக்கமும் அறுவைச் சிகிச்சையும்



பெரும்பாலன ஆண்கள் புகைப்பிடிக்கும் பழக்கம் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பழக்கத்தால் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன என்பதை அறிந்தும் அதைக்கைவிட முடியாமல் தவிக்கின்றார்கள்.

இவர்கள் பல்வேறு விதமான அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ளும்போது புகைப் பழககத்தின் பாதிப்பு இவர்களை அதிக அளவில் சிர்குலைக்கின்றது.

எப்டி என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

புகைப்பழக்கத்தால் இரத்த நாளங்கள் சுருங்கிவிடுகின்றன. இதனால் உடல் முழுவதிலும் இரத்த ஓட்டம் வெகுவாகக் குறைகின்றது. இதை விட முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், சிகரெட்டில் உள்ள காபன் மோனொக்சைட் இரத்தமானது ஒட்சிசனை எடுததுச் செல்லும் திறனைக்குறைத்து விடுகின்றது. காயம் குணமாவதற்கு ஒட்சிசன் மிக முக கியமானது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். வேறு இடத்தில் இருந்து தசையை எடுத்து ஒட்டி சீரமைத்தால் புகைப் பழக்கத்தின் காரணமாக, அந்த இடத்தில் உள்ள காயம் ஆறவே ஆறாது.

நியுயோர்க்கில் உள்ள 'இன்ஸ்டிடியூட் ஒவ் ரீகன்ஸ்ட்ரக்டிவ் பிளாஸ்டிக் சேஜரி' என்ற ஆய்வுமையம் மேற்கொண்ட ஒரு ஆய்வில் சிகரெட் புகைக்கும் பழக்கம்தான் காயம் ஆறுவதைத்தடுக்கும் முக்கிய காரணி என்பது தெரியவந்துள்ளது.

புகைப்பழகம் இல்லாதவர்களை விட புகைப்பவர்களின் காயம் 12 மடங்கு அதிகமாக கால தாமதமாக ஆறும். இதனால் அறுவைச்சிகிசசை செய்தவர்கள் சீக்கிரம் பணிக்குத் திரும்ப முடி யாத சூழ்நிலை உண்டாகும்.

புகைப்பழக்கம் உள்ளவர்களுக்கு பொது உணர்விழப்பில் மயக்கம் கொடுக்கும்போது சிலசமயம் இருமி விடுவார்கள். இந்த செயலால உள்ளுறுப்புக்களில் இரத்தக்கசிவு ஏற்படும். சில சமயத்தில் உயிருக்கு ஆபத்தாகவும் முடியும்.

அறுவைச்சிகிச்சை மேற்கொள்ள முடியாத நிலையில் இருப்பவர்கள் சிகிச்சை நடைபெறுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பே அப்பழக் கத்தை விட்டு விட வேண்டும். சிகிச்சை நடை பெற்ற இரண்டு வாரங்கள் வரை புகைப்பிடிக் கக் கூடாது. அப்படிப்பிடித்தால் காயம் ஆறாது என்பதோடு உடலும் பாதிக்கப்படும்.

புகைப்பழக்கத்தை விடமுடியாவிட்டால் இந்த அறுவைச்சிகிச்சை அவசியம்தானா என பதை நீங்களே முடிவெடுத்துக் கொள்ளுங்கள்.

- ஆரோக்கியன் -

# அற்ப சொற்ப சலுகைகளைப்பெறவா ஆயிரக்கணக்கில் உயிர்களை இழந்தோம்?

## அருட்தந்தை சகாயநாதன் கேள்வி

வலி.வடக்கு,ஓக.24

இன்றைய சமாதானச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு போரும் வேண்டாம், ஆயுதங்களும் வேண்டாம். தற்போதைய சூழ்நிலையே போதும் என்று சிலர் கருதுகின்றார்கள். இதற்காகவா 70ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்களும் 20ஆயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களும் உயிர்துறந்தார்கள்? பல ஆயிரக்கணக்கான கோடி சொத்துக்களை இழந்தோம்?

- இவ்வாறு அருட்தந்தை சகாயநாதன் அடிகளார் கேள்வி எழுப்பினார்.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஐந்தாவது பேராளர் சங்கம் நெல்லியடி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் மாவட்டச் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் இடம்பெற்றபோது அங்கு அவர் உரையாற்றினார்.

தொடர்ந்து உரையாற்றிய அருட்தந்தை சகாயநாதன் தெரிவித்ததாவது:-

இநத விடுதலைப் போராட்டம் அற்ப சொற்ப சலுகைகள் கிடைக்கவேண்டும் என்பதற்காக நடத்தப்படவில்லை. எங்களுக்குத் தரவேணடிய உரிமைகளைச் சிங்களப் பேரினவாதிகள் தர மறுத்ததன் காரணமாகவே ஆயுதப் போராட்டத்தின் மூலம் அதனைப் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு இட்டுச்செல்லப்பட்டுள்ளோம்.

எமது உரிமைகளை வென்றெடுப்பதற்குத் தேசியத்தலைவர் சரியான பாதையிலேயே எம்மை இட்டுச் செல்லுகின்றார். இதற்கு மக்களாகிய நாம் செய்யவேண்டியது அவரின் கைகளை மேலும் பலப்படுத்துவதே ஆகும். இம்மண்ணில் ஒரு நிலையான நிம்மதியான




சமாதானம் மலரவேண்டும் என்பதற்காகத் தலைமை, அளவுக்கு மிஞ்சிய பொறுமையைக் கடைப்பிடித்துக்கொண்டு இருக்கின்றது.

நாங்கள் மீண்டும் சகோதர இனமாகச் சிங்கள மக்களுடன் இணைந்து வாழவேண்டுமானால் இங்குள்ள இராணுவம் வெளியேற்றப்படவேண்டியது மிகவும் அவசியமாகும். எமது உரிமைகளை அரசு கையளிக்கவேண்டியதும் அவசியமாகும். தேசிய எழுச்சிப் பேரவையினர் கிராமப்புறங்களுக்குச் சென்று இன்றைய உண்மை நிலைமையைப் பாமரமக்களுக்கும் எடுத்துக்கூறவேண்டும். துரோகிகள் என்று யாரையும் புறந்தள்ளக்கூடாது. அவர்களுக்கும் கூட உண்மை நிலைமையை எடுத்து விளக்கிக்கூறிப் பேராட்டத்தில் இணைத்துச் செல்லவேண்டும். இந்த நல்ல தலைவன் காலத்தில் நாம் விடுதலையைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும். போர்க்காலச் சூழ்நிலையில் கிடைக்காத சில அற்ப சொற்ப சலுகைகள் தற்போது கிடைக்கின்றன என்ற மனநிலையில் சும்மா இருந்துவிடக்கூடாது - என்றார்.

### கிளிநொச்சி, முல்லைத்தீவு புறக்கணிப்பு

யாழ். மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

இக்கட்டான காலகட்டத்தில் மக்கள் உரிமைகளை வென்றெடுக்கத் தேசிய எழுச்சிப் பேரவை முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளது. சிங்களப் பேரினவாதிகளினால் எமது ஜனநாயகத் தலைவர்கள் ஏமாற்றப்பட்டுக்கொண்டு இருந்தவேளையில் எம் இனத்தையும் மொழியையும் காப்பாற்றுவதற்காக விடுதலைப் புலிகள் தம் இன்னுயிர்களை ஈந்து போராடியுள்ளார்கள்.



இதன் காரணமாகவே இன்றைய இரண்டரை வருடகால சமாதானமும் ஏற்பட்டுள்ளது. பேரினவாதிகள் எச்சந்தர்ப்பத்திலும் எமது குரலுக்கு மதிப்பளிக்கப் போவதில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப்பலத்திற்குப் பக்கத்துணையாக இருப்பதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏற்படுத்தி அரசியற் பலமாக இருந்து வருகின்றோம்.

அன்று நோர்வே அரசின் தேசியக் கொடியை எரித்தார்கள் இன்று நோர்வே அரசிடம் மண்டியிட்டு உதவிகளைக் கேட்கின்றார்கள். இந்தியா நாட்டின் பருப்புக்கூட இங்கு வரக்கூடாது என எதிர்ப்புக்காட்டிய ஜே.வி.பியினர் இந்திய அரசிடம் மண்டியிட்டு நிற்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தைக் குழப்புவதற்கு யாரும் யாருக்கும் துணை போகமுடியாது. இடைக்கால நிர்வாகம் அல்லது தன்னாட்சி அதிகாரம் எமது கைகளில் கிடைக்கும்போதுதான் நாம் எதனையும் முன்னெடுத்துச் செல்லமுடியும். பட்டதாரி நியமனத்தைக்கூடச் சரியான முறையில் அரசினால் கொடுக்க முடியவில்லை. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒரு பட்டதாரிக்குக்கூட நியமனம் வழங்கப்படவில்லை.

வேலணை, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளில் தலா ஒரு பட்டதாரிக்கே நியமனம் வழங்கப்பட்டுள்ளது. நாம் தொடர்ந்தும் எதற்கும் போராட்டம் நடத்தும் இனமாக இருக்க முடியாது. எதற்கு எடுத்தாலும் போராட்டம் நடத்த வேண்டும் என்ற நிலைமையிலேயே தமிழ் இனம் வாழ்ந்து கொண்டிருக்கிறது - என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற் கல்வித்துறைத் தலைவர் சி.இளம்பிறையன், நெல்லியடி முருகமூர்த்தி ஆலயப் பிரதமகுரு கௌரிபாலக் குருக்கள் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

(ப-30-86-173)

# மக்களின் பங்களிப்பு இருந்தால் மட்டுமே அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

வலிகாமம் தெற்கு,ஓக.24

மக்களின் பங் களிப்பு இருந்தால் தான் உள்ளூராட்சிச் சபைகளால் அபி விருத்தி வேலைத் திட்டங்களை முன் னெடுக்கமுடியும். சுன னாகம் பிரதேச சபை படிப்படியாக முன்னைய பட்டின சபையின் நிலைக்கு மாறிவருகிறது. மக்களின் பங்களிப்பைப்பெற்று விரைவில் இச்சபை நகர சபைக்குரிய அந்தஸ்தைப் பெறவேண்டும்.

உள்ளூராட்சி வாரத்தையொட்டிச் சுன்னாகம் பிரதேச சபையினரால் நடத்தப்பட்ட இறுதி நாள் கலைவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா மேற்கண்டவாறு கூறினார்.

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தலைமையில் உடுவில் உப அலுவலகத் திறந்தவெளி அரங்கில் இக்கலைவிழா நடைபெற்றது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

மக்களின் தாய், சேய் பராமரிப்பு தொடக்கம் மயானம் வரைக்கும் உள்ள சகல வேலைகளையும் உள்ளூராட்சி மன்றங்களே ஆற்ற வேண்டியுள்ளது. இவற்றைச் செய்துமுடிப்பதற்கு மக்களின் பங்களிப்பு அவசியமானது.

இப்பிரதேச சபையின் நிர்வாகத்தில் கடநத வருடங்களைவிட இவ்வருடம் பல அபிவிருத்தித் திட்டவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உள்ளூராட்சி சபையினால் மேற்கொள்ளப்படும் இவ்வேலைத்திட்டங்களின் பயன்பாடு மக்களைச் சென்றடைய மக்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் தேவை.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் இன்று பிரதேச சபைகளில் இடம்பெறவில்லை. படித்தவர்கள், அறிவாளிகள், மதிநுட்பம் உடையவர்கள் பிரதேச சபை முன்னெடுக்கும் திட்டங்களுக்கு உதவியாகச் செயற்படவேண்டும் - என்றார்.

வலிகாமம் தெற்கு உதவிப் பிரதேச செயலர் எஸ்.ஆர்.ஜெய்ப்பிரகாசம் தமது உரையில்:-

மாணவர்கள், படித்த இளைஞர் - யுவதிகள், பொதுமக்கள் ஆகியோருக்குப் பிரதேச சபை செயற்பாடுகளில் பங்குபற்றக் கூடிய நிலை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

வானொலி, தொலைக்காட்சிகளில் இளைஞர், யுவதிகள் தமது பொழுதை வீணடிக்காமல் நூலகங்களுக்குச் சென்று தமது வாசிப்புத் திறனை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவே உள்ளூராட்சி வார நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன - என்றார்.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.குமாரவேலு பேசினார்.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சித்திரப் போட்டி, சுற்றுச் சூழல் பாதுகாப்புப் போட்டி, சனசமூக நிலையங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவினால் பரிசுகள் வழங்கப்பட்டன. (ப-152)

# இளம் சமுதாயத்தவருக்கு ஒளியூட்டும் நூல்கள் தேவை



''வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தினருக்கு ஒளியூட்டும் நூல்களான பிரம்மஸ்ரீ வாசு தேவக்குருக்களின் விரதமஞ்சரி, வாழ்வியற் கிரியைகள்'' ஆகிய நூல்கள் அமைந்துள்ளன. இவற்றைப் போன்ற நூல்கள் இப்போது அவசியம் தேவையாகின்றன.

மேற்படி நூல் வெளியீட்டுவிழாவில் வெளியீட்டுரை வழங்கிய இலங்கை இதழியற் கல்லூரி விரிவுரையாளர் கலாசூரி சிவநேசச்செல்வன் இவ்வாறு கூறினார்.

சித்தன்கேணி சிவநெறிச்செம்மல் சிவஸ்ரீ பா.வாசுதேவக்குருக்கள் எழுதிய 'விரதமஞ்சரி' நூல்வெளியீடும் வாழ்வியற் கிரியைகள் அறிமுகவிழாவும் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றன.

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கலாசூரி சிவநேசசெல்வன், விரதங்கள் ஏன், எதற்காக அனுஷ்டிக்கப்படவேண்டும் என்பதற்குத் தகுந்த விளக்கங்களைத் தருவதாக இநநூல் அமைந்துள்ளது. சுருங்கக்கூறி விளங்கவைக்கும வகையில் தமிழ், ஆங்கிலமொழிகளில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இது சமுதாயத்துக்குப் பெரும் வாய்ப்பாக அமைகின்றது - என்று சிவநேசச்செல்வர் தெரிவித்தார்.

சிறப்புரையாற்றிய சூரியன் எவ்.எம். வியாசர் கல்யாணசுந்தரம் - ஒவ்வொருவரும் வாழ்க்கையில் தாம் அடையப்போகும் இலக்கையிட்டு உறுதியுடன் செயற்படவேண்டும். இந்த மன உறுதியை வழங்கவல்லன விரதங்கள். உடல ஆரோக்கியத்திற்கேற்ப ஒவ்வொருவரும் என்னென்ன விரதங்களை மேற்கொண்டு தமது வாழ்க்கையின் இலக்கை அடையலாம் என்பதை விளக்குவதாக 'விரதமஞ்சரி' நூல் அமைந்துள்ளது - எனக் கூறினார்.

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் தனது தலைமையுரையின் ,போது - வாழ்க்கையில் மனிதன் தேடுகின்ற பொருள்கள், செயல்கள் எல்லாம் சமுதாயத்திற்குப் பயனுள்ளவையாகவும், தமக்கு வாழ்வளிப்பவையாகவும் அமையவேண்டும். சமய உண்மைகளை அறிந்துகொள்வதன்மூலம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக்கொள்ளலாம். வாழ்க்கையை அர்த்தமுடையாக்கிக் கொள்ளவும், நல்லதொரு சமுதாயம் உருவாகவும், நல்ல சிந்தனைகளைத் தரும் வழிகாட்டியாக 'விரதமஞ்சரி' அமைகிறது என்றார்.

கலாநிதி ஐயப்பதாச சிவாச்சாரியார் உரையாற்றுகையில், சித்தர்களால் போற்றப்பட்டது சித்தன்கேணி, சபா.வாசுதேவக்குருக்கள் தாம் பெற்ற அறிவைக்கொண்டு நூல்களை உருவாக்கிக்கொடுத்தும், சமய கிரியைகளைச் செய்தும் சமுதாயத்திற்குச் சேவையாற்றி வருகிறார் - எனக் கூறினார்.

கப்பித்தாவத்தை சிவஸ்ரீ க.சண்முகரத்தின சர்மா, பொன்னம்பலவாணேஸ்வர ஆலய அறங்காவலர் டி.எம்.சுவாமிநாதன், இலங்கை வானொலியைச் சேர்ந்த இளையதம்பி தயானந்தா உட்படப் பலர் சிறப்புரையாற்றினர். (ப-152)

# திருச்சபைக்கு மட்டுமன்றி இனத்துக்கும் பணியாற்றினார்

## மறைந்த முன்னாள் ஆயருக்குப் புகழாரம்

குருநகர்,ஓக.24

மறைந்த முன்னாள் யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை திருச்சபைக்கு மட்டுமல்லாது தமிழ் மக்களுக்கும் சிறந்த தலைவனாக இருந்து பணியாற்றினார்.

மறைந்த முன்னாள் யாழ். ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையின் ஓராண்டு நிறைவுநாள் நினைவு மலர் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் எஸ்.ஜெபனேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு யாழ். மறைக்கல்வி நிலையத்தில் யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் ஜே. நீக்கலஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் எஸ். ஜெபநேசன் கூறியதாவது:-

மறைந்த முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை சிறந்த தலைவர், சிறந்த வழிகாட்டி, சிறந்த பண்பாளன், சிறந்த கல்விமான். 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது தமிழ்ச் சமுதாயம் பல பிரச்சினைகளை அரசியலில் எதிர்கொண்டபோது உலகிற்குத் தமிழ் மக்கள பட்ட அவல நிலையைத் துணிச்சலுடன் எடுத்துக் கூறியவர். ஆயர் தியோகுப்பிள்ளை என்ன சொல்கிறார் என உலகமே அப்போது எதிர் பார்த்தது. அவரிடம் துணிவு இருந்தது. அவர் இறைவனுக்கு மட்டுமே பயப்பட்டார். இலங்கைத் தமிழ் மக்களது அவல நிலையைப் போக்க மனித உரிமைகள் நிறுவனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை தலையிடவேண்டும் என அவர் சொன்னார். இவரல்லவோ எமது தலைவன் எனத் தமிழ் மக்கள் அவரைப் போற்றினார்கள்.



வேதாகமம் முழுவதுமே அரசியல்தான். அதனைப் பின்பற்றி நாம் அரசியலுக்குக் குரல் கொடுக்கவேண்டியவர்கள். அரசியலில் புகுந்து உண்மையை எடுத்துச்சொல்பவர்கள் அஞ்சா நெஞ்சம் உடையவர்கள். அவரிடம் நிதானம், அறிவு, எதற்கும் கலங்காத நிலை, இறைவனிடம் பக்தி என்பன இருந்தன - என்றார்.

இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் ஜே.நீக்கலஸ் அடிகளார் தமதுரையில்:-

ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை திருமறைக்கு மட்டுமல்லாது தமிழ் இனத்துக்கும் அரியபணி செய்துள்ளார். தமிழ் மக்களது உரிமைக்காக இவர் குரல் கொடுத்தார். கல்விக்கும், திருமறைக்கும், தமிழரின் உரிமைக்கும் குரல் கொடுத்த ஆயரை நினைவு கூர்வது மிகவும் பொருத்தமாகும் - என்று கூறினார்.

இந்நிகழ்வில் யாழ். திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளார், பிரான்ஸிஸ் பெர்னாண்டோ, அருட்சகோதரி அருள் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

(ப-51)

# 3 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



பருத்தித்துறை, புலோலி தெற்கில் வசிக்கும்
**ஈஸ்வரன்-கமலாசினி** தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வி

**தர்சனா**

இன்று (24.08.2004) செவ்வாய்க்கிழமை
தனது 3 ஆவது பிறந்த நாளை தனது
அன்புத் தங்கையுடன் வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார்.
இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா,
கிளிநொச்சித் தாத்தா, மாமி மற்றும் மாமாமார், மாமிமார்,
பெரியப்பாமார், உற்றார், உறவினர் அனைவரும்
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கிருபையினால் பல்கலையும்
கற்று சீரும் சிறப்புமாகப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

தம்பசெட்டி,
பருத்தித்துறை.

தகவல்:
திரு.திருமதி க.பத்மசாலி.

(36857) (14-19-26)


## பேராளர் மாநாடு

நல்லூர் பிரதேச எழுச்சிப் பேரவையின் மாதாந்தப் பேராளர் மாநாடு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு கொக்குவில் மேற்கு ஞான பண்டித வித்தியா சாலையில் நடைபெற வுள்ளது.

நல்லூர் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ந. பாலகுமார் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் மக்கள் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாகவும் மற்றும் கடந்தகால செயற்பாடுகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப் படவுள்ளன. (86)


# இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 - 08 - 1925



இறப்பு 24 - 08 - 2002

## அமரர் தாமர் சின்னத்தம்பி
(வசாவிளான்)

ஆண்டுகள் இரண்டு உருண்டோடிப் போனாலும்
ஈண்டு உமது நினைவு மறக்கவே முடியாது
வையத்தில் நாம் வாழ வழிகாட்டிய தெய்வமே!
கண்ணிழந்த குருடராய் கண்ணீரில் கரையும் நாம்
எண்ணியபடி வந்து திருமுகம் காட்ட மாட்டீரோ?
உடல்தான் மறைந்தது; உங்கள் உருவம் மட்டும்
எமது நெஞ்சங்களில் நிலைத்தே நிற்கின்றது!

தகவல்:
சி.கிரி
(மகன்-லண்டன்)
(35590)(39-14-19-26)

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.



உ

குடத்தனை வடக்கு
அருள்மிகு



**நாலாம்பனைச் சித்தி விநாயகர் ஆலய**

# மஹாகும்பாபிஷேக விழா

ஆவணி 9 (25-08-2004) புதன்கிழமை
காலை பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பம்.
ஆவணி 10 (26-08-2004) வியாழக்கிழமை
காலை 8மணி முதல் மாலை 4மணிவரை
பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல்.
ஆவணி 11 (27-08-2004) வெள்ளிக்கிழமை
காலை 6.00 மணிக்கு விசேட தீபாராதனை.

**காலை 8.11மணிக்கு ஸ்தூபி அபிஷேகம்
அதைத் தொடர்ந்து காலை 9.23 மணி
வரைக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில்
மஹாகும்பாபிஷேகம், பின்பு தசதர்சனம்,
மகாபிஷேகம், ஆசியுரைகள் இடம்பெறும்.**

கும்பாபிஷேக பிரதமகுரு:
**சிவாச்சார்ய ஞானபானு சிவஸ்ரீ வ. வே. தியானந்தராசாக் குருக்கள்**
*(தூமபனை, தம்புருவளை சித்திவிநாயகர், வரதவிநாயகர் கோயில்கள்)*

☞ அடியார்கள் கும்பாபிஷேகத்துக்குத் தேவையான பால், இளநீர், பூ, மாலை, வில்வம் என்பவற்றைக் கொடுத்து உதவவும். அனைவரையும் விநாயகர் அருள்பெற வருமாறு அழைக்கின்றோம்.

குடத்தனை வடக்கு,
குடத்தனை. (35501)(26-14-19)

- ஆலய பரிபாலன சபையினர்.


## பல்கலை. அனுமதி செப்.3 இறுதித்திகதி

யாழ்ப்பாணம்,ஒக.24

கடந்த மே மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பப்படிவங்களை அடுத்த மாதம் 3 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைககுழு கேட்டுள்ளது. (3-201)

## பாதுகாப்புச் செயலர் திருமலை விஜயம்

திருகோணமலை,ஒக.24

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் திருகோணமலையில் நேற்றுமுன தினம் படையினரைச சந்திததுப் பேச்சுக் களை நடத்தினார்.

திருகோணமலைத் துறைமுகத்தைச் சுற்றிப் பாதுகாப்புப் பதுங்குகுழி அமைக் கப்பட்டு வருவதாக வும், பெருமளவான படையினரை நிலை கொள்ள வைததுள்ள தாகவும் தெரிவிக்கப் பட்டுள்ள குற்றச்சாட் டுக்கள் தொடர்பில் நேற்றுமுனதினம் இடம் பெற்ற பேச்சுக்களில் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது. (13)


# ஆறாம் மாத நினைவஞ்சலி

மலர்வு 31 - 07 - 1920





உதிர்வு 24 - 02 - 2004

## அமரர் செல்லப்பா குமாரசுவாமி (Rtd. MLT)

மாறாத அன்பினால் மகிழவைத்த எம் தெய்வமே!
தீராத துயர் தன்னில் துவள வைத்து எங்கு சென்றீர்?
மூவிரண்டு மாதமாய் உமை நினைந்து வாடும் நாம்
உமது பாதார விந்தமதில் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

பத்தாவத்தை,
இளவாலை. (34817) (33-14-19-26)

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி,
உற்றார், உறவினர்கள்.



Dialog GSM
kit
எந்நேரமும் உன்னுடன்..

**டயலொக்**
கையடக்கத் தொலைபேசி
அட்டைகளை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**WESTERN UNION** | **MONEY TRANSFER**
வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
ஒரு சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைத்திட
எம்மை நாடுங்கள்!

பாடசாலை மாணவர்களுக்கும்
அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற
சகல விதமான



**SILVER SHIELD SOCKS**
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட

ஸ்ரீ முருகன் **SRI MURUGAN** 303,K.K.S.Road Jaffna. ☎ 021 222 5392
தொலைத் தொடர்பகமும் முகவர் தபாலகமும் Tele Communication & Agency Post Office. E.mail del-smskr@eureka.lk Fax : 222 3435



JAFFNA CHAMBER OF COMMERCE
யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

# யாழ். வணிகர் கழகம் நடத்தும்
# மாபெரும் யாழ். வர்த்தகக் கண்காட்சி-2004
## ஒகஸ்ட் 27 தொடக்கம் 29 வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தென்னிலங்கை உற்பத்தியாளர்களும் உள்ளூர் உற்பத்தியாளர்களும்
இறக்குமதியாளர்களும் பங்கு பற்றும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி ஒகஸ்ட் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 29ஆம்
திகதிவரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். இக்கண்காட்சியில் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வர்த்தகர்கள்,
கல்வி அறிவியல் சார்ந்தவர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறுகைத்தொழில் சார்ந்தவர்கள் மற்றும்
ஆர்வம் உள்ளோர் அனைவரையும் இதில் பங்குபற்றிப் பயன்பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

~யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

(C/36735)

# தொலைபேசிக் கட்டணத்தை நீங்களே கணித்துக்கொள்ளலாம்

**இன்று நாளாந்த வாழ்வோடு இணைந்துவிட்டது தொலைபேசிப்பாவனை. ஆயினும், தொலைபேசிக்கட்டணம் எவ்வாறு கணிக்கப்படுகின்றது என்பது நம்மில் பலருக்கும் தெரிவதே இல்லை.**

**தொலைபேசிக்கட்டண அறவீடு மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளை இந்தக் கட்டுரையில் அலசுகின்றார் தொலைபேசிப்பாவனையாளரான கட்டுரையாளர். அவரது கட்டுரையின் முதற்பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. அதன் இரண்டாம் பகுதி இன்று பிரசுரமாகிறது.**

கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
பௌதிகவியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நீங்கள் உபயோகிக்கும் அழைப்பு அலகுகளைக் கணிப்பதற்கு இலகுவான முறையை அட்டவணை : 5 இல் காட்டியுள்ளேன். நீங்கள் எப்போது, யாருக்கு அழைப்பு எடுக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. அது உச்ச, சிக்கன, கழிவு நேரமா என்பதிலும், உள்ளூர், நீண்டதூர அழைப்பா? என்பதிலும் எவ்வளவு நேரம் தொடர்ச்சியாக உரையாடுகிறீர்கள் என்பதிலுமே தங்கியுள்ளது. அதற்கேற்றவாறே இந்த அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை : 5**

அட்டவணை : 5 இலுள்ள சில உதாரணங்களைப் பாருங்கள். முதலாவது உதாரணத்தில் தொலைபேசி வியாழக்கிழமை, காலை 9.00 மணியளவில் 3 நிமிடம் 35 வினாடி உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இது உச்ச நேரம், நீண்டதூரஅழைப்பு என்பதால் ஒரு அழைப்பு அலகிற்குரிய காலம் 1/2 நிமிடங்களாகும். இங்கு 35 வினாடிகள் என்பது 1/2 நிமிடத்திலும் 5 வினாடிகள் அதிகமாகும். எனவே 3 நிமிடத்தில் 6 அலகுகளும், 1/2 நிமிடத்தில் 1 அலகும், மீதியுள்ள 5 வினாடிகள் 1 அலகும் என மொத்தமாக (6+1+1=) 8 அழைப்பு அலகுகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டாவது உதாரணத்தில் நீண்டதூர அழைப்பு கழிவு நேரத்தில் என்பதால் ஓர் அழைப்பு அலகுக்காலம் 9 நிமிடங்களாகும். இதே போன்று மூன்றாவது உதாரணத்தில் உள்ளூர் அழைப்பு உச்சநேரத்தில் என்பதால் ஒரு அழைப்பு அலகுக்காலம் 1 நிமிடம் எனவும் நான்காவது உதாரணத்தில் நீண்டதூர அழைப்பு சிக்கன நேரத்தில் என்பதால் ஒரு அழைப்பு அலகுக் காலம் 2 நிமிடம் எனவும் எடுத்துக் கணிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது உதாரணம் சற்று வித்தியாசமானது. இங்கு உரையாடல் சிக்கன நேரத்தில் ஆரம்பித்து கழிவு நேரத்திற்குச் செல்கிறது. ஆகையால் சிக்கன நேரத்தில் கதைக்கப்பட்ட 1 நிமிடம் ஒரு அழைப்பு அலகாகவும், தொடர்ந்து கழிவு நேரத்தில் கதைக்கப்பட்ட 20 வினாடிகள் இன்னோர் அலகாகவும் கணிக்கப்படுகிறது. எனவே நீங்கள் 1 நிமிடம் 20 வினாடிகள் தொடர்ச்சியாகக் கதைத்தாலும் அது 2 அழைப்பு அலகுகளாகவே கருதப்படுகிறது. மேலும் நீங்கள் எந்தக் கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பு எடுத்தாலும், அது ஒரு நெடுந்தூர அழைப்பாகவே எப்போதும் கருதப்பட்டு, உபயோகிக்கும் நேரத்தைப் பொறுத்து அட்டவணை:4 இல் உள்ளது போன்றே கட்டணம் அறவிடப்படுகிறது.

இவ்வாறு நாம் தொலைபேசியில் உரையாடும்போது எவ்வளவு அழைப்பு அலகுகள் செலவாகிறது என குறித்து வந்தால் நமது செலவீனத்தை பெருமளவு குறைக்கலாம். அத்துடன் உங்களிற்கு தொலைபேசி அழைப்பு வரும்போது நேரத்தைப் பொறுத்து உங்கள் உரையாடல்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். அந்தநேரம் இன்னொருவரின் பணம் செலவாகிக் கொண்டிருக்கும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

மேற்குறிப்பிட்ட பாவனைக்கட்டணத்தை விட, பாவனையின் அளவைக் கருத்திற்கொள்ளாத மாதாந்த வாடகையொன்றும் அறவிடப்படுகிறது. நான்கு வகையான வாடகைகள் உள்ளன. தொலைபேசி இணைப்பிற்கு விண்ணப்பிக்கும்போதே நாம் எந்தப் பிரிவுக்குரியவர் என்பதைக் குறிப்பிடவேண்டும். தற்போதைய நிலைமையின்படி பின்வரும் கட்டணங்கள் வாடகையாக அறவிடப்படுவதாக அறியமுடிகிறது.

1. வதிவிட தொலைபேசி ரு : 569.25
2. உத்தியோகபூர்வ தொலைபேசி ரு. 1437.50
3. வர்த்தக தொலைபேசி ரு: 1437.50
4. மத ஸ்தாபன தொலைபேசி ரு: 57.50

உங்கள் பட்டியல் சம்பந்தமான ஏதாவது விவரம் தேவைப்படின் சுலபமாக 122 என்ற இலக்கத்தைச் சுழற்றுங்கள். பின்னர் தமிழில கதைக்கவேண்டுமாயின் 3 என்ற இலக்கத்தைச் சுழற்றி உங்கள் பிரச்சினை பற்றி விசாரித்து அறிந்துகொள்ளலாம்.

உங்களிற்கு நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு தேவையெனின் ரூபா 2,500/= செலுத்துவதன் மூலம் அந்த இணைப்பைப் பெற்றுக்கொள்ளலாம். இது தவிர SLT-PLUS என்னும் விசேட பொதியும் உள்ளது. இதற்கு நீங்கள் மாதாந்த வாடகையாக ரூபா 75/= செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இப்பொதியில் சர்வதேச நேரடி இணைப்பைத் தவிர, காத்திருக்கும் அழைப்பு, சுருக்கச் சுழற்சி, தூரிதமார்க்கம், அழைப்பை இடம்மாற்றுதல், முத்தரப்பு கூட்டுரையாடல், வாடிக்கையாளர் இல்லாதவேளைக்கான சேவை போன்ற பல வசதிகள் உள்ளன. இவ்வசதி சாதாரண குடும்பத்திற்கு அவசியமற்றது. ஆனால் உத்தியோகபூர்வ, வர்த்தக ஸ்தாபனங்களிற்கு மிகவும் பயனுள்ளது. யாழ்ப்பாணத்தில் தொலைபேசி இணைபபு பெற்றுக்கொண்ட பலரிற்கு SLT-PLUS பொதி இணைப்பு வழங்கப்பட்டதாக அறிந்தேன். ஆனால் யாழ்ப்பாணத்தில் தற்போது இப்பொதி வசதி இல்லை எனவும் அறிந்தேன். இதனால் வாடிக்கையாளர்கள் வீணாக மாதாந்தம் ரூபா 75/= (+VAT) இனைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் ரூபா 2,500/= பணவைப்பு மூலம் சர்வதேச நேரடித் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்திக்கொண்டால் இலாபகரமானதாக இருக்கும். சர்வதேச நேரடி அழைப்புகளிற் கான கட்டணம் வினாடிகளின் அடிப்படையில் கணிக்கப்படுவ தால், நீங்கள் உபயோகிக்கும் வினாடிகளின் அளவைக் குறித்து வைத்தால், பட்டியல் வரும்போது சரியா என பரிசோதிப்பது சுலபமாக இருக்கும்.

மின்மானி, நீர்மானி போன்று தொலைபேசி அழைப்பு அலகுகளை அளக்கும் மானிகள் பாவனையாளர்களின் வீடுகளில் பொருத்தப்பட்டிருந்தால், நாம் உபயோகிக்கும் அளவைக் கட்டுப்படுத்துவது சுலபம். இந்த வசதியை ஸ்ரீலங்கா ரெலிகொம் 'பல்சர்' (PULSER) எனும் மானியொன்றைப் பொருத்தி, மாத வாடகையாக ரூபா 250/= இனை அறவிட்டு செய்து கொடுக்கிறது. ஆனால் இதிலுள்ள பொறிமுறைச் சிக்கல் காரணமாக யாழ்ப்பாணத்தில் இவ்வசதி இல்லை என அறிந்தேன். கையடக்கத் தொலைபேசிகளில் மூன்று இலக்கங்களைச் சுழற்றி பாவனைக்கு மீதமாக உள்ள பணத்தின் அளவை அறிவது போல, நாம் உபயோகித்த அழைப்பு அலகுகளை அறிவதற்கும் ஒரு பொறிமுறையை ஸ்ரீலங்கா ரெலிகொம் செய்து கொடுத்தால் வாடிக்கையாளரை திருப்திப்படுத்தலாம்.

உங்கள் சர்வதேச நேரடித் தொலைத்தொடர்பு சேவையை இன்னொருவர் உபயோகிக்காதவாறு பூட்டிவைக்கலாம் அதற்கு நங்கள் விரும்பும் நாலு இலக்கங்களைக் கொண்ட இரகசியக் குறியீட்டைப் பயன்படுத்தலாம். உதாரணமாக நீங்கள் 1962 என்ற எண்ணை இரகசிய குறியீடாக கொடுக்க விரும்புகிறீர்கள் எனக் கொள்வோம். அப்பூட்டைப் போடுவதற்கு '162 1962 1962' என உங்கள் குறியீட்டு இலக்கத்தை 162 இற்கு பின் இரண்டு தரம் சுழற்றவேண்டும். பின்னர் பூட்டைத் திறப்பதற்கு '163 1962' எனவும், அதை மீளவும் பூட்டிவிட '164 1962' எனவும் சுழற்றி உபயோகிக்கலாம். இதேபோன்று யாழ்ப்பாணத்தில் ரூபா 600/= செலுத்துவதன்மூலம் நெடுந்தூர அழைப்புக்களை இரகசிய குறியீடொன்றின் மூலம் பூட்டிவைக்கும் வசதி உள்ளது. ஆனால் உள்ளூர் அழைப்புக்களை எவ்விதத்திலும் பூட்டிவைக்கும் வசதிகிடையாது. விரும்பினால் உங்கள் தொலைபேசியையே ஒரு பெட்டியினுள் வைத்துப் பூட்டு ஒன்றினால் பூட்டிவைக்கலாம்.

தொலைபேசியில் சாதாரணமாக உரையாடுவதை விட வேறு பல வசதிகளையும் நாம் பெற்றுக்கொள்ளலாம். இவை அனைத்தும் தொலைபேசி விவரக்கொத்தின் (Telephone Directory) ஆரம்பப் பக்கங்களில் விவரமாக கொடுக்கப்பட்டுள்ளன. வாசித்து அறிந்து கொள்ளுங்கள்.

மேலும் உங்களிற்கு தொந்தரவு செய்யும் அழைப்புக்கள் அடிக்கடி வரலாம். குறிப்பாக இளம் பெண்கள் வீட்டில் இருந்தால் இதற்குரிய சந்தர்ப்பம் அதிகமாகும். இவ்வாறான அழைப்புக்கள் வரும்போது உங்களைப் பற்றியோ அல்லது உங்கள் வீட்டில் இருப்பவர்கள் பற்றியோ எவ்வித தகவல்களையும் தெரிவிக்காதீர்கள். மீண்டும் மீண்டும் அழைப்பு வந்து பிரச்சினை நீடிக்குமாயின் உங்கள் பிரதேச தொலைத்தொடர்பு அலுவலகத்திற்கு அறிவியுங்கள். அண்மையில் எனக்கும் (?) இவ்வாறான தொல்லை ஏற்பட்டது. இது பற்றி நெல்லியடியிலுள்ள பிரதேச தொலைத்தொடர்பு அலுவலகத்திற்கு அறிவித்தேன். அதற்கு அவர்கள் எனது முறைப்பாட்டை எழுத்து மூலம் தந்தால், எங்கள் தொலைபேசியில் ஏதோவொரு செயற்பாட்டை தூண்டிவிடுவார்களாம். அதன் பின் அவ்வாறான வேண்டாத தொலைபேசி அழைப்பு வரும்போது அதைக் கண்டுபிடிக்கலாம் எனத் தெரிவித்தார்கள். ஆனால் அத்தொந்தரவு நீடிக்காததால் நான் அதைப் பயன்படுத்தவில்லை.

உங்கள் தொலைபேசிக் கட்டணம் நீங்கள் உபயோகித்த தொகையை விட மிக அதிகமாக வருகிறதா? அப்படியாயின் உங்களால் எதுவும் செய்யமுடியாது! ஸ்ரீலங்கா ரெலிகொம் இற்கு அறிவித்தாலும் எவ்வித பயனும் கிட்டாது. ஏனெனில் அவர்கள் உங்கள் மானி வாசிப்பின்படியே பணம் அறவிடுவார்கள். இதற்கு ஒரேவழி உங்கள் தொலைபேசியை இரத்துச் செய்வதாகும் அல்லது அத்தொலைபேசியை வேறு இடத்திற்கு மாற்றி உபயோகிக்கலாம். இதுவும் எனது உறவினர் ஒருவரிற்கு நேரடியாக ஏற்பட்ட சோக அனுபவமாகும். அவர் ரெலிகொம் இற்கு எழுதிய எத்தனையோ முறைப்பாடுகளிற்கு பதிலே வராமல் இறுதியில் தனது தொலைபேசியை யாருக்கோ விற்றுவிட்டதாகக் கூறினார்.

அரசாங்க, தனியார் அலுவலகங்கள் பலவற்றில் தனிப்பட்ட தொலைபேசி பாவனைக்கு உபயோகித்தவரிடமிருந்து நிமிடமொன்றிற்கு ரூபா 7.00/= அறவிடுகிறார்கள். அலுவலக நேரம் உச்ச நேரம் என்பதால் உள்ளூர் அழைப்பாயின் நிமிடமொன்றிற்கு ரூபா 3.00/= உம் நெடுந்தூர அழைப்பாயின் நிமிடமொன்றிற்கு ரூபா 6.00/= உம் அறவிடப்படவேண்டும். எல்லா அழைப்புக்களிற்கும் நிமிடத்திற்கு ரூபா 7.00 அறவிடப்படுவதால் உங்கள் அலுவலகங்களில் கணக்குக் காட்டப்படாமல் தேறக்கூடிய பணத்தை நீங்களே கணித்துப்பாருங்கள்.

இதை எழுதி முடிக்கும் தறுவாயில் மே மாத தொலைபேசிப் பட்டியலும் வந்து சேர்கிறது. அதனைக் கையில் கொண்டு வந்து தந்த என் மாமியார், அடுத்தடுத்து நான்கு மாதப் பட்டியல்கள் வந்து ஏராளமான பணம் கட்டுப்படாமல் இருக்குது. பணத்தைக் கொண்டுபோய்க் கட்ட உங்கட முறிந்த காலுடன் போகவும் முடியாது. இந்த நேரம் பார்த்து சும்மா பேப்பரிற்கு தொலைபேசிப் பாவனையை எவ்வாறு குறைக்கிறது என எழுதினால ரெலிகொம்காரர் வந்து எங்களின் தொலைபேசி இணைப்பை 'கட்' பண்ணப் போகின்றார்கள் என்று, முறைத்தபடி கூறினார். இதற்கு மேலேயும் எழுதினால் எனக்கு வீட்டில் சாப்பாடும் கிடைக்காது! எனவே முடிக்கின்றேன்.

*(முற்றும்).*

**அட்டவணை : 4**


| நாள் | நேரம் | பிரிவு | உள்ளூர் அழைப்புக்கள்: ஒரு அழைப்பு அலகு (நிமிடம்) | உள்ளூர் அழைப்புக்கள்: 201-1000 அழைப்பு அலகுகள் (ரூபா) | உள்ளூர் அழைப்புக்கள்: 1001-3000 அழைப்பு அலகுகள் (ரூபா) | உள்ளூர் அழைப்புக்கள்: 3000 இற்கு மேல் அழைப்பு அலகுகள் (ரூபா) | நெடுந்தூர அழைப்புக்கள்: ஓர் அழைப்பு அலகு (நிமிடம்) | நெடுந்தூர அழைப்புக்கள்: 201-1000 அழைப்பு அலகுகள் (ரூபா) | நெடுந்தூர அழைப்புக்கள்: 1001-3000 அழைப்பு அலகுகள் (ரூபா) | நெடுந்தூர அழைப்புக்கள்: 3000 இற்கு மேல் அழைப்பு அலகுகள் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி | 5.00 a.m. - 8.00 a.m. | சிக்கனம் | 3 | 3.00 | 2.75 | 2.50 | 2 | 3.00 | 2.75 | 2.50 |
| | 8.00 a.m. - 6.00 p.m. | உச்சம் | 1 | 3.00 | 2.75 | 2.50 | ½ | 3.00 | 2.75 | 2.50 |
| | 6.00 p.m. - 9.00 p.m. | சிக்கனம் | 3 | 3.00 | 2.75 | 2.50 | 2 | 3.00 | 2.75 | 2.50 |
| | 9.00 p.m. - 5.00 a.m. | கழிவு | 9 | 3.00 | 2.75 | 2.50 | 9 | 3.00 | 2.75 | 2.50 |
| சனி | 5.00 a.m. - 8.00 a.m. | சிக்கனம் | 3 | 3.00 | 2.75 | 2.50 | 2 | 3.00 | 2.75 | 2.50 |
| | 8.00 a.m. - 2.00 p.m. | உச்சம் | 1 | 3.00 | 2.75 | 2.50 | ½ | 3.00 | 2.75 | 2.50 |
| | 2.00 p.m. - 9.00 p.m. | சிக்கனம் | 3 | 3.00 | 2.75 | 2.50 | 2 | 3.00 | 2.75 | 2.50 |
| | 9.00 p.m. - 5.00 a.m. | கழிவு | 9 | 3.00 | 2.75 | 2.50 | 9 | 3.00 | 2.75 | 2.50 |
| ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்கள் | 5.00 a.m. - 9.00 p.m. | சிக்கனம் | 3 | 3.00 | 2.75 | 2.50 | 2 | 3.00 | 2.75 | 2.50 |
| | 9.00 p.m. - 5.00 a.m. | கழிவு | 9 | 3.00 | 2.75 | 2.50 | 9 | 3.00 | 2.75 | 2.50 |

**அட்டவணை : 5**

| திகதி | நாள் | தொலைபேசி இல. உள்ளூர்/ நீண்டதூரம் | அழைக்கும் நேரம் | அழைக்கும் கால அளவு (நிமிடம்/ வினாடி) | நேரப் பிரிவு | ஒரு அழைப்பு அலகிற்கான கால அளவு (நிமிடம்) | அழைப்பு அலகுகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 22.07.2004 | வியாழன் | 011xxxxxxx | 9.00 a.m. | 3 நிமி- 35 வினாடி | உச்சம் | ½ | 8 |
| 26.09.2004 | ஞாயிறு | 026xxxxxxx | 9.10 p.m. | 9 நிமி- 10 வினாடி | கழிவு | 9 | 2 |
| 27.09.2004 | திங்கள் | 226xxxx | 2.00 p.m. | 2 நிமி- 21 வினாடி | உச்சம் | 1 | 3 |
| 28.09.2004 | விடுமுறை | 024xxxxxxx | 8.50 p.m. | 7 நிமி- 12 வினாடி | சிக்கனம் | 2 | 4 |
| 29.09.2004 | புதன் | 011xxxxxxx | 8.59 p.m. | 1 நிமி- 20 வினாடி | சிக்கனம்→கழிவு | 2 → 9 | 2 |

# ஆடி விதை தேடி விதை...

"பருவத்தே பயிர் செய்" என்பது முதுமொழி. எந்த ஒரு கருமத்தையும் அவற்றுக்குரிய காலங் களில் செய்து முடித்துவிடவேண்டும்.



எமது முயற்சிகள் யாவற்றையும் உரிய நேரங்களில் வசதிகளைக் கண்டறிந்து மேற் கொண்டால் வெற்றி நிச்சயம் என்பதே அதன் கருத்தாகும்.

"ஆடி விதை தேடி விதை" என நமது முன னோர்கள் கூறுவார்கள். எமது முன்னோர்களால கூறி வைக்கப்பட்ட ஒவ்வொரு வார்த்தைகளும் ஏதோ ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்கு நன்மைதரக் கூடியவை களாகவே அமைந்துள்ளன.

ஆடி மாதங்களில் அதுவும் அமாவாசை தினத்தை அடுத்த காலங்களில் பயிர்களுக் கான விதைநடுகை செய்வதால் அவ்விதை கள் வீரியத்துடன் முளைத்தெழுந்து, அதிக பலன்களை அளிப்பதற்கு உகந்த காலமாகக் கொள்ளப்படுகின்றது.

ஆடிவிதை தேடி விதை என்று ஏன் சொல்லி வைத்தார்கள் என்பதை இங்கு ஆராய்வது

**கமமும் புலமும்**
தயாரிப்பு: ஜெயஸ்ரீ

பொருத்தமாகும்.

அமாவாசையை அண்மித்த காலங்களில் கடலில் ஏற்படும் நீர் மட்டத்தின் ஏற்ற இறக் கத்தைப் பொறுத்து, நிலத்தில் உள்ள நீர் மட்டத தினுடைய ஏற்றஇறக்கமும் மாறிக் கொண்டே இருக்கும்.

பௌர்ணமி காலங்களிலே கடல் நீர்மட்டம் மேலெழுந்து காணப்படும். அதற்கேற்றாற்போல நிலத்தின் கீழ் உள்ள நிலத்தடி நீரும் மேலே வந்து கொண்டிருக்கும்.

இதற்கமைய மண்ணில் உள்ள நுண்துளை களினூடாக நிலத்து நீரினுடைய நிலப் படுக்கை மேல் எழும். அதன்போது மண்ணில் உள்ள நுண்துளைகளினூடாக நிலநீர் மண்கரைசலும் மேல்நோக்கியதாகவே காணப்படும்.

சாதாரண காலங்களில் அதாவது சராசரி காலங்களில் இந்த நீர்மட்டம் கீழேயே இருக் கின்றது. அதற்கேற்றாற்போல மண்ணிலே இருக் கின்ற கரைசலும் கீழேதான் போய்க்கொண் டிருக்கும்.


அமாவாசை தினங்களிலோ அல்லது அதனை அண்டிய காலங்களிலோ மண் கரைச லில் உள்ள PH பெறுமானம் அதாவது கார அமிலத்தன்மை கூடியமண் கரைசலும் கீழே சென்று விடுகின்றது.

எனவே, இக்காலங்களிலே நாங்கள் விதை களை நடுகைசெய்யும் போது புதிதாக முளை வரும். இளம் விதைகள்,அவற்றின் வேர்கள் கார அமிலத்தன்மை கூடிய மண்கரைசலால் தாக்கமடையமாட்டாது. இலகுவாக முளைத்து வளர்வதற்கேற்ற சாதகமான சூழ்நிலை அமாவாசையை அடுத்த காலங்களில் ஏற்படுவதாகப் பழைய - மிகச் சரியாக - விஞ்ஞான பூர்வமான விளக்கங் கள் காணப்படுகின்றன.

எனவேதான் ஆடி விதை தேடி விதை என்ற வார்த்தைக்கேற்ப ஆடிமாதம் விதை களை நடுவதற்குரிய ஏற்றதொரு காலமாகக கருதப்படுகிறது.

அத்துடன், ஆடி அமாவாசையை அடுத்து வரும் காலங்களில் விதைகள் வீரியமுடன் வளர்வதற்கேற்ற ஒரு சூழலும் காணப்படு கின்றது.

ஆடிமாதம் கோடைகாலத்தின் நடுப் பகுதி



யாகக் காணப்படுகின்றது. இதனால், மண் ணின் வரட்சியின் தாக்கம் அதிகரித்துக் காணப்படும். ஆடி மாதத்திலே பொது வாகச் சூழலில் காணப்படுகின்ற களைகள் மற்றும ஏனைய பீடைகளுக்குரிய விருந்து வழங்கித் தாவரங்களும் அரிதாகவே காணப்படுகின்றன. கடும் வரட்சி காரணமாக அவை செயல்வலுவிழந்து காணப்படும்.

**விருந்து வழங்கித் தாவரங்கள்**

ஒரு தாவரம் அல்லது பீடை அல்லது ஒரு உயிரினம் தன்னுடைய வாழ்க்கை யைக் கொண்டு நடத்துவதற்கு - தாக்குப் பிடித்து வாழ்வதற்கு - பிரதானமான வேறு ஏதோ ஒன்றின் துணையில் தான் தங்கி இருக்கும்

அவற்றுக்குரிய உணவுப் பொருள் கள் பற்றாக்குறை யாக இருக்கும் நேரங் களில் அதற்கு ஈடான தனக்கு விருப்பமான ஏதோ ஒரு குறிப்பிட்ட தாவர வகையில் தங்கி இருக்கும்.

உதாரணமாகக் கத்தரிச் செடியில் வெண்ஈ என்றொரு பீடை காணப்படுகின் றது. இந்த வெண்ஈயை எடுத்துக் கொண் டால், அதன் பிரதான உணவு கத்தரி அல் லது சணலா கத்தான இருக்கும். கத்தரியோ சணலோ இல்லாத - கிடைக்காத - காலங் களிலே அவை கிலுகிலுப்பை, கடுகு நாவல் போன்ற வரட்சியைத் தாங்கும் காட்டுத் தாவ ரங்களின் சாற்றை உண்டு வாழ்கின் றன.

தமக்குப் பிடித்தமான உணவாக இல்லாவிடினும், தமது உயிரைத் தாக் குப் பிடிப்பதறகாக இவற்றை உண்டு காலத்தைக் கழிககின்றன.

இக்காலங்களில்,. அவை உடல் வளர்ச்சியை அடையமாட்டா. குடித் தொகை அதிகரிப்புக்கான சக்தியும் அதாவது சத்தான உணவு அவற்றுக் குக் கிடைக்கமாட்டாது. காட்டுத் தாவ ரங்கள் அவற்றின் குடித்தொகையை அழிந்து போகவிடாமல் பாதுகாக்கின்றன.


நெற்பயிரில் காணப்படும் களைசந்துக குத்தியின் பிரதான உணவு நெல். நெல் கிடைக்காத வேளைகளில் இவை கோழிச்சூடன், நெற்சப்பி போன்ற வற்றை உண்டு தமது உயிரைத் தாக்குப்பிடிக்கின்றன. நெல் இல்லாத காலங்களில்கோழிச் சூடன்களும், நெற்சப்பிகளும், சந்து குத்திகளின் குடித்தொகையைப பாதுகாத்துக் கொள்கின்றன. ஆனால், குடிப்பெருக் கம் ஏற்படமாட்டாது.

பீடைகள் முற்றாக அழிந்து போகாமல் பாதுகாத்து வைத்திருக் கும். இவை போனற தாவரங்களையே விருந்து வழங்கித் தாவரங்கள் என அழைக்கின்றோம்.

விருந்து வழங்கித் தாவரங்களும், பீடைகளும் கடும்வரட்சி காரணமாகச் செயல் வலுவிழந்து அமாவாசையை அடுத்த காலங் களில் உறக்கநிலையில் வாழ்ந்து கொண்டி ருக்கும்.



பின்னர் மழைபெய்து மரம், செடிகள் தளிர்விடும் காலங்களில் இந்தப் பீடைகள் அவற்றில் வந்து தங்கி இருந்து, தங்களுடைய குடித்தொகையைப் பெருக்க ஆரம்பிக்கின்றன. அதன் பிற்பாடே இவை பயிர்களுக்குத் தாவு கின்றன.



ஆடி மாதத்திலே சாதாரணமாகக் காணப் படும் சுற்றுச்சூழலிலே இந்த விருந்து வழங்கி களும் களைகளும் காணப்படுவது மிகவும் அரிதாகவே இருக்கும். அவை செயல்வலு விழந்து உறக்க நிலையில் தம் உயிரை மட்டும் பாதுகாத்து வைத்துக் கொண்டிருக் கும்.

இக்காலங்களிலே புதிதாக விதைகளை நாம் நடுகை செய்யும்போது இப்பீடைத் தாக் கங்களால் அவை பாதிப்படையமாட்டா. பயிர் கள் யாவும் ஆரோக் கியமாகவும், வீரி யத்துடனும் வளர் வதற்கேற்ற சூழல் ஆடி மாதத்தில் தான் அமைந்து காணப்படு கின்றது.

**பரிபூர்ணா**

இக்காலங்களிலே கொடிப்பயிர்களைப் பயிரிட்டால் அவை சிறப்பாக வளரும். பாகல், புடோல், பயற்றை, பீர்க்கு, அவரை போன்ற கொடிப்பயிர்கள் ஆடிமாதத்திலே நடுகை செய் வதற்கேற்ற உகந்த காலமாக அமைவதால் தான் 'ஆடி விதை தேடி விதை' என எமது ஆனறோர்கள் சொல்லி வைத்துள்ளார்கள்.

❋

**தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள மருந்தகத்தில் பணிபுரிவதற்கு அனுபவமுள்ள பெண் ஊழியர் கள் தேவை.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
66/1, அம்மன் வீதி,
(யாழ்பாடி வீடுதிக்கு முன்னால்)
(35589) கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**31ஆம் நாள் நினைவஞ்சலியும்**
**வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 12 - 01 - 1926



மறைவு 25 - 07 - 2004

**அமரர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்**

நகர்ந்தது மாதம் ஒன்று
நாம் இங்கு ஆறவில்லை - இன்றும்
வேண்டுவர் வேண்டியதைத் தரும் அந்தச் சிவனிடம்
வேண்டிடுவோம் ஆத்மசாந்தி கொடு - என்று.
சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (24.08.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*120, சிவன்கோவில் றோட்,*
*திருநெல்வேலி தெற்கு,*
*யாழ்ப்பாணம்.*

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(35609)(42-19)

**உதயனின் ஒலிம்பிக் கோலாகலம்**

கூப்பனை அனுப்ப இன்றே இறுதிநாள்

எதென்ஸ் 2004

**நீங்கள் செய்யவேண்டியது....**

ஒலிம்பிக் போட்டி குறித்த கேள்வி அடங்கிய கூப்பன் உதயனில் பிரசுரமாகிறது. நீங்கள் அதனைப் பூர்த்திசெய்து 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள உதயன் பணிமனையில் நேரிலோ அல்லது தபால் மூலமோ இன்று இரவு 7.00 மணிக்கு முன்சேர்ப்பிக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒலிம்பிக் கோலாகலம் எனக் குறிப்பிடவும் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

முதல் பரிசு யாழ். மின்னகம் வழங்கும் தொலைக்காட்சிப் பெட்டி
இரண்டாம் பரிசு பிறவுண் அன் கம்பனி வழங்கும் VCD ஸ்ரீறியோ செற்
மூன்றாம் பரிசு சொனி சிடில்ஸ் வழங்கும் 2 in 1 றேடியோ
நான்காம் பரிசு பவர் செலூலர் வழங்கும் கைத்தொலைபேசி
ஐந்தாம் பரிசு ஐ.ஐ.எஸ். வழங்கும் கலர் பிரிண்டர்
ஆறாம் பரிசு யமஹா பிளாஸா வழங்கும் மோ.சைக்கிள் உபகரணங்கள்
ஆறுதல் பரிசுகள் சிவகணேசன் ஸ்ரோர் வழங்கும் ஆயத்த ஆடைகள்

**உதயனின் ஒலிம்பிக் கோலாகலம்**
**எதென்ஸ் ஒலிம்பிக் 2004**

28 ஆவது ஒலிம்பிக் போட்டியின் முடிவில் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடிக்கப்போகும் நாடு எது?........................

உதயன், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
முடிவு திகதி ஒகஸ்ட் 24

முழுப்பெயர்..................................................
முகவரி ..................................................
..................................................
அ. அட்டை இல..........................................

**விதிகள்**

- ★ ஒருவர் எத்தனை கூப்பன்களும் அனுப்பலாம். ஆனால் போட்டோ பிரதிகள் ஏற்கப்படமாட்டா.
- ★ சிறுவர் சிறுமியர் பெற்றோரின் அடையாள அட்டை எண்களைப் பயன்படுத்தலாம்.
- ★ உதயன் மற்றும் அதன் சகோதர நிறுவனங்களின் ஊழியர்கள் மற் றும் அவர்களது குடும்பத்தினர் போட்டியில் பங்கேற்கமுடியாது.
- ★ நடுவர் குழுவின் முடிவே இறுதியா னது.
- ★ போட்டி முடிவு குறித்து எந்தவித விளக்கம் கோரல்களோ தொடர்பு களோ ஏற்கப்படமாட்டா.

# இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் இலங்கை அணி வெற்றியீட்டியது

கொழும்பு,ஓக.24

இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே கொழும்பில் நடைபெற்றுவரும் ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டியிலும் இலங்கை அணி வெற்றியீட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பு ஹெத்தாராம மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களை எடுத்தது. அணியின் சார்பில் சங்ககார 63 ஓட்டங்களையும் உப்புல் சந்தன ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களையும் அணித் தலைவர் அத்தப்பத்து 26 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணியின் சார்பில் ஜக்கலிஸ் 20 ஓட்டங்களுக்கு 3 விகெட்டுக்களையும் நிற்னி 50 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

214 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதனால் இலங்கை அணி 37 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. தென்னாபிரிக்க அணியின் சார்பில் ஷேன் பொலக் 54 ஓட்டங்களையும் குளூஸ்னர் 40 ஓட்டங்களையும் எடுத்தனர். இலங்கை அணியின் சார்பில் பந்துவீச்சில்



நுவன் சொய்ஸா 26 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும் டில்ஷான் 52 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக நுவன்சொய்ஸா தெரிவானார். இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டி நாளை புதன்கிழமை பகலிரவுப் போட்டியாக நடைபெறவுள்ளது.

(10)

## உதைபந்தாட்டப் பயிற்சிமுகாம்

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஆதரவுடன் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியின் விளையாட்டுத்துறையினர் யாழ்நகரத்தில் உள்ள பாடசாலைகளின் 19,17,14 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியின் பயிற்சியாளர் டி.சிறிசேனவும் அவரது குழுவினரும் பயிற்சியினை வழங்கவுள்ளனர். சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இந்தப் பயிற்சி முகாம் நடைபெறும். (10-190)

## சுண்டுக்குழி சனசமூகநிலைய அணி வெற்றி

சுண்டுக்குழி கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தின் 4ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 5 பேர் கலந்துகொள்ளும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் சுண்டுக்குளி சனசமூகநிலைய அணியினர் வெற்றியீட்டியுள்ளனர்.

இறுதியாட்டத்தில் கொய்யாத்தோட்டம் ஐக்கிய வி.க. அணியை எதிர்த்து சுண்டுக்குளி சனசமூக நிலைய அணி மோதியது. இதில் சுண்டுக்குழி சனசமூக நிலைய அணி 15:01, 15:11 என்ற செற் கணக்கில் வென்று வெற்றிக் கிண்ணத்தினைத் தனதாக்கிக்கொண்டது.

(10-190)

# முத்தரப்புத் தொடரின் முதல் போட்டியில் பாகிஸ்தான் அணிக்கு அபார வெற்றி!

அம்ஸ்ரடாம்,ஓக.24

ஹொலண்டில் நடைபெற்றுவரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி இந்திய அணியை 66 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியின் ஆரம்பத்தில் மழை குறுக்கிட்டதால் 50 ஓவர்களிலிருந்து 36 ஓவர்களாகக் குறைக்கப்பட்டு ஆட்டம் ஆரம்பமாகியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சஹீட் அப்ரிடி அதிரடியாக ஓட்டங்களை எடுத்தபோதிலும் 19 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் அகர்கரின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அதனால் பாகிஸ்தான் அணியின் ஓட்ட எண்ணிக்கையின் வேகம் குறைவடைந்தது. பின்னர் பாலாஜியின் பந்துவீச்சில் யஸீர் ஹமீட்டும் பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் உல் ஹக்கும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால், அணி இக்கட்டான நிலையை எதிர்கொண்ட வேளையில் மழை மீண்டும் குறுக்கிட்டது.

இதன் காரணமாக ஆட்டம் மீண்டும் நிறுத்தப்பட்டது. பின்னர் ஆட்டம் ஆரம்பமாகிய போது மேலும் 3 ஓவர்கள் குறைக்கப்பட்டு 33 ஓவர்கள் எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி, 33 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுகளை இழந்து 193 ஓட்டங்களை எடுத்தது. அணியின் சார்பில் சொஹைப் மாலிக் 68 ஓட்டங்களையும் அப்துல் ரசாக் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் மொயின் கான் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இந்திய அணியின் சார்பில் பந்துவீச்சில் எல்.பாலாஜி 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். 194 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் ஷேவாக் அதிரடியாக ஓட்டங்களை எடுத்தபோதிலும் சபீர் அஹமட்டின் பந்துவீச்சில் ஆட்டமிழந்ததை அடுத்து ஆட்டததின் போக்கு மாறத் தொடங்கியது.

இதனால் இந்திய வீரர்கள் எவரும் களத்தில் நிலைத்து நின்று ஆடமுடியாது பெவிலியன் திரும்பினர். லக்ஸ்மன் ஓரளவு ஓட்டங்களைப் பெற முனைந்தபோதும் அவரும் 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் கங்குலி 25 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் 27 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களை மட்டுமே இந்திய அணியால் பெறமுடிந்தது.

பாகிஸ்தான் அணியின் சார்பில் பந்துவீச்சில் சஹீட் அப்ரிடி 4 விக்கெட்டுக்களையும் சொஹைப் மாலிக் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனான சொஹைப் மாலிக் தெரிவானார். (10)

# டெஸ்ட் தொடரையும் இழந்தது மேற்கிந்தியா

லண்டன்,ஓக.24

இங்கிலாந்து - மேற்கிந்திய அணிகளுக்கிடையே இங்கிலாந்தில் நடைபெற்ற 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான இறு




திப் போட்டியில் இங்கிலாந்து அணி 10 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியதன் மூலம் தொடரின் 4 போட்டிகளிலும் வெற்றியீட்டித் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இப்போட்டியின் முதன் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 470 ஓட்டங்களை எடுத்தது. அணியின் சார்பில் பிளிண்டொப் 72 ஓட்டங்களையும் பெல் 70 ஓட்டங்களையும், அணித் தலைவர் வோகன் 66 ஓட்டங்களையும் ஆஷ்லி கில்ஸ் 52 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சார்பில் லோசன் 3 விக்கெட்டுகளையும் பிராவோ 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து தமது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி இங்கிலாந்து அணியின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 152 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. அணித் தலைவர் லாரா 79 ஓட்டங்களை எடுத்தார். இதனால் தமது இரண்டாவது இன்னிங்ஸையும் தொடர்ந்து ஆடவேண்டிய நிலை ஏற்பட்டது. மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு இரண்டாவது இன்னிங்ஸில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் 105 ஓட்டங்களையும் பிராவோ 54 ஓட்டங்களையும் போ 34 ஓட்டங்களையும் சந்தர்போல் 32 ஓட்டங்களையும் எடுத்தனர். இதனால் 318 ஓட்டங்களை எடுத்தது மேற்கிந்திய அணி. இங்கிலாந்து அணியின் சார்பில் அண்டர்சன் 4 விக்கெட்டுகளையும் ஹார்மிசன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

ஓர் ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் 4 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது. இங்கிலாந்து அணி. இதன் மூலம் 4:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. (10)

# ஊர்காவற்றுறை 24 மணிநேர மின்; முதற்கட்டப் பணிகள் ஆரம்பம்

ஊர்காவற்றுறை,ஓக.24

காரைநகர் ஊடாக ஊர்காவற்றுறைப் பிரதேசத்திற்கு 24 மணிநேர மின்சாரம் வழங்குவதற்கான முதற்கட்டப் பணிகள் இலங்கை மின்சாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறையிலும் காரைநகரிலும் இரண்டு கோபுரங்கள் அமைக்கப்பட்டு கடலுக்கு மேலாக மின் கேபிள்கள் பொருத்தப்படவுள்ளன. இதன் மூலம் ஊர்காவற்றுறை நகரிற்கு 24 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

தற்போது ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் 100 கிலோ வற்ஸ் மின்பிறப்பாக்கிகள் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனால் இங்குள்ள வைத்தியசாலையில் குளிரூட்டி இருந்தும் மருந்துகளை அதனுள் பேணமுடியாததால் அவைதேவைக்கேற்ப யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து பெறப்பட்டு வந்ததுடன், சிலவேளைகளில் நோயாளர்கள் மருந்து ஏற்றுவதற்காக யாழ்ப்பாணத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

"இதுபோன்ற பல்வேறு காரணங்களைக் கருத்திற்கொண்டு இப்பிரதேசத்திற்கு 24 மணிநேர மின் விநியோக வேலைகளை உடன் ஆரம்பிக்குமாறு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் இலங்கை மின்சார சபைக்குக் கடிதம்மூலம் வேண்டுகோள் விடுத் திருந்தது குறிப்பிடத்தக்கது.

(8-16)

## ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் வீதிகள் புனரமைப்பு

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் உலக உணவுத்திட்டத்தின் கீழ் நாரந்தனை, சுருவில், புளியங்கூடல், காரைநகர் ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகள், மயானங்கள் தற்பொழுது புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாக பிரதேசசபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் தெரிவித்தார்.

புளியங்கூடல் அம்மன் வீதி, சுருவில் இந்து மயானம், இந்து மயான வீதி, காரைநகர் தக்கரை நன்னை வீதி, நாரந்தனை இந்து மயானம், மயான வீதி ஆரியாவத்தை புளியங்கூடல் இணைப்பு வீதி ஆகியவற்றின் வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இப்பணியில் ஈடுபடுபவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (8-16)

## நள்ளிரவில் ஆலய உண்டியல் உடைத்துத் திருட்டு

கைதடி,ஓக.24

நள்ளிரவுவேளை ஆலயத்திற்குள் நுழைந்த திருடர்கள் அங்கு எரிந்துகொண்டிருந்த மின்குமிழை அகற்றிவிட்டு உண்டியலை உடைத்துப் பணத்தை அபகரித்த சம்பவம் ஒன்று கடந்த புதன்கிழமை கைதடி தென்கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

கைதடி தென்கிழக்கு குட்டிப்பிள்ளையார் எனும் ஆலயத்திலேயே இவ்வாறு உண்டியல் உடைக்கப்பட்டுப் பணம் அபகரிக்கப்பட்டுள்ளது. வருடத்தில் ஒரு தடவை மட்டும் இந்த உண்டியலில் உள்ள பணத்தை ஆலய நிர்வாகத்தினர் எடுப்பது எனவும் கடந்த வருடம் ஐப்பசி மாதத்திற்குப்பின் இதுவரை இந்த உண்டியல் திறக்கப்படவில்லை என்றும் இதனால் இங்கு பெருந்தொகைப்பணம் இருந்திருக்கும் எனவும் ஆலய நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இத்திருட்டுச் சம்பந்தமாகச் சாவகச்சேரிப் பொலீஸாருக்கு முறைப்பாடு செய்ததையடுத்து அவர்கள் தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-75)

# அரசின் உத்தேச இடைக்கால யோசனை குறித்தும் புலிகளுடன் பேசக்கூடாது என்கிறது ஜே.வி.பி.

அரசு முன்வைக்கவுள்ளதாகக் கூறப்படும் உத்தேச இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் தொடர்பாகக் கூட அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தக்கூடாது என்று ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பதாயின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்தே முதலில் பேசவேண்டும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துவிட்டனர். இந்த நிலையில், புலிகளின் யோசனைகளுக்கு மாற்றான ஒரு திட்டத்தை அரசு தயாரித்து வருகின்றது என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக அவர்களுடன் அரசு எந்தவிதமான பேச்சுக்களையும் நடத்தக்கூடாது என்று ஜே.வி.பி. கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது.

இப்போது அரசின் உத்தேச இடைக்கால நிர்வாக யோசனைகள் தொடர்பாகவும் கூடப் புலிகளுடன் அரசு பேசக்கூடாது என்று ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது. நிரந்தரத் தீர்வு குறித்து மட்டுமே புலிகளுடன் பேசவேண்டும் என்று அது தெரிவித்துள்ளது.

எந்தவோர் இடைக்கால நிர்வாகமாக இருந்தாலும் அதனை விடுதலைப் புலிகளிடம் கையளித்தால் அது தனிநாட்டைப் பிரித்துக் கொடுப்பதற்கு ஒப்பானது. எனவே, இடைக்கால நிர்வாகம் பற்றி விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் எந்தப் பேச்சையும் ஜே.வி.பி. கடுமையாக எதிர்க்கும் என்று அதன் தலைவர்கள் தெரிவித்தனர்.

சமாதானப் பேச்சுக்கள் மிக நீண்ட காலமாகத் தடைப்பட்டுள்ள நிலையில் - அதனை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் பின்னடைவுகளைச் சந்தித்து வரும் நிலையில் - ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பியின் இந்த நிலைப்பாடு சமாதான முயற்சிகளுக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (க-8)

# சேக்கிழாரின் பெரியபுராணத்துக்கு வடமராட்சி பௌராணிகர் உரை

வடமராட்சி, ஓக.24

சேக்கிழார் பெருமான் அருளிய பெரிய புராணத்துக்கு வடமராட்சியைச் சேர்ந்த பௌராணிக வித்தகர் ஒருவர் உரை எழுதியுள்ளார்.

வடமராட்சி புலோலியைச் சேர்ந்த பௌராணிக வித்தகர் க.சுப்பிரமணியம் என்பவரே இந்த உரையை எழுதியுள்ளார்.

இவரால் எழுதப்பட்ட உரை மூன்று பகுதிகளாகத் தனித்தனி நூலாக வெளியிடப்படவுள்ளன. இந்துசமயப் பிரமுகர்களின் உதவியுடன் இந்த உரைநூல் அச்சிடும் பணி ஆரம்பமாகியுள்ளது.

மூன்று பகுதிகளும் அச்சிட்டு முடிவடைந்ததும் பெரியபுராணம் உரை நூல் வைபவ ரீதியாக வெளியிட்டு வைக்கப்படும்.

இந்து சமயத் தத்துவ உரை நூல்களை மீளப் பிரசுரிப்பது அருகிவரும் வேளையில் ஈழத்தவர் ஒருவர் பெரியபுராணத்துக்கு உரை நூல் எழுதுவது வரவேற்கத்தக்கது எனச் சமயப் பிரமுகர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.(எ-173)

# லெப்.கேணல் ராஜனின் 12ஆவது நினைவு தினம்

வடமராட்சி,ஓக.24

சாள்ஸ் அன்ரனி படையணியின் முன்னாள் தளபதியான லெப்.கேணல் ராஜனின் 12ஆவது நினைவு தின நிகழ்வுகள் எதிர்வரும் 27ஆம் திகதி மாலை 4மணியளவில் மாதகலில் நடைபெறும்.

இவர் வீரச்சாவடைந்த இடமும் சொந்த இடமுமான மாதகலில் விநாயகர் ஆலய முன்றிலில் நிகழ்வு நடைபெறும்.

இந்நினைவு தினத்துக்கான ஏற்பாடுகளை தேசிய எழுச்சிப் பேரவையும் மற்றும் பொது அமைப்புக்களும் செய்துவருகின்றன. (8-173)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

மோட்டரோலா தொலைபேசி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: பொ.மோகன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சந்தி, புன்னாலைக் கட்டுவன். T.P.: 060 221 3380. (35604)

கண்டி வீதிக்கு அண்மையில் நாவற்குழியில் 32 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: திரு. R.S. பாலேந்திரா, 76, சபாபதி வீதி, தலையாழி, யாழ்ப்பாணம். T.P.: 0777 892 342. (35624)

### திருமண சேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1970, 1972 M.B.B.S டாக்டர், 1972 சிவில் என்ஜினியர், 1968 விரிவுரையாளர், 1972 ஆசிரியர் போன்றவர்களுக்கு அழகான மணப் பெண்கள் தேவை. தொடர்பு: கிருஷ்ணா திருமண சேவை, T.சுப்பையா, செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (35621)

### தவறிவிட்டது

மந்துவிலைச் சேர்ந்த செல்வி சின்னத்துரை கலைச்செல்வி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.746953518V), விசேட அடையாள அட்டை என்பன 15-08-2004 ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம், இராமைய. செட்டியார் லேனிலுள்ள சம்பந்தர் மொடேண் கிளினிக்கில் ஒப்படைத்துதவவும். (35623)

பொற்பதி வீதி, கொக்குவிலைச் சேர்ந்த செல்வி ராஜினி பொன்னம்பலம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 726971234V) கடந்த 21-08-2004 சனிக்கிழமை நல்லூர் ஆலய வீதிகளில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (35619)


**MASTER NUMEROLOGY**
**எண் சோதிடம்**

உங்கள் (ஆங்கில) பிறந்த திகதி எண்களைக் கணக்கிட்டு, அதிர்ஷ்ட இரகசியங்களைப் பயன்படுத்தி சகல பிரச்சினைகளிலும் இருந்து விடுவித்து திட்டமான அதிர்ஷ்டசாலிகளாகத் திகழ வழிவகுத்துத தருவோம். சலுகைக் கட்டணம் ரூபா 200/=. மிலேனியம் உல்லாச பயணிகள் விடுதி உங்களை அன்புடன் வரவேற்கிறது.

76/60, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
சந்திக்கும் நேரம்: 10a.m. To 3.p.m.
எண்கலை ஆசான்,
உங்கள் தொடர்புகளுக்கு: ஸ்ரீமாஸ்ரர்
T.P.: 021-2222810 சி.கே.கே.ஸ்ரீராஜராஜேஸ்வரன்.
(35622)(26-21-18-)

### தேவை

எமது நிறுவனத்தில் வேலை செய்வதற்குப் பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும்.
**சாமளி அச்சகம்,**
இல.11, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(35614) (21-18-39)

### பணியாளர் வெற்றிடம்

01) வெல்டர் (Welder)
02) தச்சுத் தொழிலாளி
03) அலுவலகப் பணியாளர் (பெண்)
04) வேலைத்தள உதவியாளர்
05) பாதுகாவலர் (ஆண்)
06) விற்பனைப் பிரதிநிதி

நேர்முகத்தேர்வு: 26-08-2004
வியாழக்கிழமை காலை 9.00மணிக்கு
தொடர்பு:
தலைமை அலுவலகம்
E.U.T., கந்தையா வீதி,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
T.P.: 712 373387.
காட்சி அறை
இல.57. K.K .S. வீதி.
சுன்னாகம்.
(35616)(21-26-18)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13-08-2002
உதிர்வு 24-08-2003

**செல்வி நாகேந்திரன் சஷ்ரீக்கா**

எமது அன்புக் குழந்தையின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.
பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.
(35620) (26-21-18)

## 14ஆம் வருட இதய அஞ்சலி



திருமதி
**இராஜேஸ்வரி கதிரவேலு**
திதி: நவமி 24-08-2004

தோற்றம் 07-02-1947
மறைவு 29-08-1990

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்த உங்களை இன்று நினைவு கூருகின்றோம்.

103/4, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர்.
(35626) (26-21-18)


## இணையத் தளம் ஊடாக 24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது

WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி

இணைய முகவரி: WWW.Wtrfm.com
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க
நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
26 உற்சவ நாள்களிலும்
(ஒகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம்
மூலம் செவிமடுத்து மகிழலாம்)

**உலகத் தமிழர் வானொலியுடன்**
நேரடியாக இணைய
MSN messenger chet மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969

உலகத் தமிழர் உறவுப் பாலமாக
உலகத் தமிழர் வானொலி

ஊடக அனுசரணை:- 'உதயன்'


## 20ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**நாகமுத்து மகாலிங்கம்பிள்ளை**



வல்வையைச் சேர்ந்த சிவபக்தரான நாகமுத்து மகாலிங்கம்பிள்ளை அவர்களுடைய 20ஆவது சிரார்த்த ஆண்டை, அன்னாரது வழித்தோன்றல்கள் யாவரும் நினைவு கூருகிறோம்.

கோகிலம்;
குச்சம் வீதி, வல்வெட்டித்துறை.
(35615)(21-39-18)

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தவப்பேறு :- 12-02-1928
சிவப்பேறு :- 25-07-2004

திருமதி
**மகேஸ்வரி அம்பலவாணர்**

நெஞ்சுக்குள் அனலாகி
நீறுபூத்த நெருப்புமாகி
பஞ்சுக்குள் மூண்ட தீப்போல்
பற்றி எரியும் எம்மனது
கண்களின் மணிகளாகி
இருவிழிகளின் ஒளியுமாகி
நின்ற நிலா மறைந்ததுவோ
நீண்ட தூரம் சென்றதுமேனோ?

**அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (24.08.2004) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம.**

"அக்கா அகம்"
கே.கே.எஸ். வீதி. இணுவில் மேற்கு.
அ.கிருபாமூர்த்தி (மகன்).
(35617)

## மரண அறிவித்தல்



**பேரம்பலம் கரிகாலன்**

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் கரிகாலன் 20.08.2004 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அனனா் பேரம்பலம் - சந்திரா ஆகியோரின் இளைய மகனும் கயாநிதியின் அன்புக் கணவரும் மதுசாவின் பாசமிகு தகப்பனாரும் தேவராசா - லீலாவதி ஆகியோரின் மூத்த மருமகனும் கடம்பேஸ்வரன் (சுவிஸ்), சந்திரகுமாரி (ஜேர்மனி), மஞ்சுளா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ஆனந்தராசா (ஜேர்மனி) மற்றும் உதயகுமார் (பிரான்ஸ்), மோகனா, கமல்ராஜ், விமல்ராஜ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-08-2004) செவ்வாய் மு.ப.11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதகல் கிழக்கு. மாதகல்.
தகவல்:
பே.கடம்பன் (சகோதரன்).
(35627)(26-21-18)

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்



**கப்டன் கவாஸ்கர் (இசைமாறன்)**
(முல்லை மாவட்ட மருத்துவப்பிரிவு பொறுப்பாளர்)
**கனகராசா பிறேம்சந்திரன்**

பிறப்பு 01-09-1969
வீரமரணம் 15-08-1994

பருத்திநகர் பெற்றமைந்தன் பருவத்தில் படித்துயர்ந்து
பக்குவமும் சிந்தனையும் பகுத்தறிவுப் பாங்கும்
கருத்தான கதைகூறும் கனதிமிகு கீனவானாய்
காலத்தே மண்மீட்பில் கணமறிந்து தானிணைந்தான்
பெருந்தலைவர் பட்டறையில் போராளி மருத்துவனாய்
பொறுப்புதனில் முல்லைப்பதி மாவட்ட கப்டனானான்
இருளகற்றும் அரும்பணியில் ஆகுதியாய்
ஆனவெங்கள்
இசைமாறன் ஏற்றவழி நாமிணைந்து வெல்வோமே.

- குடும்பத்தினர்.

பத்திரகாளி கோயில் ஒழுங்கை,
பருத்தித்துறை.
(35630)(42-21-18)

உதயனின்

# ஒலிம்பிக் கோலாகலம்

ஏதென்ஸ் 2004

## கிரேக்கத்துக்குத் தலைகுனிவு

28 ஆவது ஒலிம்பிக் போட்டியை நடத்தும் கிரீஸுக்குத் தலைகுனிவு ஏற்பட்டது.

ஊக்க மருந்து எடுத்துக்கொண்டார் என்று பளுதூக்குதல் பிரிவில் கிரேக்க வீரர் லியோனியாஸ் சம்பானிஸ் பெற்ற வெண்கலப்பதக்கம் பறிக்கப்பட்டது.

ஊக்கமருந்து பரிசோதனையில் சம்பானிஸ் ஊக்கமருந்து எடுத்துக்கொண்டது. நிரூபிக்கப்பட்டதாக சர்வதேச ஒலிம்பிக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது. அதையடுத்து அவர் பெற்ற வெண்கலப் பதக்கம் பறிக்கப்பட்டது. 33 வயதாகும் சம்பானில் ஆடவர் 62 கிலோ எடைப்பிரிவில் இப்பதக்கத்தைப் பெற்றிருந்தார்.

ஏற்கனவே கிரீஸ் தடகள நட்சத்திரங்கள் கோஸ்தாடினோஸ் கெந்தரீஸ், எகதெரனி, தானுகா ஆகியோர் ஊக்கமருந்து எடுத்துக்கொண்டதாக புகார் கூறப்பட்டது. விபத்தில் சிக்கிய அவர்கள் இறுதியில் ஒலிம்பிக் போட்டியிலிருந்து விலகினர்.

இந்த ஒலிம்பிக்கில் திட்டமிட்டிருந்த 3 ஆயிரம் பேருக்கான பரிசோதனைகளில் இதுவரை 1,500 பரிசோதனைகள் முடிக்கப்பட்டுள்ளன.

## பின்சென்ட் சாதனை

படகு வலித்தல் போட்டியில் பிரிட்டிஷ் வீரர் மேத்யூ பின்சென்ட் நான்காவது ஒலிம்பிக் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

ஒலிம்பிக் படகு வலித்தல் 4 நபர் போட்டிகள் எதென்ஸ் அருகில் உள்ள ஷினியாஸ் பகுதியில் நடந்தன.

பிரிட்டன் அணியில் முன்னணி வீரர் மேத்யூ பின்செண்ட் பங்கேற்றார். இந்தப் போட்டியில் எதிர்பார்த்தது போலவே பிரிட்டன் தங்கம் வென்றது. 42 வயதாகும் மேத்யூ பின்செண்ட் கைப்பற்றும் நான்காவது ஒலிம்பிக் தங்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இதுதவிர ஒலிம்பிக் வரலாற்றில் படகு வலித்தல் போட்டியில் தங்கம் வென்ற வயதான போட்டியாளர்களில் ஒருவர் என்ற சாதனையும் அவர் படைக்கிறார்.

## பன்னிரு பதக்கங்கள்

ஒலிம்பிக் போட்டிகளில் மொத்தம் 12 பதக்கங்கள் வென்று புதிய சாதனை நிகழ்த்தினார் அமெரிக்காவின் நீச்சல் வீராங்கனை ஜென்னி தொம்சன்.

தொடர்ந்து 4 ஒலிம்பிக்கில் பங்கேற்கும் 31 வயதாகும் ஜென்னி இதுவரை 8 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளார். ஆனால், இவை அனைத்தும் குழுப் பிரிவில் பங்கேற்றுப் பெற்றவைதான்.

இதன்மூலம் அமெரிக்காவின் மார்க் ஸ்பிட்ஸ், மாட் பியாண்டி ஆகியோரின் சாதனைகளை முறியடித்து நீச்சல் பிரிவில் அதிக பதக்கங்களை வென்றவராகத் திகழ்கின்றார் தாம்சன். எதென்ஸ் ஒலிம்பிக்குடன் ஓய்வுபெறப்போவதாக அவர் ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

## மகிழ்ச்சியும் ஏமாற்றமும்

சென்னையில் கைத்தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு இன்ப அதிர்ச்சியும், அதைத் தொடர்ந்து ஏமாற்றமும் ஏற்பட்டது.


'அஞ்சு, தங்கம் பெற்றார்' என்ற தகவல் நேற்றுமுன்தினம் பிற்பகலில் கைத்தொலைபேசிகளுக்கு எழுத்துச் செய்தியாக அனுப்பப்பட்டது. இதைப் பார்த்ததும் அனைவருக்கும் மகிழ்ச்சி.

இதை உறுதி செய்து கொள்ள தொலைக்காட்சியைப் பார்த்தனர். அதில் அவ்வாறு எந்தத் தகவலும் வரவில்லை.

மீண்டும் 'எஸ்.எம்.எஸ்' தகவலைப் பார்த்தபோது கடைசி வரியில் 'நகைக்கடையில் இருந்து' என்று பிரபல நகைக் கடையின் பெயர் போடப்பட்டிருந்தது. முழுமையாக மீண்டும் படித்தபோது அந்த நகைக்கடையில் இருந்து அஞ்சு, தங்கம் பெற்றார் என இருந்தது.

நீளம் தாண்டுதலில் இந்தியாவுக்கு ஒரு பதக்கத்தைப் பெற்றுத் தரும் நம்பிக்கை நட்சத்திரமாக அஞ்சு பாபிஜோர்ஜ் கருதப்படுகிறார்.

கேரளத்தைச் சேர்ந்த இவர், இந்தியா சார்பில் ஒலிம்பிக்கில் பங்கேற்கிறார். எனவே, இவர் தங்கம் பெற்றதாக வந்த செய்தி இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அது விளையாட்டாக வந்த தகவல் என்று தெரிந்ததும் ஏமாற்றம் ஏற்பட்டது.



ஒலிம்பிக்கில் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுவது 100 மீற்றர் ஓட்டப்போட்டியாகும். இம்முறை ஆண்களுக்கான 100 மீற்றர் போட்டியில் 9.85 வினாடிகளில் தூரத்தைக் கடந்து தங்கம் வென்றார் அமெரிக்காவின் ஜஸ்டின் கற்றன். போர்த்துக்கல்லின் பிரான்ஸிஸ ஒபிக்வெறு வெள்ளியும், மௌரிஸ் கிறீனி வெண்கலமும் வென்றனர்.

## மலரும் நினைவுகள்

1984ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதிவரையும் அமெரிக்காவின் 'லொஸ் ஏஞ்சல்ஸ்' நகரத்தில் 23ஆவது நவீன ஒலிம்பிக் போட்டி இடம்பெற்றது. 23 வகையான 221 போட்டிகள் இடம்பெற்ற இவ் ஒலிம்பிக்கில் 140 நாடுகளைச் சேர்ந்த 5ஆயிரத்து 263 வீரர்களும், ஆயிரத்து 566 வீராங்கனைகளும் பங்கு பற்றினர். நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் சீனா மீண்டும் இவ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றியது. பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி முதன்முதலில் இம்முறையே சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1980 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் இடம்பெற்ற 22ஆவது ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றுவதை அமெரிக்கா புறக்கணித்ததற்குப் பதிலடியாக இந்த 23ஆவது ஒலிம்பிக் போட்டியை ரஷ்யா புறக்கணித்தது. முதன்முதலில் இந்த ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்ட அமெரிக்கக் கறுப்பின தடகளவீரர் கார்ல் லூயிஸ் மொத்தமாக 9 பதக்கங்களை வென்றெடுத்தார். இவ் 23ஆவது ஒலிம்பிக் போட்டித் தொடரில் மட்டும் அவர் 4 தங்கப் பதக்கங்களை வென்றெடுத்துச் சாதனை ஏற்படுத்தினார். இந்த ஒலிம்பிக் போட்டிகளில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாய் அமைந்த மற்றுமோர் அம்சம் பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டும் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட மொரோக்கோ நாட்டின் 'நவல் எல்மௌதவாகல்' என்ற வீராங்கனை 'மொரோக்கோ' நாட்டுக்குத் தங்கப்பதக்கம் பெற்றுக்கொடுத்தது மட்டுமன்றி ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற முதல் முஸ்லிம் பெண்மணி என்ற பெருமையையும் பெற்றார். இந்த ஒலிம்பிக் போட்டியை நேரில் பார்வையிடும் பொருட்டு சுமார் 57 லட்சம் மக்கள் திரண்டதும் செய்தி சேகரிக்கும் பணியில் 9ஆயிரத்து 190 ஊடகவியலாளர்களும் இணைந்து செயற்பட்டமையும் ஒலிம்பிக் வரலாற்றில் மிகச் சிறப்பான அம்சமாக அமைந்தன.

வியெஸ்ரி

## பதக்கப் பட்டியல்
(நேற்று முற்பகல் நிலைவரம்)

| நிலை | நாடு | தங்கம | வெள்ளி | வெண்கலம் | மொத்தம |
|---|---|---|---|---|---|
| 01. | சீனா | 22 | 14 | 10 | 46 |
| 02. | அமெரிக்கா | 21 | 21 | 15 | 57 |
| 03. | ஜப்பான் | 13 | 06 | 07 | 26 |
| 04. | ஆஸ்திரேலியா | 12 | 08 | 12 | 32 |
| 05. | ஜேர்மனி | 10 | 09 | 12 | 31 |
| 06. | பிரான்ஸ் | 08 | 08 | 07 | 23 |
| 07. | ரஷ்யா | 07 | 13 | 16 | 36 |
| 08. | இத்தாலி | 07 | 06 | 07 | 20 |
| 09. | ரொமானியா | 06 | 03 | 02 | 11 |
| 10. | உக்ரைன் | 06 | 02 | 05 | 13 |
| 11. | தெ.கொரியா | 05 | 10 | 05 | 20 |
| 12. | பிரிட்டன் | 05 | 07 | 07 | 19 |
| 13. | கிரேக்கம் | 04 | 01 | 03 | 08 |
| 14. | நெதர்லாந்து | 03 | 06 | 08 | 17 |
| 15. | ஹங்கேரி | 03 | 04 | 01 | 08 |
| 16. | சுவீடன் | 03 | 00 | 01 | 04 |
| 16. | துருக்கி | 03 | 00 | 01 | 04 |
| 18. | பெலாரஸ் | 02 | 03 | 06 | 11 |
| 19. | போலந்து | 02 | 02 | 03 | 07 |
| 20. | ஸ்லோவேக்கியா | 02 | 02 | 01 | 05 |
| 21. | ஜோர்ஜியா | 02 | 01 | 00 | 03 |
| 22. | தாய்லாந்து | 02 | 00 | 02 | 04 |
| 23. | சிலி | 02 | 00 | 01 | 03 |
| 24. | நோர்வே | 02 | 00 | 00 | 02 |
| 24. | நியூஸிலாந்து | 02 | 00 | 00 | 02 |
| 26. | கனடா | 01 | 02 | 01 | 04 |
| 27. | பல்கேரியா | 01 | 01 | 05 | 07 |
| 28. | இந்தோனேஷியா | 01 | 01 | 02 | 04 |
| 28. | தெ.ஆபிரிக்கா | 01 | 01 | 02 | 04 |
| 30. | சிம்பாப்வே | 01 | 01 | 01 | 03 |
| 31. | எதியோப்பியா | 01 | 01 | 00 | 02 |
| 32. | டென்மார்க் | 01 | 00 | 05 | 06 |
| 33. | பெல்ஜியம் | 01 | 00 | 02 | 03 |
| 33. | பிரேஸில் | 01 | 00 | 02 | 03 |
| 35. | சுவிற்ஸர்லாந்து | 01 | 00 | 01 | 02 |
| 36. | ஐ.அரபு குடியரசு | 01 | 00 | 00 | 01 |
| 37. | ஸ்பெயின் | 00 | 06 | 01 | 07 |
| 38. | ஒஸ்ட்ரியா | 00 | 04 | 01 | 05 |
| 39. | செக்.குடியரசு | 00 | 03 | 03 | 06 |
| 40. | வடகொரியா | 00 | 03 | 01 | 04 |
| 41. | கியூபா | 00 | 02 | 06 | 08 |
| 42. | குரோஷியா | 00 | 02 | 02 | 04 |
| 43. | போர்த்துக்கல் | 00 | 02 | 00 | 02 |
| 44. | ஸ்லோவேனியா | 00 | 01 | 02 | 03 |
| 45. | எஸ்டோனியா | 00 | 01 | 01 | 02 |
| 45. | தைவான் | 00 | 01 | 01 | 02 |
| 47. | பின்லாந்து | 00 | 01 | 00 | 01 |
| 47. | ஹொங்கொங் | 00 | 01 | 00 | 01 |
| 47. | இந்தியா | 00 | 01 | 00 | 01 |
| 47. | கஜகிஸ்தான் | 00 | 01 | 00 | 01 |
| 47. | கென்யா | 00 | 01 | 00 | 01 |
| 47. | லிதுவேனியா | 00 | 01 | 00 | 01 |
| 47. | செர்.மொன்ரிநீக்ரோ | 00 | 01 | 00 | 01 |
| 54. | ஆர்ஜென்டினா | 00 | 00 | 02 | 02 |
| 54. | அஜர்பைஜான் | 00 | 00 | 02 | 02 |
| 56. | கொலம்பியா | 00 | 00 | 01 | 01 |
| 56. | எரித்திரியா | 00 | 00 | 01 | 01 |
| 56. | இஸ்ரேல் | 00 | 00 | 01 | 01 |
| 56. | ஜமெய்கா | 00 | 00 | 01 | 01 |
| 56. | மொங்கோலியா | 00 | 00 | 01 | 01 |
| 56. | டிரினிடாட் | 00 | 00 | 01 | 01 |

SHARP
be sharp
5 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்கு பிந்திய சேவை
பிறவுண் அன்ட் கம்பனி
69, ஸ்ரான்லி வீதி, யாழ் 021-222 5150

SONY
சீடில்சின் உத்தரவாத பத்திரத்தை வற்புறுத்தி வாங்கவும்
ஏக விநியோகஸ்தர்கள்:-
SIEDLES
No.11, Stanly Road, Jaffna
T.P: 021 222 6744

எப்பிரதேசத்திலும் அன்ரனா மூலம் இயங்கக் கூடிய மொபி ரெல் இணைப்புக்கள்
IDD இணைப்புக்கள் 23000/=
பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி
இல.185. முதலாம் மாடி. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P : 021 2227070

கணணித்துறையில் நீங்கள் ஓர் பட்டதாரியாக......
BTEC HND
"IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"
Institute of Informatics Studies (IIS)
# 100, Clock Tower Road, Jaffna
T.P : 021 222 2831/021 222 6933

Castrol Engine Oil From U.K
உங்கள் நெஞ்சைத் தொடும் யமஹா
From Japan
YAMAHA Plaza 298 KKS Road, Jaffna.
Castrol YAMAHA racing

"அழகிய ஜவுளிகளின் ஆலயம்"
சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
# 41.பெரிய கடை வீதி. யாழ்ப்பாணம்.
T.P- 222 2063

Abans நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோக சேவையில் பெற்றிட...
LG Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For Abans

# நஜாப்பில் முக்கிய பள்ளிவாசல் நோக்கி அமெரிக்கப் படையினர் முன்னேற்றம்

## நேருக்குநேர் போராடுவோம் என சதார் ஆதரவாளர் சூளுரை



ஈராக்கின் புனித நகர் நஜாப்பில் உள்ள இமாம் அலி பள்ளிவாசலை நோககி அமெரிக்க டாங்கிகள் முன னேறி வருகின்றன. இத னால் பதற்ற நிலை அதிக ரித்துள்ளது. எந்த நேரத்திலும் இரு தரப்பின ருக்குமான சண்டை உக்கிரமடையலாம்.

நஜாப்பில் நேற்றுக்காலை அமெரிக்கப் படையினர் வான் வழித்தாக்குதல்களை நடத் தியுள்ளனர். தரைமார்க்கமாகவும் பல மணி நேரம் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஒரே நேரத்தில் வானிலிருந்து 10 குண்டு கள் இமாம் அலி பள்ளிவாசலின் அருகிலுள்ள பகுதியில் வீழ்ந்து வெடித்தன. துப்பாக்கி வேட் டுச் சத்தங்கள் ஓயாமல் கேட்ட வண்ணமிருந தன என்று அங்குள்ள பொதுமகன் ஒருவர் செய்தி நிறுவனமொன்றுக்கு தெரிவித்தார். இத னால் பள்ளிவாசலின் ஒரு பக்க சுவர் சேதம டைந்துள்ளது. இத்தாக்குதலினால் பலர் இறந் திருப்பர் எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் அனேகர் பொதுமக்களே. அமெரிக் கப் படையினரும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இமாம் அலி பள்ளிவாசலைச் சுற்றிய பிர தேசங்களிலுள்ள பொதுமக்கள் பலர் பள்ளிவாச லுக்குள் தஞ்சமடைந்துள்ளனர்.

ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் என அனைத்துத் தரப்பினரும் தமது சொந்த இடங் களை விட்டு பள்ளிவாசலை நோக்கி இடம் பெயரத் தொடங்கியுள்ளனர். தாக்குதலினால் அவர்களும் பாதிப்படையக்கூடும் என அஞ்சியே இடம்பெயருகின்றனர்.

பேச்சுவார்த்தையைப் புறக்கணித்து அமெ ரிக்கப் படைகள் தாக்குதல்களை நடத்துவ தனால் நேருக்கு நேர் போராடத் தாம் தயாராக இருக்கிறார்கள் என்று சதாரின் மகதி கிளர்ச் சியாளர்கள் குழுவினர் சூளுரைத்துள்ளனர்.

இமாம் அலி பள்ளிவாசலைத் தாம் ஒரு போதும் தாக்கமாட்டோம். அதன் புனிதத் தன்மை பேணபபடும் என அமெரிக்கத் தரப்புச் செய்தி கள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாகவே பொதுமக்கள் அப்பள்ளிவாசலை நோக்கி விரை கின்றனர்.

நஜாப் நகர் நாளுக்கு நாள் யுத்தகளமாக மாறிவருகின்றது. இதனால் இது ஈராக்கில் இடைக் கால அரசுக்கும் அதன் பிரதமர் இயத் அல்லா விக்கும் பெரும் சவாலாக மாறியிருக்கின்றது.

அடுத்த ஆண்டு ஜனநாயக ரீதியிலான தேர் தல் ஈராக்கில் நடைபெறவிருப்பதும் குறிப் பிடத்தக்கது.

முன்னாள் சர்வாதிகார ஆட்சியாளர் சதாம் ஹுசைனின் வழக்கு விசாரணைகளும் நிலுவை யிலுள்ளன.

ஒரு பக்கம் ஷியா முஸ்லிம்களின்தும் மறு புறம் சுனி முஸ்லிம்களினதும் இன்னொருபுறம் சதாமின் ஆதரவாளர்களினதும் மற்றும் அல் கெய்டா தீவிரவாதிகளினதும் தாக்குதல்களுக்கு அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படை கள் முகம் கொடுத்து வருகின்றன.

சதார் நஜாப் நகரின் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கோடு உள்ளாரா? அல்லது போரிட்டு வெல்வாரா? என்ற சந் தேகம் எழுந்துள்ளது.

முன்னுக்குப்பின் முரணான அவரின் அறிக்கை களால் ஒரு நிரந்தரமான தீமானத்தை அமை திப் பேச்சாளர்களுக்கு எடுக்கமுடியாதுள்ளது.

அமெரிக்கப் படைகளும் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்காமல் தாக்குதல் நடத்தி வருகின்றன. அமெரிக்க இராணுவத்தினரின் விமானங்கள் நஜாப் நகரின் மேற்பரப்பில் பறந்துகொண்டிருக்கின்றன. (க-8)




# எல்சல்வடோர் மீது தாக்குதல் நடத்தப்போவதாக அல்-கெய்டாவின் துணை இயக்கம் மிரட்டல்

லண்டன்,ஓக.24

தென் அமெரிக்க நாடான எல்சல்வடோர் மீது தாக்குதல் நடத்தப்படுமென அல்-கெய்டா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய இஸ்லா மிய இயக்கம் ஒன்று மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படையினருடன் இணைந்து பணியாற்றுவதற்குப் புதிய இராணு வப் 'பிரிவொன்றினை எல் சல்வடோர் அரசு அண்மையில் ஈராக்கிற்கு அனுப்பிவைத்திருந்தது.

இதனைத் தொடர்ந்தே இந்தத் தீவிரவாத இயக்கத்தின் அச்சுறுத்தல் வெளிவந்துள்ளது. இருபது நாள்களுக்குள் ஈராக்கிலுள்ள தமது படைகளை எல் சல்வடோர் அரசு வாபஸ் பெற வேண்டும் என கடந்த பதினாறாம் திகதி இவ வியக்கம் காலக்கெடு விதித்திருந்தது.

நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் துருப்புக கள் வாபஸ்பெறப்படாவிட்டால் பாரிய விளை வுகளை எல் சல்வடோர் சந்திக்க நேரிடும்.

அத்தோடு, அந்நாட்டு அரசே இதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் - என்று இந்த அமைப்பின் மிரட்டல் செய்தியில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலி உட்பட அமெரிக்க நேச நாடுகளை மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அ[illegible]த் திருந்த இந்த இயக்கம் தற்போது தனது தாக் குதல் பட்டியலில் தென் அமெரிக்க நாடான எல் சல்வடோரைச் சேர்த்துக்கொண்டுள்ளது.

அல்-கெய்டா தீவிரவாத அமைப்பினரின் தாக்குதல் எச்சரிக்கை விடுக்கப்பட்ட முதலா வது தென் அமெரிக்க நாடு எல் சல்வடோரே.

இத்தாக்குதல் எச்சரிக்கை குறித்து எந்தத் தகவலையும் இச் செய்தி எழுதும் வரை எல சல்வடோர் அரசோ, இராணுவத் தரப்போ தெரி விக்கவில்லை. (க-8)

# 37 ஆயிரம் செச்சினியர், ரஷ்யர்கள் மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சம்

குரோஸ்னி,ஓக.24

செச்சினிய பிரஜைகள் அதிகமாக ரஷ் யர்களோடு சேர்ந்து கடந்த பன்னிரண்டு மாதங்களில் 37 ஆயிரம் பேர் மேற்கு நாடுகளில் அரசியல் தஞ்சமடைந்துள்ளனர்.

- இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபை அண்மை யில் விடுத்துள்ள அறிக்கையல் கூறியுள்ளது.

இவர்கள் அனைவரும் பொருளாதாரக் கார ணிகளின் அடிப்படையிலேயே நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள் என்ற ரஷ்ய அதிகாரி களின் கூற்றை செச்சினிய மக்கள் நிராகரித் துள்ளனர்.

இதுகுறித்து செச்சினிய மக்கள் கருத்துத் தெரிவிக்கையில் - வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, செச்சினி யாவில் தங்கியிருப்பதில் ஏற்பட்டுள்ள அச்சம் என்பன காரணமாகவே தாங்கள் மேற்கு நாடு களில் அரசியல் தஞ்சம் கோருகிறார்கள் - என றனர்.

செச்சினியாவில் தினமும் இடம்பெறும் மோதல்களில் கிளர்ச்சியாளர்கள், இராணு வத்தினர், பொலீஸார் மற்றும் பொதுமக்கள் ஆகி யோர் அதிக எண்ணிக்கையில் உயிரிழந்துள் ளனர்.

செச்சினியா ரஷ்யாவின் ஒரு பகுதியாகத் தற்போதுள்ளது. தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து செச்சினியா ரஷ்யாவுடன் போரிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (க-8)

# ரயில் மற்றும் பஸ்கள் எரிக்கப்பட்டதால் பங்களாதேஷில் இயல்பு நிலை பாதிப்பு

டாக்கா,ஓக.24

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் அவாமி லீக் கட்சியின் பொதுக்கூட்டமொன் றில் சரமாரியாக கைக்குண்டுகள் வீசப்பட்டு பலர் இறந்தனர். இதனையடுத்து, நகரின் பல் வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் வன்முறைக ளாக வெடித்தன. வாகனங்களை கட்சியின் ஆதரவாளர்கள் எரித்தனர். இதனால், இயல்பு நிலை பாதிப்படைந்தது.

ரயில் ஒன்றையும் அந்த ரயில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையத்தையும் எரித்து முற்றாகச் சேதப்படுத்தியுள்ளனர்.

இதனால், தலைநகரிலிருந்து இரண்டாவது பெரிய நகரான சிட்டா கொங்கிற்கும் இடையி லான ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இந்தக் குண்டுவெடிப்புத் தொடர்பாக விசா ரணை செய்ய நாட்டின் சிரேஷ்ட நீதிப[illegible]ஒரு வரின் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப் பட்டிருப்பதாக அரசு தெரிவித்திருக்கிறது.(க-8)

## மசகு எண்ணெயின் விலையில் வீழ்ச்சி!

வாஷிங்ரன்,ஓக.24

மசகு எண்ணெயின் விலை திடீரென 50 அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்தன. இந்த விலை நேற்று வீழ்ச்சிகண்டது.

ஈராக்கில் நடைபெறும் யுத்தம் உக்கிரமடைந தலைத் தொடர்ந்து ஒரு பீப்பா மசகு எண்ணெ யின் விலை 50 அமெரிக்க டொலராக உயர்வ டைந்தது. இந்த விலை தற்போது 46.87 டொலர் களாக வீழ்ச்சிகண்டுள்ளன.

மசகு எண்ணெயின் அதிகரிப்பால் இலங்கை உட்பட உலக நாடுகள் அனைத்திலும் பெற்றோ லிய வகைகளின் விலைகள் உயர்வடைந் துள்ளன.

இந்த விலை உயர்வு பல நாடுகளில் அர சியல் ஸ்திரத்தன்மையை ஆட்டங்காணச் செய துள்ளது. கடந்த 21 ஆண்டுகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆகக்கூடிய விலை 50 அமெரிக்க டொலர்களாகும். (க-8)

# கொள்ளைபோன சித்திரங்கள் நோர்வேயில் உடன் மீட்கப்பட்டன

ஒஸ்லோ,ஒக24

நோர்வேத் தலைநகரிலுள்ள 'முன்ச்' நூத னசாலை ஒன்றில் காட்சிக்கு வைக்கப்பட்டி ருந்த எட்வட் முன்ச் என்பவரால் வரையப்பட்ட விலைமதிக்கப்பட முடியாத சித்திரமும் அத னோடு 1893-94 காலப்பகுதியில் வரையப் பட்ட மடோன்னா என்ற சித்திரத்தையும் திடீ ரென அங்கு புகுந்த மூன்று ஆயுததாரிகள் கொள்ளையடித்துச் சென்றனர்.

"அச்சத்தால் அலறும்" என்ற கருப் பொருளை மையமாக வைத்து வரையப்பட்ட சித்திரமே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது. சித் திரத்தின் பின் துண்டுகள் நூதனசாலையின வெளிப்பகுதியில் உள்ள புல்வெளிகளில் கிடந் தன.

நோர்வேயின் எல்லைப் பகுதியில் இந்தச் சித்திரத்தைக் கடத்திச் சென்றவர்கள் பயன் படுத்திய காரும், இன்னொரு வாகனமும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இந்தச் சித்திரத்தை வெளிநாடு ஒன்றிற்கு கடத்திச் சென்றிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

சந்தேக நபர்களைத் தேடி பொலீஸார் வலை விரித்துள்ளனர். இதேபோல், பத்து வருடங்க ளுக்கு முன்னரும் இதேமாதிரியான கடத்தல் சம்பவமொன்று இடம்பெற்றது.

இச்சித்திரத்தை திருப்பியளிக்க கடத்திய வர்கள் பணயத்தொகை தரவேண்டும் என நிபந்தனை விதித்திருந்தனர்.

ஆனால், அந்த முயற்சி தோல்வியில் முடி வுற்றது. பொலீஸார் அவர்களை முற்றுகை யிட்டு சித்திரத்தைக் கைப்பற்றினர். (க-8)

# சோமாலியாவின் இடைக்கால அரசு கென்யத் தலைநகரில் பதவியேற்பு

மொகாடிசு,ஓக.24

ஆபிரிக்க நாடான சோமாலியாவில் ஒரு ஸ்திரமான அரசு இன்மையால் அந்நாட்டில் இடைக்கால அரசு ஒன்று நேற்று முன்தினம் கென்யத் தலைநகர் நைரோபியில் பதவியேற் றது.

ஐக்கி[illegible] நாடுகள் சபையின் ஏற்பாட்டில் இந்த அரசு ஏற்ப[illegible]த்தப்பட்டுள்ளது. சோமாலியாவில் தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் உள்நாட்டுப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டே இந்த அரசு உருவாக்கப்பட் டுள்ளது.

இந்த அரசில் 200பேர் பதவியேற்றனர். ஓர் இடைக்கால நாடாளுமன்றமாக இவர்கள் இயங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13வருட காலமாக சோமாலியாவில் உள் நாட்டுப் பிரச்சினைகள் முடிவுக்கு வராமல் தொடர் கின்றன. இந்த இடைக்கால அரசு இப் பிரச் சினைகளை முடிவுக்குக் கொண்டுவரும் என்று அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

இந்தப் பதவியேற்பு நிகழ்வுகள் சோமாலி யத் தலைநகர் மொகடிசுவில் இடம்பெற வில்லை. மாறாக கென்யத் தலைநகர் நைரோ பியில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.(க-8)

## முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்புகள் எதிர்வரும் 01.09.2004 முதல் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மானிப்பாய் மற்றும் நெல்லியடி ஆகிய இடங்களில் ஆரம்பமாகின்றன.

SAAMSTECH இன் சகல தொடர்பாடலுக்கும்
SAAMSTECH யாழ் தலைமையகம்,
841, ஆஸ்பத்திரி வீதி
(ஆஸ்பத்திரி வீதி -கோயில் வீதிச் சந்தி),
யாழ்ப்பாணம்
SAAMSTECH கொழும்புத் தலைமையகம்
22-1/4, காலி வீதி, தெகிவளை.

(C/37204)(35-13-16-32)

# செயற்றிட்டக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.24

குடும்ப புனர்வாழ்வு நிலையம், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்துடன் (UNICEF) இணைந்து நடத்தும் "மிதிவெடியினால் பாதிப்புற்றோருக்கான சமூகப் புனர்வாழ்வு" செயற்றிட்டத்தின் கீழ் உள சமூக செயற்குழு (வலைப்பின்னல்) விற்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் பவிக்னேஸ்வரன் தலைமையில், யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறுகின்றது. அழைக்கப்பட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் சமுகம் கொடுக்கும்படி கேட கப்படுகின்றனர். (3)


## புதிய பிரிவுகள் ஆரம்பம்

கொழும்பில் பிரபல ஆசிரியையான செல்வி R.சோபா அவர்களால் நடத்தப்படும் பின்வரும் வகுப்புகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

- ★ Cake Icing /Decorating
  - I.Wedding Structures
  - II.Nozzels Flowers
  - III.Wilton Sugar Flowers.
- ★ Bridle Makeup (Hair style, Eyebrow Shape, Nature facial, Normal facial
- ★ Costume Jewellery
- ★ Pot Painting
- ★ Saree Painting

குறிப்பு:-

☛ Wedding Stractures/ Cakes, Bridle makeup இவற்றிற்கான ஓடர்களுக்கு முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

☛ உங்கள் வசதிக்கேற்ற நேரங்களில் பிரத்தியேக வகுப்புகளும் நடத்தப்படும்.

இடம்: 156, கோவில் வீதி நல்லூர் (Green Park அருகில்)

திகதி- 25.08.2004 (புதன்), 26.08.2004

நேரம் - காலை 10.00, மாலை 5.00

மேலதிக விவரங்களுக்கு:

R.சோபி 0776569645 0114817245

(35602)(35)


## திருட்டு

யாழ் கொட்டடி கிராம அலுவலர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை நேற்றுமுன்தினம் இரவு யாழ். ஸ்ரான்லி வீதிச் சந்தியில் நிறுத்திவிட்டுத் திரும்பி வந்து பார்த்தபோது அது காணாமற்போயிருந்தது.

# விசர்நோய்த் தடுப்பூசி

வலி.தெற்கு,ஓக.24

சுன்னாகம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பகுதி இரண்டுக்கான பிரதேசத்தில் இன்றும், நாளையும் நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. தடுப்பூசி ஏற்றப்படும் காலமும் இடங்களும் வருமாறு:-

இன்று காலை 9.00 மணி - உடுவில் ஸ்ரீலங்கா சனசமூக நிலையம், பகல் 11.00 மணி - உடுவில் இந்து இளைஞர் மன்ற மண்டபம்.

நாளை காலை 9.00 மணி - சுன்னாகம் ஐயன்னா ச.ச.நிலையம், காலை10.30 மணி- கந்தரோடை ஸ்ரீ சிவசுப்பிரமணிய ச.ச. நிலையம், பகல் 12.00 மணி கந்தரோடை மேற்கு ஞானவைரவர் ச.ச. நிலையம். (ஓ-152)

## கண்ணீர் காணிக்கைகள்

எமது சக நண்பன்

சு.சுபராஜ் (சுபா)

அவர்களின் அன்புத் தகப்பனார்



### கா.சுப்பிரமணியம்

(துரை மதுபானசாலை, சாவகச்சேரி)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி. T.P.. 077 6503137

99 ஆவது வருட கலைப்பிரிவு மாணவர்கள்

(35597)(33-12-15)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடும் இல. 38, கில்னர் லேன், கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த பாபு - கமலி தம்பதியினரின் செல்வப் புதல்வி

### செல்வி ஹர்ணிகா

அவர்களைப் பல்கலையும் பெற்று சிறப்புற வாழ்த்துகின்றோம்.

பூநாறிமர லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

திரு.திருமதி சிவராஜா-உமாதேவி.
திரு.திருமதி சுபாஸன்-செல்வி.
ராஜேஸ்கண்ணா. மனோகரன், தர்சிகா.

(35653)(33-12-15)


## சுத்திகரிப்பு சேவையும் கழிவகற்றும் சேவையும்

உங்கள் தொழில் நிலையங்கள், அலுவலகங்கள், பொதுப்பாவனைக்குரிய கட்டடங்கள், பாடசாலைகள் மற்றும் தனியார் கட்டடங்கள், வீடுகள் என்பவற்றை அனுபவம்வாய்ந்த பயிற்சிபெற்ற தொழிலாளர் மூலமாகச் சிறந்த முறையில் சுத்திகரித்துப் பராமரிப்பதற்கும் மற்றும் மலசலகூடக் குழிகள், கழிவு நீர்த் தொட்டிகளில் உள்ள கழிவுகளை இயந்திரம் மூலம் சுகாதார முறைப்படி அள்ளி அகற்றுவதற்கும் உடன் தொடர்புகொள்ளுங்கள்.

☛ விஞ்ஞான முறைப்படி மலசலகூடங்கள் மற்றும் கழிவு நீர்த் தொட்டிகள் அமைப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும்.

கிளீன் வெல்,
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே:222 2849. (35647)(35-33-12-15)


## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| பரிசுகள் | இல. |
|---|---|
| 1ஆம் பரிசு | 06147 |
| 2ஆம் பரிசு | 00465 |
| 3ஆம் பரிசு | 09910 |

ஆறுதல் பரிசுகள்

| | |
|---|---|
| 08765 | 01200 |
| 02484 | 01095 |
| 00015 | 02948 |
| 01092 | 09822 |
| 02869 | 00340 |

மேற்படி அதிர்ஷ்டசாலிகள் 05. 08. 2004ஆம் திகதிக்கு முன்னர் எமது மாணவர் ஒன்றியத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம், யாழ். பல்கலைக்கழகம்.

(35645)(33-12-15)


## முகாமையாளர் தேவை

எமது கல்லுடைக்கும் ஆலையை மேற்பார்வை செய்து நிர்வகிக்க முகாமையாளர் ஒருவர் தேவை. சாவகச்சேரிக்கு அண்மையில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

அனுபவமும் தகுதியுமுடையோர் உடனே நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:

தனு கல்லுடைக்கும் ஆலை
(ஐயருடைய கிறஷர்)
பருத்தித்துறை வீதி, கிராம்புவில், சாவகச்சேரி.

(35648)(33-12-15)

லக்சுமி இணுவில்



அர்ஜுன், அபிராமி, பிரகாஸ்ராஜ் நடித்த

வானவில்

காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

(35599)(29)

ராஜா யாழ்ப்பாணம்.



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

கமலஹாசன், பிரபு, சிநேகா நடித்த

வசூல்ராஜா M.B.B.S

புதியநேரம்: 10.30,2.30, 6.30, 9.30

ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்மஸ் சுன்னாகம்



அர்ஜுன், மீனா, சுவாதி நடிப்பில்

அன்பு சகோதரன்

காட்சிநேரம்: 11.00, 3.00, 7.00

25 முதல் திகில் காட்சிகள் நிறைந்த ஷிஜைஸ்

(C/36415) (12)

நிரஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்

சிவாஜி, ரஜனி, சௌந்தர்யா நடித்த

படையப்பா



தினசரி: 11.00, 2.45, 6.00 பு.நே

வெள்ளி, சனி, ஞாயிறு STRIKE FORCE (இரவு 8.45பு.நே)


# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு சுப்பிரமணியம்

(உரிமையாளர், துரை மதுபானசாலை, சாவகச்சேரி)



கிராம்புவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் கல்லூரி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சுப்பிரமணியம் 21.08.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் கனகம்மா, காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் அன்பு மருமகனும் கிருஸ்ணசாமி, நடராசா, காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், வள்ளிப்பிள்ளை, தர்மலிங்கம் ஆகியோரது அன்புச் சகோதரரும் உமாகேசினி (நியூஸிலாந்து), உமாலோகேசன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), ஜெயரூபன், சுபராஜ், துரைதாசன், உமாஜோதினி (2004, வர்த்தகப் பிரிவு, சாவகச்சேரி இந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஜோதீஸ்வரனின் (நியூஸிலாந்து) அன்பு மாமனாரும் காசிநாத் (நியூஸிலாந்து), வசிநாத் (நியூஸிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (25.08.2004) புதன் கிழமை முற்பகல் 11மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கல்லூரி ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. தொ. பே. :077 3039596. (35651)(33-12-15)

தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி ஜெயபாலன் கனகேஸ்வரி (செஞ்சி)

கொழும்புத்துறை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயபாலன் கனகேஸ்வரி நேற்று (23.08.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை நாகம்மாவின் அன்பு மகளும் துரேசன், யோகசுகிர்தன், சுபாஷினி ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரியாவின் மாமியாரும் ஷானுஜன், சஞ்சயன் ஆகியோரின் பேர்த்தியும் புவனேஸ்வரி, அமரர் குணசிங்கம், குணரத்தினம், நாகரத்தினம், அமரர் பாக்கியலட்சுமி, பாலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2004) செவ்வாய்க் கிழமை பி.ப. 2மணிக்கு (பு.நே) அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல.22,4ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை. (35654)(12-15-33)

தகவல்: பிள்ளைகள்.

## சின்னத்தம்பி சிற்றம்பலம்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் கரவெட்டி தபால் ஊழியர் சின்னத்தம்பி சிற்றம்பலம் நேற்று (23.08.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி லட்சுமிப்பிள்ளையின் அன்பு மகனும் பத்தினியின் பாசமிகு கணவரும் ஜெயசிங்கத்தின் பாசமிகு தந்தையும் செல்வமலரின் மாமனாரும் நிருசன் (கனடா), நிலானி, நிசான் ஆகியோரின் பேரனும் வள்ளியம்மை, கந்தசாமி, நடராசா, பார்வதி, நல்லதம்பி, வீரசிங்கம், பொன்னம்பலம் (உபாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.08.2004) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடுங்கேணி, கரவெட்டி கிழக்கு. (சி.37208)(40-12-15-33)

தகவல்: சி.ஜெயசிங்கம் (மகன்)

## சின்னையா கந்தவனம் (மறியல்)

சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தவனம் நேற்று (23.08.2004) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா சிவகாமியின் மகனும் ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளையின் மருமகனும் தங்கமுத்துவின் அன்புக் கணவரும் பத்தினியின் அன்புச் சகோதரனும் சின்னம்மாவின் மைத்துனரும் வசந்தாதேவி, கமலாதேவி, வசந்தகுமாரி, சூரியகுமாரன் (செயலாளர்-யாழ்.மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கச் சம்மேளனம், வடமராட்சி வடக்கு க.தொ.கூ.ச.சமாசம்), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் நடராசா, முத்துலிங்கம், சிவபாலசிங்கம் (கிராமசேவகர், வல்வெட்டித்துறை), சித்திரா, இராசரத்தினம் ஆகியோரின் மாமனாரும் மாலினி - புலேந்திரன், மங்கையற்கரசி, பிறேமினா, சோதிரவி-சியாமளா காலஞ்சென்ற கமலரவி மற்றும் ஜெயா, கமலரதி-யோகேந்திரன் (அரசியல்துறை-யாழ். மாவட்டம்) யோகநாதன் - செல்வராணி, குணநாதன், கமலரஞ்சினி-ஜீவன், புஸ்பநாதன், சுமதி-சோமசுந்தரம் (நகரசபை-வல்வெட்டித்துறை) சுயம்பமூர்த்தி (லண்டன்), விஜயகுமாரி, மாவீரர் நிலவன் (வேலவமூர்த்தி), சரவணன், விஜயலலிதா, ராஜலக்ஷமி,ராதிகா பாலச்சந்திரன், மணிமாறன், தாட்சாயினி, கலையமுதன், சத்தியசாயினி, அன்பழகன், கலையரசி, தமிழமுதன், தமிழரசி, எழிலமுதன், கங்கைமைந்தன், சிவகங்கை ஆகியோரின் பேரனும் பரதன், லட்சுமணன், இராமச்சந்திரன், பவித்திரா, சத்துருக்கன், நிரோஜன், நிதர்சனா, நிதர்சன், விஸ்னுவர்த்தன், திவ்வியா, செல்வகுமரன், மயூரி, ரதிபாலா, பேரின்பம், எழிலரசன், தர்மிகா, மிதிலா, பிரதீபா, பவதாரணி, விஸ்வரூபன், நிருபன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(C37207)(35)

தகவல்: எஸ். எஸ். மூர்த்தி (லண்டன்).

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத்தின் கௌரவ செயலாளர் திரு.க.சூரியகுமாரன் அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னையா கந்தவனம் அவர்கள்

இயற்கை எய்திய செய்தியறிந்து மிகவும் கவலையடைகின்றோம். அன்னாரின் ஆன்மா இறைவன் திருவடியில் நிலைத்திருக்க வேண்டுவதுடன், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

தலைவர், இயக்குநர்கள், ஊழியர்கள், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனம் (வ/து). யாழ்ப்பாணம்.

(35650)(33-12-15)

## துயர் பகிர்கின்றோம்

விடுதலைப் புலிகளின் வடமராட்சி கிழக்கு பிரதேச க்டற்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் தீபன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி தவபாலசிங்கம் ஜெகதீஸ்வரி

அவர்கள் (தற்காலிக முகவரி - சுன்னாகம்)

22.08.2004 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். ஆறாத்துயரில் மூழ்கி இருக்கும் அன்னாரின் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்களுடன் நாமும் இணைந்து துயர்கொள்கின்றோம்.

பொது அமைப்புக்கள், வடமராட்சி கிழக்கு.

(C/37205)(33-12-15)

# தீர்க்கமான முடிவை எடுக்குமாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டை அந்த அரசின் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வெளியிட்டபோது தெரிவித்த கருத்துக்களையும் விலாவாரியாக விவரித்தது.

"அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினருமே தங்கள் யோசனைகளை முன்வைத்துள்ளனர். எனினும், இணக்கம் ஏதும் ஏற்படவில்லை. இரண்டு தரப்புகளினதும் நிலைப்பாடுகளில் பாரிய வித்தியாசம் இருப்பது தெளிவாகப் புலப்பட்டாலும், இருதரப்பு யோசனைகளிலும் உள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பேசுவதன் மூலம், முன்னேறுவதற்கான வழிவகை உள்ளது என்று அரச நம்புகின்றது." - இவ்வாறு ஜி.எல்.பீரிஸ் அப்போது கூறியிருந்ததை அந்த அறிக்கை நினைவுபடுத்தியது.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை குறித்து அதைப் புலிகள் அரசுக்குச் சமர்ப்பித்து நான்கு நாள்கள் கழித்து, ஸ்ரீல.சு.க. தனது நிலைப்பாட்டை உத்தியோக பூர்வமாக வெளியிட்டது.

"புலிகளின் இந்த யோசனை தனியான, இறைமையுள்ள பிறிதொரு அரசுக்கு சட்டரீதியான அடிக்கல்" என்று சு.க. அப்போது தெரிவித்திருந்தது.

அக்கட்சியின் செயலாளர் நாயகத்தின் ஒப்பந்தத்துடன் இவ்வாறு இந்த யோசனையை நிராகரிக்கும் உத்தியோகபூர்வ நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டது. ஆனால், அது கட்சித் தலைவியான ஜனாதிபதியின் நிலைப்பாடாகத் தோற்றவில்லை என்று ஐ.தே.கட்சி தனது தற போதைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

தனது கட்சியின் உத்தியோக பூர்வ நிலைப்பாட்டுக்கு முற்றிலும் மாறான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் - புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார யோசனையின் அடிப்படையில் புலிகளுடன் பேசத் தாம் தயார் என்று திரும்பத் திரும்ப ஜனாதிபதி கூறிவருகின்றார்.

ஆனாலும், இந்த யோசனையின் அடிப்படையில் மட்டும்தான் அவர் புலிகளுடன் பேச விரும்புகின்றாரா? அல்லது வேறு விடயங்களுடன் சேர்த்து இதனையும் பேச விரும்புகிறாரா? - என்பதில் ஜனாதிபதி தெளிவானதொரு நிலைப்பாட்டில் இல்லை என்று குறிப்பிடும் ஐ.தே.கட்சி அறிக்கை, இதுவிடயத்தில் நாளொரு கருத்தும பொழுதொரு பேச்சுமாக அவர் கதை விடுகின்றார் என்றும் குற்றம் சுமத்துகின்றது.

ஆனாலும், ஜனாதிபதிக்கும், அவரது கட்சிக்கு மாறாக அவரது அரசின் கூட்டமைப்பு பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையை முழுமூச்சாக எதிர்ப்பதில் ஒரே நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றது என்றும் ஐ.தே. கட்சியின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

ஐ.தே.கட்சியைப் பொறுத்தவரை இனப்பிரச்சினையை ஒரு தேசிய விடயமாக அது கருதுகின்றது. நேர்மையான சமாதான நடவடிக்கைகளை எந்தவித நிபந்தனையோ, கட்டுப்பாடோ இன்றி ஆதரிப்பது என்பது எமது கட்சியினதும், தலைவரினதும் மாறாத நிலைப்பாடாகும்.

இதற்காக, எந்தவகை கலந்தாலோசனைகளுக்கும் நாம் தயாராகவே உள்ளோம்.

எனினும், இதற்கும் - சாத்தியப்பாடான, அர்த்தமுள்ள பங்களிப்பை நாம் செய்வதற்கும் - இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக அரசின் - குறிப்பாகக் குறைந்தது அது தொடர்பான அடிப்படை - நிலைப்பாடாவது எமக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும்.

எனவே, அரசு தனது கூட்டமைப்புக் கட்சிகளுடன் ஆலோசித்து - தீர்க்கமான - திட்டவட்டமான - ஒரே குரலில் பேசுகின்ற - ஒரு முடிவுக்கு வந்து அதனை வெளிப்படையாகத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் ஐ.தே.கட்சி அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

இந்த நாடாளுமன்றத்தில் தனிப்பெரும் கட்சி என்ற முறையில், நாட்டின் தேசியப் பிரச்சினையான இவ்விவகாரத்தில் வெறுமனே பங்கு பற்றாமல் முழு மூச்சுடன் பங்களிக்க எமது கட்சி மிகுந்த ஆவலாகவுள்ளது. ஆனால், நாட்டை சரியான பாதையில் வழி நடத்தும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ள அரசு, இந்த விடயத்தில் தனது கடமையையும் பொறுப்பையும் எதிர்கொள்ளாமல் தவிர்க்கும் பர்தையில் பயணிப்பதை விடுத்து சரியான - நேர்மையான திசையில் பயணிக்க முன்வந்தாலேயே இது சாத்தியமாகும். - என்றும் ஐ.தே.கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. (க)

# போராளிகள் பாவா,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணிந்து மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரை மேற்படி தாக்குதலை நடத்திய மூவரும் வழிமறித்து அவரது அடையாளத்தைக் கோரியிருந்தனர். தங்களுக்குத் தேவைப்படுபவர் அவர் அல்லர் என்று தெரிநததும் அவரைத் தொடர்ந்து செல்ல அனுமதித்துள்ளனர்.

அதன் பின்னர் வந்த புலி உறுப்பினர்களை 15 மீற்றர் தொலைவிலிருந்து கிளைமோரை இயக்கி அவர்கள் தாக்கியுள்ளனர்.

இரண்டு இராணுவ நிலைகளுக்கு மிக அருகிலிருந்து மூவர் இத்தாக்குதலை நடத்தியிருப்பதை இத்தாக்குதலில் தப்பிய மற்றைய போராளியான குயிலின்பன் கண்டிருக்கின்றார்.

அவரது சாட்சியத்தின்படியும், ஏனைய தகவல் களின்படியும் இராணுவத்தடை நிலைகளில் புலிகள் பெயர் பதிந்ததைப் பயன்படுத்தி, அவர்களின் அடையாளத்தினையும், அவர்களின் வருகை பற்றிய தகவலையும் இராணுவத்தினரே தாக்குதல் நபர்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி உறுதியாகியுள்ளது.

இரண்டு இராணுவ நிலைகளுக்குப் பக்கத்தில் இந்தக் கிளைமோர்க் குண்டுகளைப் பொருத்துவதற்கு இராணுவம் அனுமதித்துள்ளது. அவர்கள் தாக்குதலுக்குக் காத்திருக்கவும், அவ்வழியே சென்ற வேறு நபர்களின் அடையாளத்தைச் சோதிக்கவும், புலிகளின் போராளிகள் செல்லும் சரியான தருணத்தில் தாக்குதல் நடத்தவும் இராணுவம் அனுமதித்துள்ளது.

- இவ்வாறு பிழையான முறையில் இலங்கை இராணுவம் செயற்பட்டுள்ளது.

இப்படி இராணுவம் நடந்துகொள்வது இது முதல் தடவையல்ல. இத்தகைய போக்கால் யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு இலங்கை இராணுவம் பெருங்கேடு விளைவித்துவருகின்றது.

ஏனைய ஆயுதக் குழுக்கள் செயற்படுவதற்கு இடமளித்து வாய்ப்பு, வழி வழங்குவதன் மூலம் யுத்தநிறுத்த உடன்பாட்டின் 1.8 ஷரத்தை இலங்கை இராணுவம் தொடர்ந்து மீறி வருகின்றது.

நாங்கள் ஏற்கனவே கலந்துரையாடலில் சுட் டிக்காட்டியது போன்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினரே இவ்வாறு பல்வேறு குழுக்களுடன் இணைந்து இத்தகைய அழிவு வேலைகளைச் செய்துவருகின்றனர்.

வாகரைக் கொலைகள் மற்றும் அதேபோன்ற பலவேறு கொலைகளுக்கு இலங்கை இராணுவமும், அதன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருமே காரணம் என நாம் நம்புகின்றோம்.

இது தொடர்பாக இலங்கை அரசுடன் தொடர்புகொண்டு ஆவன செய்யும்படி வேண்டுகின்றோம்.

இப்படி அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்க தெரிவித்தார்.

நேற்று வன்னி இராணுவத் தலைமையகத்துக்குச் சென்ற அவர் வன்னி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரிய உள்ளிட்ட குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடினார். இதன் பின்னர் இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் பொலீஸாரின் முன்னிலையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உரையாற்றினார். அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (க)

## இராணு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரின் முழங்காலுக்குக் கீழே இரண்டு துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்துள்ளன எனத்தெரிவிக்கப்பட்டது. வாழைச்சேனைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## புறஹொரவ்டே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசுவார். (க)

# பயங்கரவாதத் தடுப்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கினார். அதன்பின் அந்தச் சந்தேக நபரை விமானத்தில் சப் இன்ஸ்பெக்டர் விஜயரத்தின தலைமையிலான பொலீஸ் குழு வல்வெட்டித்துறைக்கு அழைத்துச் சென்றது. சந்தேகநபர் அடையாளம் காட்டியதன் அடிப்படையில் எதிரியை அவரது வீட்டில் வைத்துபொலீஸ் குழு கைது செய்தது. அவரது வீட்டில் வைத்து அவரிடம் சப்இன்ஸ்பெக்டரால் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது.

எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில், அவரது வீட்டுக்கு அருகில் உள்ள குடிமனையற்ற பழைய கோழிக்கூடு இருந்த இடத்தை - எதிரி காட்டிய இடத்தை - பொலீஸார் தோண்டினர். அங்கிருந்து தற்கொலை அங்கி ஒன்று மீட்கப்பட்டது. அதன்பின் எதிரியைக் கொழும்புக்கு அழைத்துச் சென்று 4ஆவது மாடியில் தடுத்துவைத்தோம். அப்போது உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் அவரிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றார். அதன்பின் நீதிமன்ற உத்தரவின் பேரில் களுத்துறைச் சிறைச்சாலையில் அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் - என்று தெரிவித்தது.

எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

எதிரியைக் கைதுசெய்த சமயம் அவர் தனது வீட்டில் வைத்து வாக்குமூலம் எதனையும் வழங்கவில்லை. கொழும்பில் வைத்து அவரிடம் வாக்குமூலம் பெறப்பட முன்னரே அங்கி பொலீஸாரால மீட்கப்பட்டுள்ளது. யாரும் குடியிருக்காத ஒரு வெறுங்காணியில் இருந்தே அங்கி மீட்கப்பட்டுள்ளது. ஆகவே அது அவர்வசம் இருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறமுடியாது. அடுத்த வளவில் ஏதோ புதைக்கப்பட்டது என்று அவர் கூறியிருக்கலாம் - என்று தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்டபின் நீதிபதி ராஜபக்ஷ தனது தீர்ப்பை நேற்று வழங்கினார்.

"விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரால் தம்மிடம் தரப்பட்டு தான் புதைத்ததை எதிரி தமது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒப்புக் கொண்டுள்ளார். அங்கி புதைத்த இடத்தையும் அவர் காட்டியுள்ளார். ஆகவே, அவர் குற்றவாளி என நீதிமன்றம் ஏற்றுக்கொள்கின்றது" என்று குறிப்பிட்ட நீதிபதி எதிரிக்கு 20 வருட சிறைத் தண்டனை விதிப்பதாக அறிவித்தார்.

எதிரி சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி ஜெயதேவி இராயப்பு, எதிரியின் வயது, குடும்பப் பொறுப்பு, நீண்டகாலம் நீதிமன்றில் தடுத்து வைத்தமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு குறைந்தபட்சத் தீர்ப்பை வழங்கு மாறு நீதிபதியிடம் விண்ணப்பித்தார்.

இந்த விண்ணப்பத்தை ஏற்று சிறைத்தண்டனையை 15 வருடங்களுக்குக் குறைத்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜெயதேவி இராயப்புவின் அனுசரணையுடன் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தாவும், அரசுத்தரப்பில் சட்டத்தரணி ஏ.எச்.நவாவியும் ஆஜராகியிருந்தனர்.

இத்தீர்ப்புத் தொடர்பாக மேன்முறையீடு செய்ய ஏற்பாடு செய்வதாக எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (ஒ-3)

# மரண அறிவித்தல்கள்

## சின்னக்குட்டி ஐயாத்துரை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி ஐயாத்துரை காலமானார்.

அன்னார் ஓட்டுமடத்தைச் சேர்ந்த சின்னக்குட்டி - யோகம் ஆகியோரின் அன்பு மகனும் கௌரிநாயகியின் கணவரும் நளாயினி (கொலண்ட்), சசிகுமார், சுதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.08.2004) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நல்லடக்கத்துக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*612,K.K.S. வீதி,*
*நாச்சிமார்கோவிலடி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சி.இரத்தினம்
(மைத்துனர்)

(35656(40-16-13)

## வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு

இரும்பு•மதவடி, வதிரியை வசிப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (23.08.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதியினரின் புதல்வனும் திருமதி தனலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணேசகுமாரன், கிருஷ்ணகுமாரன், சச்சிதானந்தகுமாரன் (கனடா), குகக்குமாரன் (ஈழக்குமரன் உணவக உரிமையாளர் - முறிகண்டி), மனோ (கனடா), சிவலட்சுமி (கனடா), மகாலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் க.உமா (இந்தியா), மைனா (கனடா), ச.உமா (கனடா), ராதா (கனடா), நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*இரும்பு மதவடி,*
*வதிரி, கரவெட்டி.*

தகவல்:
தி.குகக்குமாரன்
(குகன்).

(சி/37209)(40-13-16)

## செல்லையா தியாகராஜா

**(இளைப்பாறிய உதவி ஆணையாளர், மதுவரித் திணைக்களம்)**

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் கச்சேரி கிழக்கு, சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா தியாகராஜா அவர்கள் நேற்று (23.08.2004) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் சீதாதேவியின் அன்புக் கணவரும் துவஸ்ரா, துஷ்யந்தன் (கனடா), வாசுகி (கனடா), அசோகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சபாரத்தினம், காலஞ்சென்ற சிந்தாமணி - வேலாயுதபிள்ளை, சோமாஸ்கந்தன் (கனடா), தனபாலன், காலஞ்சென்ற குஞ்சிதபாதம் மற்றும் தில்லைநடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஞானசேகரம், சுவேந்திரா (கனடா), கௌரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2004) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 4 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*116, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
செ.சோமாஸ்கந்தன்
(சகோதரன்)

(35655)(4016-13)


1000/=

மட்டும் அறவிடப்படும்

(பரவலாக அறிமுகப்படுத்தும் நோக்கத்திற்காக)

**Accounting Software**

Suitable for All Kind of Businesses
Ledgers, Trial Balance, Profit & Loss
Account & Balance Sheet ஐ
உள்ளடக்கிய இலகுவாகக் கையாளக்கூடிய
நவீன இலவச கணனி மென்பொருள்

* Accounting Package is Absolutely Free
* Rs. 1000 /= will be Charged for Visiting & Installation
* Offer will be invalid After 30th of September

யாழ்ப்பாணத்தில் எமது தொடர்புகளுக்கு
Vimala Bhavanam, K V Lane, Valvettiturai
தொலைபேசித் தொடர்புகளுக்கு
TP :- 021-226-3547, 0777 705377

Cheap, Reliable and Quality Software only from
**ICEBERG** SOFTWARE CONSULTANTS
64/2, GALLE ROAD, DEHIWALA. TP 0777 705377



**நியூ சயன்ஸ் அக்கடமி**
**நெல்லியடி**

**A/L Day Class 2005**

யாழ்.மாவட்ட முதல்தர ஆசிரியர்
வடமராட்சியில்
பௌதிகம் - திரு.குகன்
செவ்.- புதன்- வியாழன்- 11.30-12.30
இரசாயனம் - திரு.அன்பழகன்
செவ்.- புதன்- வியாழன்- 10.30-11.30
இணைந்த கணிதம் - திரு.ரவீந்திரன்
சனி- ஞாயிறு- 8.15- 8.15, வெள்ளி- 3-6
ஆரம்பமாகி நடைபெறுகின்றது. (35640)(35-40-13-16)



தென்மராட்சியில்... **TVS மோட்டார் சைக்கிள்**
கம்பனியினரின் சேர்விஸ் முகவரான



**சதீஸ் மோட்டர் என்ஜினியர்ஸ்**
**ஸ்தாபனத்தார்**
வழங்கும் புதியதோர் சேவை அறிமுகம்!

நுணாவில், சாவகச்சேரியில் அமைந்துள்ள எமது ஸ்தாபனசேவை 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ்.சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறுகின்றது!

TVS மோட்டார்சைக்கிள் உரிமையாளர், வாடிக்கையாளர்கள் அனைவரும் இதில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இதுவரை கைதடியிலிருந்த எமது ஸ்தாபனம் தற்போது நுணாவில் சாவகச்சேரியில் இயங்குகிறது!

25.08.2004 புதனன்று T.V.S. கம்பனியினர் ஆரம்பித்து வைப்பார்கள்.

**சதீஸ் மோட்டார் என்ஜினியர்ஸ்**
கண்டி வீதி, சாவகச்சேரி.
0777727771
0776281419

(35644)(40-13-16)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.